

உமா பாலகுமாரின்
இன்ப நாளும்
இன்று தானே!
இன்ப நாளும் இன்று தானே
உமா பாலகுமார்
உமா பாலகுமாரின்
இன்ப நாளும்
இன்று தானே!

# திருச்சிராப்பள்ளி புத்தகக் கண்காட்சி: தில்லைநகர்

02.10.2010

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : இன்ப நாளும் இன்று தானே! |
| ஆசிரியர் | : உமா பாலகுமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஆகஸ்ட், 2009 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 200 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம்<br>107/8, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>போன்: 28351830 |

**விலை: ரூ.75.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்<br>சென்னை - 14. செல் : 98412 76209 |


ஆசிரியரின்
25-வது
நூல்

# இன்ப நாளும்
# இன்று தானே!

பணிவன்புடன்
சமர்ப்பணம்!

என் வாழ்வில் பல அற்புதங்களை

நிகழ்த்திய...

சதுரகிரி ஸ்ரீ சுந்தரமகாலிங்கம்
சுவாமியின்

பாதார விந்தங்களுக்கு...!

# இன்ப நாளும் இன்று தானே!



## 1

அந்த பனிக்கால விடியலில், வாசலில் இருந்த சரக் கொன்றை மரம்.... தென்றல் காதலனின் தீண்டலில் நாணிச் சிலிர்த்து வெட்கச் சிதறலாய் தன் மேல் ஜனித் திருந்த பனித்துளிகளை பூமியில் உதிர்த்துக் கொண் டிருந்தது.

வான்நதியில்... மேகச்சுழல்கள் ஆதவனின் வர வின்றி.. விரிந்து மெலிதாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன!

அந்த இனிய விடியலிலும்.. கான்கிரீட் வனமாய்த் தெரிந்தது... சென்னை நகரம்!

தன் ஃப்ளாட்டைப் பூட்டி விட்டு, ஸ்கூட்டியில் கிளம்பி அலுவலகம் சென்ற ப்ரத்யுஷா, அங்கு தனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருப்பதை அறியவில்லலை!

எப்போதும் போல், தன் ஐடெண்ட்டி கார்டை வாயில் கதவில் செருகி அந்த கம்ப்யூட்டர் நிறுவனத்தில் நுழைந்தபோதுதான், இன்று தங்களுடைய டீமில் புதிதாய் ஒரு மெம்பர் சேரப்போவது, நினைவிற்கு வந்தது.

அந்த நிறுவனத்தில் ஆறு மாதமாகத்தான் வேலை செய்கிறாள் ப்ரத்யுஷா!

இங்கு அவளும் சுகந்தியும் உசேனும் ஒரு ப்ராஜெக்டில் ஒன்றாக வேலை செய்கிறார்கள்.

அவர்களுடைய டீம் லீடர் குரு, நேற்றுதான் அவர்களுடன் இன்னொரு டீம் மெம்பரும் இன்று இணையப் போவதாகக் கூறியிருந்தான்.

நேற்றுதான் இண்டர்வியூ முடிந்து ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்திருப்பதாக, ஹெச் ஆரிலிருந்து தகவல் வந்ததாம்!

கடந்த ஆறு மாதமாக ஒன்றாகவே வேலை செய்தாலும், சுகந்தியிடமும் உசேனிடமும் சக ஊழியர்கள் என்ற நட்புடனே பழகி வந்தவளுக்கு, புது மெம்பர் எப்படியிருப்பாளோவென்ற சிறு எதிர்பார்ப்பு!

ஏனோ, உள்ளே சுகமாய் ஒரு உற்சாக ஊற்று மெலிதாகப் பரவுவதாய்!

அவள் தன் கேபினுக்குச் சென்றபோது, உசேன் மட்டும் வந்திருப்பது தெரிந்தது.

''ஹாய் ப்ரஷா! இன்னிக்கு நம்ம டீமிலே புது மெம்பர் ஒருத்தர் ஜாயின் பண்றாங்களாமே... அதுவும் பெண்ணாமே!''



சிறு முறுவலுடன் வரவேற்றான் அவன்.

''அதென்ன... அதுவும் பெண்ணாமே! பெண்கள்னா என்ன அவ்வளவு கேவலமா? உங்க அம்மா கூட ஒரு பெண்தான் சார்!''

''அய்யோ.. நான் அப்படி சொல்லலைம்மா தாயே! ஏற்கெனவே ரெண்டு பொண்ணுங்க... ஒருத்தி பகுத்தறிவு வாதி.. முற்போக்கு சிந்தனை உள்ளவ.. இன்னொருத்தி எப்பப் பாரு... மேக்கப், சினிமா ஊர் சுத்தறதுன்னு இருக்கறவ!

''ரெண்டு பேர் கிட்டயும் மாட்டிக்கிட்டு நானே ரொம்ப அவஸ்தைப்பட்டுட்டிருக்கேன்! இதுலே, மூணாவதா வாதும் ஒரு பொண்ணுன்னா எனக்கு எப்படி இருக்கும்?''

வேண்டுமென்றே குறும்புடன் கூறினான்.

''அப்படியா சார்! ரொம்ப பயந்த மாதிரி நடிக்க வேண்டாம்... அதோ குரு வந்தாச்சு..'' என்றபடி கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்தாள் அவள்.

சிறிது நேரத்திலேயே ஹெச் ஆர் டிபார்ட்மெண்ட்டிலிருந்து ஒருவர், புதிதாய் அவர்களுடைய டீமில் இணையப் போகின்ற பெண்ணுடன் வந்து, அவளை மூவருக்கும் அறிமுகம் செய்தார்.

''இவங்க மிஸஸ். ஊர்மிளா! உங்க புது டீம் மெம்பர்!'' என்றவர் குருவிடம் திரும்பினார்.

''இவர்தான் மிஸ்டர் குருநாதன்! உங்க டீம் லீடர்! நான் வரேன் குரு... டேக் கேர்!'' என்றபடி விடைபெற்றார் அவர்.

ஆனால், இருவரும் ஒரு கணம் செய்வதறியாது உறைந்து நிற்க, எதிர்பாராத அதிர்ச்சியில் சிலையாய் சமைந்திருந்தவர்களை, ஒரு குரல் உசுப்பியது.

''நீ... என் ஃப்ரெண்ட் ஊர்மிதானே?'' திகைப்புடன் வினவினாள் ப்ரஷா!

உடனே திரும்பிய ஊர்மிளாவுக்குள் சற்று முன் உணர்ந்த அந்த அதிர்ச்சியையும் மீறிய பரவசம்!

''ஏய்.. நீ ப்ரஷா தானே?'' என்றபடி வேகமாக வந்து வாஞ்சையுடன் கைகளைப் பற்றிக் கொண்டாள் அவள்.

அதற்குள் குருவின் குரல் இடையிட்டது.

''ஓகே கைஸ்.. ப்ரஷா! நீ அவங்களுக்கு நம்ம ப்ராஜெக்டைப் பத்தின எல்லா டீடெய்ல்ஸையும் புரிய வச்சிப் பழக்கி விட்டுடு!''

''உங்க பர்சனல் பேச்செல்லாம், லன்ச் அவர்லே வெச்சிக்கலாம்... ஓகே! அப்புறம் உசேன்.. இங்கே வாங்க.. நேத்து பாத்த ஆன் லைன் வொர்க்கைத் தொடரலாம்!'' என்றபடி உசேனைத் தன் இருக்கைக்கு அழைத்துச் சென்றான்.

''ஓகே! உன்னைப் பாத்ததிலே எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா...? இப்ப கொஞ்சம் வேலை பார்க்கலாம்! லன்ச் அவர்லே பேசுவோம்!'' என்றபடி ப்ரஷா தங்களின் ப்ராஜெக்டைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தாள்.

* * *

மதியம், கம்ப்யூட்டரிலிருந்து விலகி கேண்டீனுக்குச் சென்றபோதுதான், இருவராலுமே இயல்பாகப் பேச முடிந்தது.

''ப்ரஷா! உன்னை இங்கே பார்ப்பேன்னு கனவுல கூட நினைக்கலை! எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? பழைய ஞாபகமெல்லாம் வருது!''



உற்சாகமும் நெகிழ்ச்சியுமாய் உரைத்தாள் ஊர்மிளா.

''எனக்கும்தான் ஊர்மி! ஏழெட்டு வருஷம் இருக்குமா நாம பிரிஞ்சி.. என்ன சொல்றதுன்னே புரியலை! உனக்கு எப்ப கல்யாணம் ஆச்சு? என்னை இன்வைட் பண்ணவே இல்லை பாத்தியா?''

செல்லக் கோபத்துடன் கேட்டவளையே பார்த்திருந்த ஊர்மிளாவின் விழிகள், சட்டென்று நிறைந்தன!

''அது.. அதைப்பத்திப் பேச வேண்டாமே ப்ரஷா... இப்பதான் நான் கொஞ்சம் நிம்மதியாவே இருக்கேன்!'' உடைந்த குரலில் முடித்தாள்.

அந்த நொடியே அவளிடம் ஏதோ ஒரு இனம் புரியாச் சோகம் ஒளிர்ந்திருப்பதை உணர்ந்தவள், ''ஓ! அதை விடு! அம்மா அப்பாவெல்லாம் எப்படி இருக்காங்க.. உங்கண்ணாவுக்கு கல்யாணம் ஆயிடுச்சா?'' ஆவலுடன் விசாரித்தாள்.

''ம்.. அம்மா இறந்திட்டாங்க! அப்பாவும் அண்ணனும் நல்லா இருப்பாங்கன்னுதான் நினைக்கிறேன்..''

தலை குனிந்தபடி விரக்தியுடன் பகர்ந்தவளைப் பார்த்தால், வெகு பரிதாபமாய்!

அதற்கு மேல் அவளைத் தொந்தரவு செய்ய விரும்பாமல், ''ஓகே ஊர்மி! முதல்லே சாப்பிடு! இந்த வீக் எண்ட் எங்காவது போகலாம்! அப்ப நம்மைப் பத்தி பேசலாம்!'' என்றபடி சாப்பிட ஆரம்பித்தாள்.

உசேன் குருவுடன் சாப்பிடச் சென்றிருக்க, சுகந்தியும் அன்று விடுமுறை என்பதால், இருவரும் தங்களின் பால்யக் கதைகளை நினைவு கூர்ந்தபடியே சாப்பிட்டு முடித்தனர்.

* * *

பிறகு தங்களின் தளத்திற்குச் செல்வதற்காக, லிப்டில் பயணித்த போதுதான், அடுத்த ப்ளோரில் கதவு திறக்க, கம்பீரத்துடன் உள்ளே வந்தான் ஆதவன்.

அவளைக் கண்டதும் சட்டென்று விழிகள் இடுங்க, "ஹாய் ப்ரஷா! ஹௌ ஆர் யூ?" ஆழ்ந்த குரலில் விசாரித்தான்.

"யா... ஃபைன் சார்! இவ என் ஃப்ரெண்ட் ஊர்மிளா" என்று தன் தோழியை அறிமுகம் செய்தவள், உடனே ஊர்மிளாவிடம் திரும்பினாள்.

"இவர் மிஸ்டர் ஆதவன்! நமக்கு சீஃப்... சிஸ்டம் அனலிஸ்ட்... அதோட இந்த கன்சர்னுக்கு உரிமையாளர்! நம்ம டீம் லீடர் குருவோட பெஸ்ட் ஃப்ரெண்ட்!"

மெல்லிய குரலில் அவள் கூற, தெரியுமென்பது போல் தலையசைத்த ஊர்மிளா, "இவர்தான் என்னை இண்டர் வியூ பண்ணி செலக்ட் பண்ணினாரு!" என்றாள் அடிக் குரலில்!

உடனே நிமிர்ந்தவள், "ஓ! தேங்க் யூ சார்! இவ என் ஸ்கூல் மேட் அண்ட் பால்யத் தோழி! நீங்க செலக்ட் பண்ணினதால, நாங்க மறுபடி மீட் பண்ணிருக்கோம்! தேங்க் யூ சோ மச்!"

அவள் நன்றியுடன் பகர, "ஓ! வெல்கம் மை டியர்!" இடை வரை குனிந்து நிமிர்ந்து, அவளையே குறும்புடன் ஊடுருவினான் அவன்!

அதற்குள், அவர்கள் செல்ல வேண்டிய ஃப்ளோர் வந்துவிட, இருவரும் விடை பெற்று விரைந்தனர்.



அவளையே தொடர்ந்த ஆதவனின் விழிகள், சிறு கூர்மையுடன் பளபளத்தன!

ஆறு மாதங்களாக அவளை கவனித்து வருவதில், மற்ற பெண்களிடமிருந்து அவள் தனித்துத் தெரிவது புரிவதாய்!

அழகின் முகவரியாய்... அனாவசிய அலட்டலின்றி.. அதிகமான கூர்மையுடன் இணைந்த புத்திசாலித்தனத் துடன்.. முறையாக உடையணிந்து... நேர்ப்பார்வையோடு ஆண்களோடு பழகி.. ஒரு வித நிமிர்வுடன் தெரிபவளை இப்போது தன்னையறியாமல் ரசிக்க ஆரம்பித்திருந்தது, அவன் மனது!

அதை அறியாத ப்ரஷாவோ, தன் இருக்கைக்கு சென்று அமர்ந்து, ப்ராஜெக்டைப் பற்றி ஊர்மிளாவிற்கு விவரிக்க ஆரம்பித்தாள்.

ஏனோ, மதியம் தலைவலி என்று குரு வீட்டிற்கு சென்றிருக்க, உசேனும் அவர்களுடன் இணைந்து கொண் டான்.

* * *

அன்று முழுவதும் வேலையில் கழிய இரவு அவர்கள் கிளம்புவதற்கே எட்டு மணியாகி விட்டது.

"ஊர்மி! நீ எங்கே இருக்கே? நான் ஸ்கூட்டியில தான் போறேன்! உன்னை ட்ராப் பண்ணவா?" ஆர்வத்துடன் கேட்டாள் ப்ரஷா!

"இல்லை வேண்டாம்! கீழே அண்ணா டாக்ஸியோட காத்திட்டிருப்பாங்க.. இப்பதான் போன் பண்ணி வரச் சொன்னேன்.. முதல் நாளுங்கிறதாலதான்!" என்றபடி, அவளும் உடன் கிளம்பினாள்.

கீழே வந்தபோது காத்திருந்தவனைப் பார்த்தால் புதிதாய்... இவர் ஊர்மியின் அண்ணன் இல்லையே என்ற யோசனையுடன் அவள் விடைபெற, ஊர்மிளாவே நிறுத்தினாள்.

"ப்ரஷா! இவர்தான் நான் சொன்ன முருகன் அண்ணா! இவங்க வீட்டிலதான் இங்கே நான் தங்கியிருக்கேன்!" என்றவள் அவனிடம் திரும்பினாள்.

"அண்ணா! இவ என் சின்ன வயசுத் தோழி.. பக்கத்து வீடு.. ஒண்ணாவே விளையாடுவோம்.. ஸ்கூல் போவோம்!"

"நாங்க பத்தாவது முடிச்சப்ப.. இவங்க அப்பா இறந்துட்டாங்க! சாரி ப்ரஷா! இவ தன் சித்தப்பாவோட ஊரை விட்டே போயிட்டா! அப்புறம் எங்களுக்குள்ளே தொடர்பே இல்லை!"

"நானும் ரெண்டு வருஷம் கழிச்சி சென்னைக்கே வந்துட்டேனா... எட்டு வருஷமாச்சு!"

"இன்னிக்கு ஆஃபீஸிலே என் டீம் மெம்பரா மறு படியும் இவளைப் பாத்தப்ப, ரொம்ப சந்தோஷமா இருந்தது!"

குதூகலத்துடன் ஆர்ப்பரித்தவளைக் கண்ட முருகனுக்கும், அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது.

"வணக்கம்மா! ரொம்ப நாளைக்கப்புறம் ஊர்மிளா சந்தோஷமா இருக்கறதைப் பாக்கறேன்... ரொம்ப நிறைவா இருக்கு!" வாஞ்சையுடன் புன்னகைத்தான் அவன்.

புதிராய் அவள் இருவரையும் நோக்க, "நம்ம வீட்டுக்கு ஒரு நாள் வாம்மா! கட்டாயம் வரணும்! நாங்க கிளம்பறோம்!



ஒன்பது மணிக்கு ஒரு சவாரி போகணும்!" என்று விடை பெற்றான் அவன்.

ஊர்மிளா விடாமல் கையசைத்தபடிக் காரில் விரைய, அது கண் மறைந்ததும் பல கேள்விகள் முள்ளாய் அவளைக் குத்தின!

ஏதோ ஒரு இனம் புரியாத் தவிப்பு உடலெங்கும் பரவ, ஸ்கூட்டியை உசுப்பிக் கிளம்பினாள் ப்ரத்யுஷா!

உள்ளே, உணர்வுகள் மாயமனப் பிம்பங்களாய்... கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே ஊஞ்சலாடின!



## 2

வீட்டிற்கு வரும்போதே வழியில் சாப்பிட்டவள், தன்னுடைய ஃப்ளாட்டிற்கு வந்து கதவைத் திறந்ததுமே.. பால்ய நினைவுகள் ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டன.

அவர்களிருவரின் குடும்பத்தினரும், அப்போது நாகர் கோவிலில் இருந்தனர்.

பக்கத்து வீடுகளில் குடியிருந்ததால், சிறு வயதி லிருந்தே இருவரும் நெருங்கிய தோழிகள்!

மார்கழி மாதக் காலையில் கோலம் போடுவதிலிருந்து, பள்ளிக்குச் சென்று வருவது வரை, இணை பிரியா

திருப்பவர்களை அந்தத் தெருவே வியப்புடன் பார்த்த காலமது!

எதிர்வீட்டு பாட்டி கூட இருவரையும் கேலி செய்வதுண்டு!

"ரெண்டு பேருக்கும் ஒரே வீட்டில தான் மாப்பிள்ளை பாக்கணும் போலருக்கு!" என்று!

ப்ரஷா, ஊர்மிளாவின் வீட்டிலேயேதான் இருப்பாள்.

இரு குடும்பத்துக்கும் இருவருமே செல்லப் பிள்ளைகள் என்பதால், சாப்பாடு கூட இங்கும் அங்குமாகவே மாற்றி மாற்றி இருக்கும்!

ப்ரஷாவின் பத்தாவது வயதில் அவள் தாய் இறந்து போனதால், அவள் தந்தையே சமைப்பதிலிருந்து எல்லா வேலைகளையும் செய்து விடுவார்.

மற்ற வேலைக்கு மட்டும் ஆளிருக்க, தாயில்லாப் பெண் என்று ஊர்மிளாவின் வீட்டில், அனைவருமே அவளைத் தாங்குவார்கள்!

ஊர்மிளாவின் தாய் தாமரைக்கோ, அவள் மிகவும் செல்லம்!

ப்ரஷாவின் தந்தையும் அவர்கள் படித்த பள்ளியிலேயே ஆசிரியராக வேலை செய்ததால், சைக்கிளில் ஒன்றாகவே சென்று விடுவார்கள்.

விடுமுறை நாட்களில் அருகிலிருக்கும் ஓடைக்குச் சென்று அமர்ந்திருப்பதும், பின்புறத் தோப்பில் காய் பறித்து சாப்பிட்டு கண்ணாமூச்சி விளையாடுவதும் இருவருக்கும் பிடித்தமான ஒரு பொழுதுபோக்கு!



வருட இறுதி விடுமுறையில், கோடை காலத்தில் நுங்கு, சோளம், பதநீர், மாம்பழம், வெள்ளரிப் பழம் என்று ஊர்மிளாவின் தந்தை சிவநேசனின் தோப்பிலிருந்து எல்லாமே வந்து விடும்!

இருவருக்கும் சாப்பாடே தேவை இருக்காது.. இவற்றை சாப்பிட்டே வயிறு நிரம்பி பொழுது கழிந்து விடும்!

ஊர்மியின் அண்ணன் சந்திரனுக்கும் அவளுக்கும் வயதுவித்தியாசம் அதிகம் என்பதால், அவன் இருவருடனும் சேர்ந்து விளையாட மாட்டான்.

அவனுக்கென்று ஒரு நட்பு வட்டம் இருந்தது.

அந்த ஊரில் ஊர்மியின் தந்தை பெரிய மனிதர்! நெல் வயல்களும், ரப்பர், மிளகுத் தோட்டமும், தென்னந் தோப்புமாய் சீரும் சிறப்புமானவர்.

அந்தப் பெரிய வீட்டின் நடுவே அழகிய நிலா முற்றமும், ஊஞ்சலும், பெரிய தூண்களும், இரண்டு கட்டு வீட்டு அமைப்பும், ப்ரஷாவிடம் எப்போதுமே பிரமிப்பை ஏற்படுத்தும்!

அவளுடைய வீடு சிறிய ஓட்டு வீடுதான் என்றாலும், அதை சுத்தமாய் பராமரித்து வைத்திருப்பார் தனபால்!

ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி, சிறு வயதிலிருந்தே அவளையும் தங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக சுவீகரித்திருந்தனர், சிவநேசனின் குடும்பத்தினர்!

பூப்படைந்தபோதும், இருவருமே ஒருவருக்கொருவர் நல்ல புரிதலுடன் இணைந்திருந்தனர்.

பள்ளி ஆண்டு விழாக்களில் கூட அவள் ஆண் வேடமிட, ஊர்மிளா பெண் வேடமிட்டு ஆடிய நாட்களும் உண்டு!

எல்லாப் பண்டிகைகளுக்கும் அவளுக்கும் சேர்த்து உடை எடுத்து விடுவார் தாமரை.

ஊர்த் திருவிழாவுக்கு, பசுமை நிறைந்த அந்த மலையாடிவார கிராமத்திற்கு, வருடம் ஒரு முறை தன்னுடன் ப்ரஷாவையும் அழைத்துச் சென்று விடுவாள் ஊர்மிளா!

பத்தாவதுடன் படிப்பை நிறுத்திவிட்டு தந்தையுடன் சேர்ந்து தோப்பையும், விவசாயத்தையும் கவனிக்க ஆரம்பித்திருந்தான் சந்திரன்.

அவள் பத்தாவது முடித்து விடுமுறையில் சென்னையிலிருக்கும் தன் சித்தப்பா வீட்டிற்கு முதன் முறையாகச் சென்றிருந்தாள்.

அப்போதுதான் எதிர்பாராத விதமாக அந்தச் செய்தி இடியாய் வந்து அவளைத் தாக்கியது!

ஊரில், அவள் தந்தை திடீரென்று வந்த மாரடைப்பால் இறந்து போயிருந்தார்!

உடனே அனைவரும் கிளம்பி ஓடி வந்தாலும், சிறிது நேரத்திலேயே அவருடைய இறுதி யாத்திரை துவங்கியது.

ஊர்மியும், அவள் குடும்பமும், அவளுடைய சித்தப்பா தனுஷ்கோடியின் குடும்பமுமே, அப்போது அவளுக்கு ஆறுதலாய் இருந்தனர்.

பிறகு பொதுவான சொத்தாக இருந்த அந்தப் பூர்வீக வீட்டையும், குத்தகைக்கு விட்டிருந்த வயல்களையும்,



காரியம் முடிந்ததும் விற்க ஏற்பாடு செய்தார் தனுஷ்கோடி.

அதை, அன்றைய விலைக்கே சிவநேசன் வாங்கிக் கொள்ள, அங்கிருந்து புலம் பெயர்ந்தாள் ப்ரஷா!

* * *

அந்த வீட்டையும், ஊரையும், ஊர்மிளாவின் குடும்பத்தினரையும் பிரிந்து வரும்போது, அழுதழுது மயக்கம் போட்டே விழுந்து விட்டாள் அவள்.

பிறகு சென்னைக்கு வந்த பிறகுதான், தன்னுடைய சித்தப்பாவின் சுயரூபமே அவளுக்குப் புரிவதாய்!

ஒரு தொகையை அவள் பெயரில் ஃபிக்சட் டெபாசிட்டில் போட்டவர், உடனே அவளை ஒரு ஹாஸ்டலிலும் சேர்த்து விட்டார்.

அங்கேயே தங்கிப் படித்தவள், தொண்ணூற்றைந்து பர்சண்ட் மதிப்பெண்கள் எடுத்து, ஸ்காலர்ஷிப்பில் பி.இ முடித்தாள்.

உடனே ஒரு கம்பெனியில் வேலையும் கிடைத்து விட, பாங்கிலிருந்த பணத்துடன் மேலும் லோனும் போட்டு, இந்த ஃப்ளாட்டையும் வாங்கி விட்டாள்.

அவள் பங்குப் பணத்தில் பாதி, அவள் படிப்பிற்கு செலவாகி விட்டதாக சித்தியும், சித்தப்பாவும் கூறிய போதும், அவள் எதிர்த்து எதுவுமே பேசவில்லை!

அந்தக் கம்பெனியிலிருந்து மாறி, ஆறு மாதங்களுக்கு முன்பு தான் இந்தப் பெரிய நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்திருக்கிறாள்.

அங்கு, இன்று ஊர்மியை சந்தித்தது அவளுக்குள் பெரும் உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் ஊற் றெடுக்கச் செய்ய, ஒரு விஷயம் மட்டுமே நெருடலாய்!

ஒரு டாக்ஸி டிரைவரை தன்னுடைய அண்ணன் என்று ஏன் அவள் அறிமுகம் செய்ய வேண்டும்?

அவருடைய வீட்டில் தங்கியிருக்கிறாள் என்றால் அவர் கணவர் எங்கே? பல குழப்பங்கள் மனதிற்குள் மொட்டு விட்டன...

இந்த ஞாயிறன்று எப்படியாவது அவளிடம் கேட்டு விட வேண்டுமென்ற முடிவுடன், குளித்துவிட்டு உறங்கச் சென்றாள்.

ஏனோ, அளவுக்கதிகமான உற்சாகத்தில் உறக்கம் வர மறுத்தது... கூடவே ஆதவனின் நினைவுகளும் நீருற் றாய்ப் பொங்கின!

சமீப காலங்களில், அவன் விழிகளில் ஒரு விதக் குறும்பும், அதீத ஆர்வமும் பளிச்சிடுவதை அவளால் உணர முடிவதாய்!

அது தனக்குள்ளும் பெரும் அதிர்வை ஏற்படுத்து வதையும், அடி வயிற்றில் பல பட்டாம்பூச்சிகள் அழகாய் சிறகடித்து, பிறகு பெரும் அவஸ்தை உணர்வாய் மாறுவதையும், சிறு தவிப்புடன் உணர்ந்தே இருந்தாள்.

ஆனால் தன் நிலையும், அவனுடைய அந்தஸ்தும் மலையும் மடுவுமாய் மாறி பயமுறுத்த, அவனுக்கு முன்னால் எந்த உணர்வுகளையும் அவள் வெளிப்படுத் துவதே இல்லை!

அவனிடமிருந்து, இப்போதெல்லாம் மேலும் ஒதுங்க ஆரம்பித்திருந்தாள்.



'இன்றும் கனவில் அவன் வரவு தெரியுமா?' தவிப் புடன் இதயம் படபடக்க மெதுவாக உறங்க ஆரம்பித்தாள் ப்ரஷா!



## 3

மறு நாள் காலையில் எழுந்து தயாராகி, பிரட் ஜாமை அவசரமாக சாப்பிட்டு விட்டு, ஸ்கூட்டியில் கிளம்பினாள் ப்ரஷா!

அலுவலகத்திற்குச் சென்று இறங்கியபோதுதான், ஆதவனுடைய காரும் பார்க்கிங் ஏரியாவிற்கு வந்தது.

அவனுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் காரை பார்க் செய்துவிட்டு தன் இயல்பான கம்பீர நடையுடன் அருகில் வந்தவனை, ஏனோ இதயக் கூடு படமெடுத்துத் தன்னுள் பதித்துக் கொண்டது!

ஆனால் முகம் மட்டும் எந்த மாற்றமுமின்றி இருக்க, ''ஹலோ சார்.. குட் மார்னிங்!'' சிறு புன்னகையுடன் வாழ்த்தினாள்.

''மார்னிங்! எங்கே உன் ஃப்ரெண்ட் வரலையா?''

சோம்பலாக விழிகளை சுழல விட்டபடி அவளுடன் நடக்க ஆரம்பித்தான் அவன்!

அதற்குள் எங்கிருந்தோ அவசரமாக ஓடி வந்து இணைந்து கொண்டாள் சுகந்தி!

"ஹலோ சார்.. ஹௌ ஆர் யூ?"

எப்போதும் போல் வழிசலாகப் பேசியபடி வந்தவளைக் கண்டதும், அவன் முகம் சட்டென்று இறுகியது.

"ம்.. ஃபைன்! எனக்கு ஹெச் ஆரிலே ஒருத்தரைப் பார்க்கணும்! பை!" என்றபடி விரைந்து கீழ்த் தளத்தில் நுழைந்து விட்டான்.

உடனே சுகந்தியின் முகம் மாறுவதை ஓரக் கண்ணால் கவனித்தவளுக்குள், சிறு உற்சாகம் பரவுவதாய்!

"என்ன ப்ரஷா.. நேத்து புது டீம் மெம்பர் வந்தாச்சா? எப்படி இருக்காங்க?" ஆர்வத்துடன் விசாரித்தாள் அவள்.

"ம்.. வந்தாச்சு சுகந்தி.. ஒரு ப்ளசெண்ட் சர்ப்ரைஸ்! அவ என் க்ளோஸ் ஃப்ரெண்ட் ஊர்மிளா!" உற்சாகத்துடன் உரைத்தாள் அவள்.

"ஓ! அப்ப உன் ரெகமண்டேஷனா? ஆதவன் சார் தான் செலக்ட் பண்ணினாராமே?" ஒரு மாதிரிக் குரலில் கேட்டாள்!

"சுகந்தி! நான் யாருக்கும் சிபாரிசு பண்ணலை! அதோட நேத்து அவ ஜாயின் பண்ணும்போது தான் எனக்கே தெரியும்.. ஆதவன் சாரை அண்டர் எஸ்டிமேட் பண்ண வேண்டாம்... ப்ளீஸ்!"

அவள் கூறியவுடன், உடனே ஒரு போலிப் புன்னகையை அணிந்து கொண்டவள், "நான் அப்படிச் சொல்லலை ப்ரஷா! தெரிஞ்சவங்கன்னு உடனே கேட்டேன்.. இனிமே பழைய ஃப்ரெண்ட் வந்தவுடனே என்னை மறந்திடாதே!"

சிறு ஏளனம் தொனித்தது. அவள் குரலில்!



"ஊஹூம்... எனக்கு ஊர்மி எப்பவுமே தனிதான்னாலும், நீயும் உசேனும் குருவும் எனக்கு நல்ல ஃப்ரெண்ட்ஸ்! எப்படி மறக்க முடியும்?"

இயல்பாகக் கேட்டபடி தன் இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

அதற்கு முன்பே வந்து காத்திருந்த ஊர்மிளாவிற்கு சுகந்தியை அறிமுகம் செய்தவள், "என்ன சுகந்தி.. என் ஃப்ரெண்ட் எப்படி?" ஆர்வத்துடன் கேட்டாள்.

"ம்.. உன் மாதிரித்தான் இருக்கா! இன்னும் கொஞ்சம் ஃப்ரீக் அவுட்டா எதிர்பார்த்தேன்."

உதட்டுப் பிதுக்கலுடன் தன் கணிப்பைக் கூறினாள் சுகந்தி!

* * *

பிறகு வேலையில் பொழுது செல்ல, அன்றும் தாமதமாகவே வந்த குருவோ, மிகவும் மோசமான மனநிலையிலிருந்தான்!

எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடித்து எரிந்து விழுந்தவனைக் கண்ட ஊர்மிளாவோ, பயத்துடன் ஒதுங்கிக் கொண்டாள்.

அவளுடைய முகத்தைக் கண்டே உணர்வுகளை வாசித்தவள், "ஊர்மி! குரு எப்பவுமே கொஞ்சம் மூடி டைப்தான்! இன்னிக்கு என்னாச்சுன்னு தெரியலை! உடம்பு சரியில்லை போலருக்கு! பயப்படாதே!" அடிக் குரலில் ஆறுதல் கூறினாள்.

அன்று முழுவதும் ஒரு வித இறுக்கத்துடனே பொழுது செல்ல, மாலையில் கேன்டீனுக்குக் காபி குடிக்கச் சென்ற போதுதான் இருவரும் ஆதவனை மீண்டும் சந்தித்தனர்.

அவர்களைக் கண்டதும், தன் கம்பீர நடையுடனும் சிறு முறுவலுடனும் வேகமாக அருகில் வந்தான், அவன்!

''என்ன... பழைய ஃப்ரெண்டைப் பார்த்தவுடனே எங்களை எல்லாம் மறந்தாச்சு போலருக்கு!''

அவன் குரலில் சிறு குறும்பும் கேலியும் கசிந்தன.

''ம்.. அப்படி எல்லாம் இல்லை! நீங்களும் சுகந்தி மாதிரியே பேசறீங்க...'' வியப்புடன் கூறினாள் ப்ரஷா.

''யாரு.. அந்த சுகந்தி மாதிரி நானா? ஓ! இட்ஸ் டிஸ் கஸ்டிங்! வேறு ஏதாவது பேசலாமா?'' அலட்சியத்துடன் நிறுத்தினான்.

''வேற என்ன சார் பேசறது?''

வேண்டுமென்றே அசுவாரசியமாக அவள் கேட்கும் போதே, இருவரையும் வியப்புடன் கவனிக்க ஆரம்பித் தாள் ஊர்மிளா.

''ஏன்.. நமக்குள்ளே பேச வேற எதுவுமே இல்லையா?''

கண்கள் இடுங்க, ஆழ்ந்த குரலில் வினவினான் அவன்.

''ப்ச்.. புரியலை சார்..''

தோளைக் குலுக்கி அவள் கைகளை விரிக்க, ''ரொம் பப் புத்திசாலின்னு நான் உன்னைப் பத்தி கணிச்சிருந்தது தப்புன்னு இப்பப் புரியுது!''

தனக்குள்ளேயே முணுமுணுத்தவன், அவளின் கோபத்தைக் கவனியாதவன் போலத் தொடர்ந்தான்.

''நீயும் நானும் இந்தக் கன்சர்னோட ஸ்டாஃப்தானே.. வொர்க்கைப் பத்திப் பேசலாம்! நான் உன்னோட பாஸ்..



அதனால இந்தக் கம்பெனியோட வளர்ச்சி பத்திப் பேசலாம்! எவ்வளவோ இருக்கே.. அதைச் சொன்னேன்!''

சிறு குறும்பில் உதட்டோரம் துடிக்க அவன் தோளைக் குலுக்கியபோது, ஊர்மிளாவுக்கு ஏதுவோ புரிவது போல்!

கனவில் மிதந்து ரசனை சுமந்த அவன் பார்வை உண்மையை உரைத்தன!

''நான் வேணும்னா சீட்டுக்குப் போறேன்.. நீ பேசிட்டு வா ப்ரஷா!'' என்றபடி அவள் விலக, உடனே பிடித்து நிறுத்தினாள் ப்ரஷா.

''ஷ்! ஊர்மி! இரு நானும் வரேன்!''

அடிக்குரலில் கூறியவள், அவனிடம் திரும்பினாள்.

''என்ன சார்? இன்னிக்கு ரொம்ப உற்சாகமா இருக்கற மாதிரித் தெரியுது! எனக்கு வேலை இருக்கு.. போகணும்! ஆன் சைட்டுலக் காத்திட்டிருப்பாங்க!''

மென் குரலில் கூறியவளையே ஒரு கணம் கூர்மை யாய் அளவிட்டவன், ''ஓகே..! யு கேரி ஆன்!'' என்றபடி திரும்பிச் சென்றான்.

''ம்.. கண்ணெதிரிலே ஒருத்தன் காத்திட்டிருக்கறது புரியலை... ஆன் சைட்டிலே யாரோ காத்திட்டிருப்பாங் கன்றது மட்டும் ஞாபகம் இருக்கு.. ப்ச்!''

அவனுடைய ரகசியக் குரல் ஸ்பஷ்டமாய் இருவர் காதிலும் விழ, அவனுடைய கம்பீரக் காலடியோசை மட்டும், தேய்ந்து மறைந்தது.

உடனே திரும்பி தோழியின் கரத்தைப் பற்றிய ஊர் மிக்கோ, பெரும் உற்சாகமும் படபடப்பும்!

''ஏய் ப்ரஷா! ஆதவன் சார் உன்னை விரும்பறாருன்னு நினைக்கிறேன்.. யூ ஆர் சோ லக்கி!''அடிக்குரலில் வாழ்த்தினாள்.

உடனே தன் கையை விடுவித்துக் கொண்டவள், ''பணக்காரங்களை நம்ப முடியாது ஊர்மி! நான் எல்லார் கிட்டயும் ஒரு அளவோட தான் இங்கே பழகறது!''

மெல்லக் கூறியபடி நடக்க ஆரம்பித்தாள்.

''ஏய் ப்ரஷா! சின்ன வயசுலருந்து நானும் நீயும் அப்படியா பழகி இருப்போம்.. பணக்காரங்க எல்லாருமே மோசமில்லை! அதோட பாஸைப் பார்த்தா, எனக்கு என்னவோ உன்னை உண்மையாவே நேசிக்கிற மாதிரித் தான் தெரியுது!''

குறும்புடன் கூறிவிட்டுக் கண் சிமிட்டியவளை, செல்லமாக அடிப்பது போல் விரல் உயர்த்தி பத்திரம் காட்டிச் சிரித்தாள் அவள்.

''அளவுக்கதிகமாக ஆசைப்படக்கூடாது ஊர்மி! போதும்! அதோட ஆண்கள் யாரையும் நம்பவே எனக்கு இப்போ பயமா இருக்கு!'' சோர்வுடன் முடித்தாள்.

''எனக்கும் அதே அனுபவம்தான்! ஆனா எல்லாரும் ஒரே மாதிரி கிடையாது.. சரி வா! நானும் உன் கூட நிறையப் பேசணும்னு நினைக்கிறேன்.. பாப்போம்!'' ஒரு பெருமூச்சுடன் நடக்க ஆரம்பித்தாள் ஊர்மிளா.

''இந்த சன்டே என் வீட்டுக்கு வா ஊர்மி.. நிறையப் பேசணும்!'' என்றபடி அவளைத் தொடர்ந்தாள் ப்ரஷா.

பிறகு இருவரும் தங்கள் முகவரியைப் பரிமாறிக் கொண்டு இருக்கைக்குச் சென்றனர்.



# 4

மறுநாள் காலையில் வீட்டிலிருந்து கிளம்பும்போதே ப்ரஷாவின் மனதிற்குள் புரியாத உற்சாகம் ஊற்றெடுக்க, என்னவென்று யோசித்தால், அன்றுதான் தன் பிறந்த நாள் என்பதே நினைவிற்கு வருவதாய்!

உடனே பூஜை அலமாரியிடம் சென்று, கடவுளை வணங்கிவிட்டு திருநீறு பூசும்போதுதான், அந்தப் பாடல்வரிகள் நினைவிற்கு வந்தன!

**''எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே!**

**நீ நதி போல ஓடிக் கொண்டிரு!**

**எந்த வேர்வைக்கும் வெற்றிகள் வேர் வைக்குமே**

**உன்னை உன்னத்தில் ஊர் வைக்குமே!''**

எவ்வளவு ஆழமான சத்தியமான வார்த்தைகள்.. மெய் சிலிர்த்தது.

அதே நேரம் அழைப்பு மணி ஒலிக்க, கைப்பையுடன் கதவைத் திறந்த போது, பெரிய அழகிய மலர்க் கொத் துடன் ஒரு இளைஞன் நின்றிருந்தான்.

''பிறந்த நாள் வாழ்த்துக்கள் மேடம்!''என்றபடி அவன் அதை நீட்ட, அவளுக்கோ பெரும் ஆச்சர்யம்!

தன்னுடைய பிறந்த நாள் யாருக்குத் தெரியும்.. அப்போதுதான் ஊர்மிளாவின் நினைவே வந்தது!

ஊர்மிளாதான் ஞாபகமாக அனுப்பியிருக்க வேண்டும்!

மனம் உற்சாகத்தில் பூரிக்க, நன்றி கூறி வாங்கி வைத்துக் கதவைப் பூட்டி விட்டுக் கிளம்பினாள்.

வழியில் ஒரு கோவிலில் நிறுத்தி அவசரமாக வணங்கியவள், வேகமாக அலுவலகம் விரைந்தாள்.

அலுவலகத்தில் நுழைந்து லிஃப்டை நோக்கி செல்லும்போதே, அதில் ஆதவனும் ஊர்மிளாவும் இருப்பது தெரிய, முறுவலுடன் வேகத்தை அதிகரித்தாள்.

அவளுக்காக லிஃப்டின் கதவு மூடி விடாமல் பட்டனை அழுத்திக் காத்திருந்த ஆதவனிடம் நன்றியுரைத்து விட்டு உள்ளே சென்றவள், ஊர்மிளாவிடம் திரும்பி "தேங்க்ஸ்" என்றாள்.

அவள் ஒன்றும் புரியாமல் விழிக்கவே, "ஏய்.. என்ன முழிக்கறே? என் பர்த்டே உனக்கு மட்டும் தானே தெரியும்... பொக்கேவுக்கு நன்றி!"

கிசுகிசுப்பான குரலில் நன்றியுரைக்க, "ம்.. அந்த நன்றியை..., நீ இங்கே எனக்கு சொல்லணும் ப்ரஷா! அந்த பொக்கேவை அனுப்பினது நான்!"

ஆழ்ந்த குரலில் ஆதவன் கூற, விதிர்த்து நிமிர்ந்தாள் அவள்.

"ஓ..! ஆனா எனக்கு ஏன் நீங்க..?"

அதற்குள் இடைமறித்தது அவன் குரல்!

"ம்.. நீ என் கம்பெனி ஸ்டாஃப்! உன்னோட பர்த்டேயைத் தெரிஞ்சு வாழ்த்து அனுப்பறது ஒரு பாஸோட கடமை இல்லையா?"



குறும்பும் கேலியுமாக வந்த அவன் குரலில், புரியாத ஏதோ ஒன்று இருப்பது போல்!

குழப்பத்துடன் அவள் நிமிரும்போதே, "எனக்கு தேங்க்ஸ் எல்லாம் கிடையாதா? பொக்கே அனுப்பாதவங்களுக்கெல்லாம் தேடிப் பிடிச்சி 'தேங்க்ஸ்' சொல்றே!" கிண்டலாக வினவினான்.

"சாரி.. தேங்க்ஸ்!"

திணறலுடன் அவள் கூறும்போதே அவன் இறங்க வேண்டிய ஃப்ளோர் வந்துவிட, "லேட்டா வந்த நன்றின்னாலும் பரவாயில்லை... வெல்கம்!" என்றபடி கம்பீரமாக வெளியேறினான்.

பிறகு லிஃப்டின் கதவு மூட, "சாரிடி ப்ரஷா! எனக்கு மறந்தே போச்சு!" குற்றவுணர்வோடு வாழ்த்தினாள் ஊர்மி!

"பரவாயில்லை ஊர்மி! நான்தான் தப்பாப் புரிஞ்சிக்கிட்டேன்! காலையிலே பொக்கே வந்தவுடனே, எனக்கு உன்னைத் தவிர வேற ஞாபகமே வரலை!"

உடனே ஊர்மியின் முகத்தில் நமட்டுச் சிரிப்பொன்று பரவியது.

"அதனாலத்தானே பாஸ் அனுப்பியிருக்காரு... தன் ஞாபகமும் உனக்கு வரணும்னுதான் மலர்களைத் தூதா அனுப்பியிருக்காரு! ஆனா பாவம்டி அவரு!"

அவளைச் *சீண்டிச் சிரித்தாள்* ஊர்மிளா.

"சரி.. இந்த விஷயம் இதோட முடியட்டும்!"

அவள் கூறும்போதே உஷேவின் குரல் தடுத்தது.

''எந்த விஷயம் ப்ரஷா?'' என்றவனுடன் சுகந்தியும் வந்திருப்பது புரிந்தது.

சிறு தவிப்புடன், ''ஒன்றுமில்லை உசேன்!'' என்றாள் அவள்.

''அதெல்லாம் கிடையாது.. மேடத்துக்கு இன்னிக்கு பிறந்த நாள்! அதுக்குப் பரிசா யாரோ ஒருத்தர்... அவங்க வீட்டுக்கே பொக்கே அனுப்பியிருக்காங்க!''

ஊர்மிளா உற்சாகத்துடன் போட்டு உடைத்துவிட்டாள்.

''ஓ! ஹேப்பி பர்த்டே...''

இருவரும் கோரஸாக வாழ்த்தினர்.

''அந்த பொக்கே யாருதுன்னு நாங்க தெரிஞ்சிக்கலாமா?'' ஆர்வத்துடன் கேட்டான் உசேன்.

''ம்.. நம்ம ஆபீஸ்தான்!''

ஊர்மிளா க்ளு கொடுக்க, ''யாரு.. நம்ம குருவா? நம்ம டீமிலே அவர்தான் பாக்கி! சரியா?'' யோசனையுடன் கேட்டாள் சுகந்தி.

''இல்லை! ஆதவன் சார்!''

அவள் கூறியதுமே, சுகந்தியின் முகம் சுருண்டு இருண்டு போனது!

''ஓ! அப்படிப் போகுதா கதை! நான் கூட இதை எதிர்பார்த்தேன்.. கொஞ்ச நாளாவே ஒரு சந்தேகம்தான்! ஆனா இப்பத்தான் கிளியராச்சு!''

உசேன் கேலி செய்ய, ''அதெல்லாம் ஒண்ணும் இல்லை... தன்கிட்ட வேலை செய்யற ஒரு ஸ்டாஃப்புன்னு அனுப்பியிருப்பாரு!'' சினத்துடன் படபடத்தாள் சுகந்தி!



''அப்படியா? அப்போ, போன மாசம் என் பிறந்த நாள் வந்துதே.. அதை மட்டும் மறந்துட்டாரா?'' கேள்விக் கணை எழுப்பினான் அவன்.

''அதை விடுங்க! ட்ரீட் என்னாச்சு?''

வேண்டுமென்றே அந்த விஷயத்தை தொடர விடாமல் கேட்டாள் சுகந்தி!

''சரி! இன்னிக்கு நம்ம டீமிலே இருக்கற எல்லாருமே சேர்ந்து நைட் பக்கத்துல இருக்கற ஹோட்டல் போறோம்.. நீ தான் டின்னர் தரே!''

உசேன் முடித்துவிட, சரி என்றாள் அவள்.

பிறகு விபரம் தெரிந்து வாழ்த்தினாலும், ஏனோ குரு உம்மென்றே இருந்தான்.

* * *

அன்றைய பொழுது வேகமாகச் செல்ல, வேலை முடிந்து அனைவரும் கிளம்பும் நேரம், திடீரென்று ஆதவன் வர, ப்ரஷாவோ திகைத்துப் போனாள்.

''என்ன.. என்னை எல்லாம் உங்க ட்ரீட்டுக்கு கூப்பிட மாட்டீங்களா?''

கேலியாகக் கேட்டபடி அருகிலிருந்த நாற்காலியில் அவன் அமர, வாயடைத்து அமர்ந்திருந்தாள் ப்ரஷா.

''என்ன.. பதிலே காணோம்! நான் வரேன்னவுடனே பர்த்டே பேபி அமைதியாயிட்டாங்க!'' என்றவன் அவளிடம் குனிந்தான்.

''எனக்கு பதில் சொல்ல அவ்வளவு பயமா ப்ரஷா? ஆனா, ரொம்ப நேரம் மத்தவங்க பதிலுக்கு காத்திருக்கறது எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியுமா?''

அடிக்குரலில் எச்சரிக்கும் தொனியில் அவன் கேட்க, விதிர்த்து நிமிர்ந்தாள் அவள்.

''ம்.. யு ஆர் ஆல்வேஸ் வெல்கம்!''

சிறு தவிப்புடன் கூறிவிட்டு வேகமாக எழுந்து விட்டாள்.

''ஓ! தேங்க்யூ'' உதட்டுச் சுழிப்புடன் சோம்பலாக உடன் எழுந்தான் அவன்.

பிறகு அனைவருமாக அருகிலிருக்கும் ரெஸ்டா ரெண்டுக்குச் சென்றபோது, அங்கு சட்டென்று அவளுக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்து விட்டான் அவன்!

சுகந்தியும் அதே இடத்தில் அமர முயற்சிக்க, ''என்ன.. ம்யூசிகல் சேர் மாதிரி ஆயிடுச்சா?''

உசேனின் கேலி ஆத்திரத்தை வரவழைக்க, குருவுக்கு மறுபுறம் அமர்ந்தாள் சுகந்தி!

''உன் பர்த்டேயை ஞாபகம் வச்சி முதல்லே வாழ்த் தினது நான்! ஆனா என்னை இந்த டின்னருக்கு கூப்பிட ணும்னு உனக்குத் தோணலை.. இல்லே?''

அவள் செவியை, சிறு சீற்றம் சுமந்த வருடிய அந்தக் குரலில், அவளுக்குள் சிறு குளிர் பரவியது!

இதயம் இலவம் பஞ்சாய் லேசாகியிருந்தாலும் சூறைக்காற்றில் அலைபாய்வது போல் தடதடத்தது!

அந்தக் கணம், இருவரையும் கவனித்த சுகந்தியின் பார்வையில் ஜனித்த வெறுப்பை, ஊர்மிளாவைத் தவிர வேறு யாருமே கவனிக்கவில்லை!



மெதுவாக நிமிர்ந்த ப்ரஷாவின் விழிகள் அவனிடம் மன்னிப்பை யாசித்தன.

''சாரி! எங்க கூடல்லாம் நீங்க சாப்பிட வருவீங் களான்னு தெரியலை.. அதான்!'' தர்மசங்கடத்துடன் நிறுத்தினாள்.

''ஓ! தினமும் நானும் குருவும் ஒண்ணாத்தானே சாப்பிடறோம்.. அது தெரியுமில்லை?''

ஒரு மாதிரிக் குரலில் அவன் வினவ, மெல்லத் தலையாட்டினாள் அவள்.

''ஆதவா! இந்தப் பொண்ணுங்களை மட்டும் நம்பவே கூடாது.. எந்த நேரம் காலை வாருவாங்கன்னே தெரி யாது!''

சிறு கசப்புடன் மொழிந்த குருவைப் பார்த்தபோது, ப்ரஷாவிற்கோ பரிதாபமாய்!

அவனுடைய மனைவி வேறு ஒருவருடன் ஓடிப்போய் விட்டதாகவும், அதனாலேயே அவனுக்கு பெண்கள் என்றால் அவ்வளவு மரியாதை இல்லை என்றும், எப்போதுமே பெரும் விரக்தியுடனிருப்பதாகவும், தான் வேலைக்கு வந்த புதிதில் உசேன் கூறியது, அப்போது நினைவு வந்தது.

அவனுடைய அனுபவம் அப்படிப் பேச வைக்கிற தென்பதை உணர்ந்தாலும், அவளால் விட முடிய வில்லை!

''எல்லாத்துக்கும் நிச்சயம் விதி விலக்கு இருக்கும் குரு! பொண்கள்லே சிலர் மோசமா இருக்கலாம்... அதுக் காக ஒட்டு மொத்தமா எல்லாப் பொண்களையும் குத்தம் சொல்லக் கூடாது.. இல்லையா?''

''ஆண்கள்லேயும்தான் தப்பானவங்க இருக்காங்க! அதனால எல்லாரையும் நாங்க வெறுத்து ஒதுக்கிடலையே!''

மெல்லிய குரலில் தன் கருத்தை அறிவுறுத்தினாள் ப்ரஷா.

''ஓகே... சூப்பும் ஸ்டார்ட்டரும் வந்தாச்சு.. நம்ம ஆர்க்யூமெண்ட்டை அப்புறம் வச்சிக்கலாமா பர்த்டே பேபி!''

ஆதவன் குறும்புடன் கேட்க, அனைவரும் இயல்பாகிப் புன்னகைத்து சூப்பைப் பருக ஆரம்பித்தனர்.

பிறகு அவர்கள் ஆர்டர் செய்த எல்லாவித உணவு வகைகளும் பரிமாறப்பட, உற்சாகமாக அரட்டை அடித்தபடி உண்ணத் துவங்கினர்.



# 5

அதே நேரம் ஆதவனுடைய செல்போன் சிணுங்க ஆரம்பிக்க, நம்பரைப் பார்த்துவிட்டு உடனே எடுத்தான் அவன்.

அவன் முகம் கோடி புஷ்பங்களின் மலர்வாய் விரிந்தது!

''ஹலோ.. பாட்டி சொல்லுங்க.. எப்படி இருக்கீங்க?'' ஆர்வத்துடன் விசாரித்தான்.



மறுமுனையில் என்ன கூறினார்களோ, அவனுடைய உதடுகளில் மர்மப் புன்னகை ஒன்று பூத்தது.

''பாட்டி... அதுக்காகவெல்லாம் நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது!''

குறும்புடன் அடிக்குரலில் அவன் கூற, ப்ரஷாவின் புலன்கள் அனைத்தும், அவன் பேசுவதையே கூர்ந்து கவனித்தன.

''ம்.. முதல்லே எனக்கு பெண்ணைப் பிடிக்கணும்! என்னது.. அங்கேயே பாத்துட்டீங்களா?'' எனும்போதே அவன் விழிகள் ஓரப்பார்வையாய் ப்ரஷாவிடமே பதிந்தன!

அவனுடைய புன்னகை திடீரென்று ஒரு நொடி ஸ்தம்பித்து, பிறகு இயல்பானதைப் போல்!

உடனே, அவனுடைய அதரங்கள் சப்தமின்றி மௌனப் புன்னகை புரிந்தன!

''பாட்டி! முதல்லே நான் பாக்க வேண்டாமா? அப்புறம் தான் எல்லாம்! உங்களுக்கு அந்தக் கஷ்டம் வேண்டாம்னு தான்.. நானே ஒரு பொண்ணைப் பார்த்து செலக்ட் பண்ணியிருக்கேன்!''

அவளையே கூர்ந்தபடி அவன் கூற, அவளுடைய இமைகள் படபடத்து விழிகள் அலை பாய்வதையும், இதழ்கள் மெல்லத் துடிப்பதையும், சிலிர்ப்புடன் உணர்ந்தது மனது.

பிறகு ''ம்...ஆமாம் பாட்டிம்மா! நிச்சயம் அவளை ஒரு நாள் உங்க கிட்டே அழைச்சிட்டு வருவேன்! நான் விரும்பறது அவளுக்கும் தெரியுமாவா? தெரியாம எப்படி... உடனே ஓகே சொல்லிட்டா!'' குறும்புடன் நிறுத்தினான்.

அந்த வார்த்தைகள், இடியாய் அவனுள் இறங்கின!

மறுகணமே வெளுத்த ப்ரஷாவின் முகம், அவனுக்கு பெரும் நம்பிக்கை தருவதாய்!

''பாட்டி! உங்க காலம் மாதிரி இப்ப இல்லை! அம்மா அப்பா காட்டின பெண்ணை கல்யாணம் செஞ்சுக்கறதுல, எனக்கு உடன்பாடு இல்லை! காதலிக்கணும்.. மனசு முழுக்க நேசிக்கணும்.. வாழ்க்கையோட கடைசி வரைக்கும், நல்ல புரிதலோட வாழணும்! அதுக்கு, பரஸ்பரம் மனசைப் புரிஞ்சிக்கிட்ட லவ் மேரேஜ் தான் சரி! பை பாட்டி!'' என்று வைத்தபடி அவளையே நோக்கினான்.

''என்ன பார்த்தே பேபி? நான் சொல்றது சரிதானே!''

குறும்புடன் ஒற்றைக் கண் சிமிட்டி வினவினான்.

உடனே திக்கென்று அதிர்ந்தவள், ''இதுலே நான் எப்படி சரின்னு சொல்ல முடியும் சார்?'' தவிப்புடன் மறுத்தாள்.

''நான் என்னவோ உன்னைக் காதலிக்கிறேன்னு சொன்ன மாதிரித் தடுமாறுறே! என் காதலி இங்கேதான் இருக்கா..! என் மனசுல! காதலைப் பத்தி உன் அபிப்ராயம் மட்டும்தான் கேட்டேன்!''

அவன் குறும்புடன் கேட்க, ''எனக்கு அதைப் பத்தி ஏதும் தெரியாது சார்! அந்த அனுபவம் எனக்கு இல்லை!''

ஒருவித அழுத்தத்துடன் பதிலளித்தாள் அவள்.

''ஓ! இப்ப இல்லை... சரி! ஃப்யூச்சர்லயாவது ஏதாவது ஐடியா இருக்கா?''

''இல்லை!'' அவள் உள்ளூரச் சிரித்தபடி மொழிந்தாள்.



''ஓ!'' என்றவனுடைய இதயத்திற்குள், செல்லக் குறுகுறுப்பு!

'ப்ரஷா! நீயும் என்னை விரும்புகிறாய்.. அது எனக்குத் தெரியும்! உன் முகமும், உடல் மொழியும் உன் மனதிலிருக்கும் காதலை முன்பே என்னிடம் பறைசாற்றி விட்டன! இரு... இரு... அதை உன் வாயாலேயே கூற வைக்கிறேன்!''

மௌனமாய் சவால் விட்டது நெஞ்சம்!

பிறகு அனைவரும் சாப்பிட்டபடியே பேச, அதில் கிரிக்கெட், அரசியல், சினிமா என்று பல கருப் பொருள்கள் விவாதிக்கப் பட, பொழுது உற்சாகமாக நகர்ந்தது!

சாப்பிட்டு முடித்து எழுந்ததும், ''ஜெர்மி! நான் உன்னை வீட்டில டிராப் பண்ணிடறேன்!'' என்றாள் ப்ரஷா.

''இல்லை.. வேண்டாம் ப்ரஷா! அண்ணா கீழே வெயிட் பண்ணிட்டிருக்காரு... நான் போயிடுவேன்!''

அவசரமாகக் கூறிவிட்டு, அனைவரிடமும் பொதுவாக விடைபெற்று வெளியேறினாள் ஜெர்மி.

உடனே, பின்னோடு கோபத்துடன் குருவும் கிளம்பிச் செல்ல, அவனுக்கோ ஒன்றுமே புரியவில்லை!

அதற்குள், ''சார்! எனக்கு லிஃப்ட் தர முடியுமா?'' ஆதவனிடம் வினவினாள் சுகந்தி.

''ஷ்யர்நாட்! கம்... லெட்ஸ் கோ! தேங்க்யூ ப்ரஷா! பை!'' என்றபடி வெளியேறினான் அவன்.

ஏனோ இதயம் சுருங்கி விட, புரியாத ஒரு வெற்றிடம் உள்ளே ஆக்ரமித்தது.

இருவரும் ஜோடியாகச் செல்வதைப் பார்த்தால் ஏனோ பொறாமையாய்.. சுகந்தியின் உடை வேறு பெரும் நெருடலாய்!

அன்று வெள்ளி என்பதால், கேஷுவல் உடைக்காக ஸ்கர்ட்டும், லோகட் பனியனும் அணிந்திருந்தவளைப் பார்த்தாலே, கூசிப் போனது!

ஆண்கள் இருக்கும் இடத்தில் மரியாதையின்றித் தெரிந்த உடை, அவள் மனதையும் கண்ணாடியாய் பிரதிபலிப்பது புரிந்தது.

இதுபோல் உடையணிந்து ஆண்களிடம் தூண்டி விடுவது போல் பேசிப் பழகி, பிறகு அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று சில பெண்கள் புகார் கூறுவதை அவளால் ஏற்கவே முடிவதில்லை.

நாம் அணியும் உடையிலும், பேசிப் பழகும் விதத்திலும் ஒரு விதக் கட்டுப்பாடும் பண்பாடும் இருக்க வேண்டுமென்ற கொள்கை உடையவள் அவள்!

ஒரு பெருமூச்சுடன் உசேனுடன் வெளியே வந்த போது, அவனும் அதையே வழி மொழிந்தான்.

''சே! இந்த சுகந்திக்கு ஏன் இப்படி ஒரு கேவலமான ட்ரஸ் சென்ஸ்! அதோட ஆதவன் சாரை எப்படியாவது தன் கைக்குள்ளே போட்டுக்கணும்னு அவளும் ட்ரை பண்றா! அதுவும் முடியலியா? அதுக்குத் தடையா இப்ப நீ வந்துடுவியோன்னு பயம் வேற! அதான் அவரையே சுத்தி சுத்தி வரா!

''அவளுக்குத் தெரியலை! சைட் அடிக்கிற விஷயத்தில எல்லா ஆண்களும் எப்படியோ.... ஆனா தனக்கு வரப்போற மனைவி மட்டும் கொஞ்சம் அடக்கமா,



ரொம்ப ஒழுக்கமா இருக்கறதைத்தான் அவங்க விரும்புவாங்க... என்னைப் பொறுத்த வரைக்கும் நான் அப்படித்தான்!'' சிறு புன்னகையுடன் முடித்தான்.

அதற்கு எந்த பதிலும் கூறாமல் அமைதியாக யோசித்த படியே ப்ரஷா கீழே வந்தபோதோ, கார் பார்க்கிங்கில் குரு சீற்றத்துடன் கத்திக் கொண்டிருக்க, ஆதவன்தான் அவனை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

இருவரும் பதட்டத்துடன் ஓடி என்னவென்று விசாரித்தபோது, குரு கோபமாய் அவளிடம் திரும்பினான்.

''என்னவா? ஒரு பர்த்டே பார்ட்டி குடுத்து என்னை அவமானப்படுத்திட்டே இல்லை? உன் ஓடு காலி ஃப்ரெண்ட் இருக்காளே.. அவகிட்டயே போய்க் கேளு!''

அடிக்குரலில் சீறினான்.

புரியாமல் விழித்தபடி உறைந்து நின்றவளை, அருகே வந்து தோளில் தட்டி சமாதானப்படுத்தினான், ஆதவன்!

''ஷ்... போதும் குரு... ஏன், ஊர்மிளா மேல இருக்கற கோபத்தை இவ மேலக் காட்டறே! பிஹேவ் யுவர் செல்ஃப்... முதல்லே நீ கிளம்பு!'' அதட்டியபடி கிளப்பி அனுப்பினான்.

ஒன்றும் புரியாமல் உசேனும் பதறி நிற்க, சுகந்தியைக் காணவில்லை!

''சுகந்தி எங்கே?''

பதட்டத்துடன் வினவியவளிடம், ''அவளை ஆட்டோ வுல போகச் சொல்லிட்டேன்! நீ கிளம்பு! லேட்டாகுது! இல்லை... வேண்டாம்!'' என்றவன் டிரைவரிடம் திரும்பி னான்.

''மாணிக்கம் அண்ணன்! நீங்க அந்த ஸ்கூட்டியை எடுத்துக்கிட்டுப் பின்னாடியே வாங்க! நாம இவங்களை வீட்டில் ட்ராப் பண்ணிட்டுப் போகலாம்!''

அவளிடம் சாவிக்காக கை நீட்டினான்.

''இல்லை... உங்களுக்கு எதுக்கு சிரமம்? நான் போயிடுவேன்!''

அவள் தவிப்புடன் கூறும்போதே, சட்டென்று இடை மறித்தான் அவன்.

''போதும் ப்ரஷா! சில நேரங்கள்லே நான் சொல் றதையும் கொஞ்சம் கேக்கலாம்...! எல்லாத்துக்கும் என்னை எதிர்த்து எதிர்மறையாப் பேசணும்கிற அவசிய மில்லை! நான் நல்லதுக்குத்தான் சொல்வேன்னு முதல்லே என் மேல நம்பிக்கை வை!''

சிறு கசப்பும் கூர்மையுமாய் அவன் கூற, வாயடைத்துப் போயிற்று அவளுக்கு!

எதிர்த்து எதுவும் பேசாமல், சாவியை அவனிடம் கொடுத்துவிட்டு உசேனிடம் மெல்லத் தலையசைத்து விடைபெற்று, ஆதவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

பிறகு காரிலும் அந்த அமைதியே தொடர, குருவின் வார்த்தைகள் வாள் கொண்டு அவள் இதயத்தை அறுத்தன!

அப்படியென்றால் குருதான் ஊர்மிளாவின் கணவனா? அது தான் முதல் நாளே இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி அதிர்ந்து விழித்தனரா?

இந்த வாரம் முழுவதும் குரு கோபமாகவே செயல் பட்டதற்குக் காரணம் ஊர்மியா? அவர்கள் வாழ்க்கையில் என்ன நடந்தது?



பல கேள்விகள், குழப்பமும், சஞ்சலமுமாய் அவளை ஆக்ரமித்தன!

* * *

திடீரென்று ஒலித்த ஆதவனின் குரல், அவளைக் கலைத்தது!

''சாரி ப்ரஷா! பர்த்டே அன்னிக்கு உனக்கு இந்த மாதிரி உன் சந்தோஷம் குறையறாப் போல நடந்துடுச்சின்னு நினைச்சா வருத்தமா இருக்கு!''

மெல்ல நிறுத்தினான்.

உடனே நிமிர்ந்தவள், ''அதுக்கு ஏன் சார் நீங்க சாரி சொல்றீங்க..? குருவுக்கு ஏதோ கோபம் பாவம்! ஆனா, ஊர்மிதான் அவர் மனைவின்னு எனக்குத் தெரியாது!'' தவிப்புடன் மொழிந்தாள்.

''ஓ! உன் ஃப்ரெண்ட் உன்கிட்ட எதுவுமே சொல்ல லியா?''

''இல்லை... பர்சனலாய் பேசவே, இது வரைக்கும் எங்களுக்கு நேரம் கிடைக்கலை...

''இந்த வீக் எண்ட்தான் என் ஃப்ளாட்டுக்கு வரேன்னு சொல்லியிருந்தா.. மனசு விட்டு நிறையப் பேசணும்னும் சொன்னா'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

உடனே காரை நிறுத்தி அவள் கையை ஆதரவாகப் பற்றியவன், ''ஓகே.. லீவ் இட்! உன் பர்த்டே முடிய இன் னும் சில மணி நேரங்கள்தான் இருக்கு! அது வரைக்கும் வேற எதையும் நினைக்காம நீ சந்தோஷமா இருக்கணும்.. அதுதான் எனக்கு வேணும்!''

மிருதுவான குரலில், அவளையே ஊடுருவியபடி கூறினான்.

''தேங்க்ஸ்!''

உணர்ச்சிகள் நிரம்பிய குரலில் அவள் முணுமுணுக்க, ஆதவன் விழிகளை ஆழ்ந்து நோக்கி தன் பார்வையை அவளுள் பதித்தான்.

பிறகு, ''ஐ ஹோப் யூ ஹேவ் எ நைஸ் டே பேபி!'' என்றபடி ஒரு சிறு அட்டைப் பெட்டியை அவளிடம் அளித்தான்.

''இது... எதுக்கு?''

வாங்க மறுத்தவளிடம், ''இன்னிக்கு உன் பர்த்டே! கிஃப்ட் கொடுத்தா வாங்கிக்கணும்! நோ சொல்லக் கூடாது! என்கிட்ட 'நோ' சொல்றவங்களை.. எனக்குப் பிடிக்காது!''

அடிக்குரலில் எச்சரித்தாலும், குறும்புடன் கண் சிமிட்டி அவன் சிரித்தபோது, அவளுக்குள் எதுவோ பிறழ்வது போல்!

''இன்று ஏன் இவனை இப்படி ரசிக்கிறது மனது? எனக்கு என்னவாயிற்று? இவனிடம் என்னை இழந்து தோற்று விடுவேனா நான்.. இல்லை.. கூடாது! எந்த சந்தர்ப்பத்திலும் என்னை யாரும் சரித்து வீழ்த்த முடியாது!''

உள்ளே ஒரு மௌன யுத்தமே நடக்க, தன்னிலை உணர்ந்த தவிப்பில் ஸ்தம்பித்து அமர்ந்திருந்தாள் அவள்.

''ஏய்.. என்ன.. கண் முழிச்சிட்டே தூங்கறியா.. என்ன?''



அவன் முன் சொடுக்குப் போட்டு நினைவுகளைக் கலைத்தான் அவன்!

செவியில் அவன் குரல் தேன் கவிதையாய் இனிமை யாய்ப் படர்ந்தது.

''ம்.. இல்லை... ஏதோ ஞாபகம்!'' தவிப்புடன் பகர்ந் தாள்.

''அதிலே.. ஒரு சின்னத் துளியாவாவது நான் இருக்கேனா?''

அவன் கேள்வியில் விதிர்த்துப்போய் விழித்தாள் அவள்!

உடனே உள்ளார்ந்த முறுவலுடன் திரும்பி அவன் காரை எடுக்க, *சீக்கிரமே* வீடு வந்துவிட்டது.

அவனிடம் விடைபெற்று அவள் கீழிறங்க, ''என்னை உன் ஃப்ளாட்டுக்கு கூப்பிட மாட்டியா ப்ரஷா?''

அவன் சிறு முகவாட்டத்துடன் கேட்க, இதயம் சட்டென்று கனத்துப் போனது!

''வாங்க சார்! ப்ளீஸ்!'' குற்றவுணர்வுடன் அழைத்தாள்.

காரைவிட்டு மெதுவாக இறங்கியவன், ''இல்லை! இப்ப வேண்டாம்! ஒரு நாள் வருவேன்... அப்போ இதே மாதிரி என்னை வரவேற்றா சந்தோஷப்படுவேன்!''

புரியாத குரலில் கூறிவிட்டு, ''குட்நைட்!'' என்று விடைபெற்றான்.

மாணிக்கம் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டுக் காரை எடுக்க, இருவரும் கிளம்பினர்.

* * *



# 6

அன்றிரவு!

அவனுடைய பரிசைப் பார்த்ததிலிருந்து, அவளுக்கு உறக்கமே வரவில்லை!

அழகிய சிறு ப்ளாட்டினம் தோடு ஒன்று அந்த அட்டைப் பெட்டியிலிருக்க, அதன் மதிப்பு புரிந்து அதிர்ந்தது மனது!

ஏனோ அதை அவனிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் போல்!

ஆனால் அதை அவன் எப்படி எடுத்துக் கொள்வானோவென்ற பயமும் வந்தது!

உறக்கத்திலும் அவனுடைய கூர்ந்த பார்வையும், குறும்புச் சிரிப்பும், சீண்டல் கண் சிமிட்டலுமே கனவுகளில் பரவி நர்த்தனம் செய்தன!

மறுநாள்... சனிக்கிழமை விடுமுறை என்பதால் வீட்டை சுத்தம் செய்து படுக்கை உறைகளை மாற்றிய பிறகு, தலை குளித்துவிட்டு, ஓய்ந்து அமர்ந்திருந்தாள் ப்ரஷா!

நாளை ஊர்மிளாவை வீட்டிற்கு அழைக்க வேண்டுமென்று நினைக்கும் போதே அழைப்புமணி ஒலித்தது.

யாராக இருக்குமென்ற யோசனையுடன் எழுந்தபோதே, ஹோட்டலில் மதிய உணவு ஆர்டர் செய்திருந்தது நினைவு வந்தது.



அந்த எதிர்பார்ப்பில் கதவைத் திறந்தவளின் முகம், இன்ப அதிர்ச்சியில் விரிந்தது.

''வா.. ஊர்மி! இப்பதான் உன்னைப் பத்தி நினைச்சிட்டிருந்தேன்! ரொம்ப சந்தோஷமா இருக்கு!'' ஆர்வத்துடன் அணைத்து வரவேற்றாள்.

ஆனால், கலங்கிச் சிவந்த முகமும், ஓய்ந்த தோற்றமுமாய் உள்ளே வந்து அமர்ந்தாள் அவள்.

உடனே உள்ளே சென்று பழரசத்தை எடுத்து வந்து தோழியிடம் அளித்தவள், ஹோட்டலுக்கு போன் செய்து இன்னொரு சாப்பாட்டையும் சேர்த்து எடுத்து வரும்படிக் கூறிவிட்டு, அவளருகே அமர்ந்தாள்.

''என்ன ஊர்மி.. நேத்து என்னாச்சு? ஏன் டல்லா இருக்கே?''

மெல்ல விசாரித்தபோது பெரும் விம்மலுடன் அழ ஆரம்பித்தாள் அவள்!

பிறகு அவள் கூறிய விபரங்கள், ப்ரஷாவின் தலையில் இடியாய் இறங்கின!

ஊர்மிளாவின் உள்ளக் கதவு மெல்லத் திறக்க.. உணர்வுகள் கடந்த காலத்திற்குள் பயணித்தன!

* * *

சென்னையில் ஹாஸ்டலில் தங்கி, அவள் என்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்தபோதுதான், குருவைத் தன் சீனியர் மாணவன் என்ற முறையில் சந்தித்தாள் அவள்.

அப்போது குரு 'எம்.எஸ்.' படிக்க, அவன் யுனிவர்சிடி ரேங்க் ஹோல்டர் என்பதால் பாட சம்பந்தமான சந்தேகங்களைக் கேட்க அணுகியபோதுதான், நட்பாகி இருவருமே காதலிக்க ஆரம்பித்தனர்.

பிரிய மனமின்றி இரு வருடங்களாகக் காதலித்த நிலையில் தான், ஒரு நாள் அந்த குண்டைத் தூக்கிப் போட்டான் குரு!

அன்று கல்லூரிக்கு வந்தவளிடம், பெரும் அலைப் புறுதலும் பரபரப்பும் தெரிய என்னவென்று விசாரித்தாள் அவள்.

சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தவன், ''எங்க மாமா நேத்து வீட்டுக்கு வந்திருந்தாரு ஊர்மி! வேதா ரண்யத்துல பெரிய பிக்ஷாட் அவரு! அவர் பொண் ணுக்கு என்னைப் பேசி முடிக்கணும்னு வந்திருக்காரு.''

''அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம்! நாங்க நார்மலான மிடில்கிளாஸ் குடும்பம்தான்கிறதால, எங்களுக்குள்ளே அவ்வளவா தொடர்பில்லாம இருந்தது... அவங்க எல்லாரும் இங்கே அவ்வளவா வந்து போறதில்லை!''

''இப்ப நான் படிச்சிட்டேனா.. அதான்! வீட்டில முடி யாதுன்னு நான் சொன்னவுடனே ஒரே சண்டை! அம்மா ரொம்ப கோபப்பட்டாங்க... என்ன செய்யறதுன்னே தெரியலை!''

தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்தபடி, சோகத்துடன் அமர்ந்திருந்தவனைப் பார்த்தால் பரிதாப மாய்!

''அவங்க உணர்வுகளையும் நாம புரிஞ்சிக்கணும் குரு! தன் அண்ணன் பொண்ணை நீங்க கல்யாணம் செஞ் சுக்கணும்னு அவங்க ஆசைப்படறதிலே தப்பில் லையே!''

மெல்லிய குரலில் அவள் கூற, சீற்றத்துடன் நிமிர்ந் தான் அவன்!



''அப்போ, அந்தப் பட்டிக்காட்டையே கல்யாணம் செஞ் சிக்க சொல்றியா?'' உறுத்த விழிகளுடன் கத்தினான்.

உடனே விதிர்த்துப் போனவள், ''நான் அப்படிச் சொல்லலை குரு! அவங்களுக்குப் புரிய வைக்கலா மேன்னு சொல்றேன்!'' என்றாள் தயக்கத்துடன்.

''எல்லாம் குட்டிச் சுவரிலே முட்டிக்கிட்ட மாதிரித் தான்! பாப்போம்! முடியலைன்னா நான் ஒரு முடிவெடுத் திருக்கேன்!''

அவன் நிறுத்தியதும், அங்கு நிலவிய அசர அமைதி அவளால் சகிக்க முடியாததாய்!

''என்ன முடிவு?''

மேலே பேச முடியாமல், இதயம் வாய்க்கு வந்து துடித்தது!

''நாம ரெண்டு பேரும் வீட்டுக்குத் தெரியாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்க வேண்டியதுதான்!''

''அதெப்படி முடியும் குரு? ரெண்டு பேரோட அம்மா அம்மா சம்மதம் இல்லாம.. தப்பில்லையா?'' கவலை யுடன் கேட்டாள் அவள்!

''அது தப்புன்னு நினைச்சா தப்பு! நம்ம மனசுக்கு சரின்னு பட்டதை செய்வோம்! மத்தவங்களைப் பத்தி எனக்கு கவலையில்லை! எனக்கு என் விருப்பம்தான் முக்கியம்!''

ஆணித்தரமாக முடித்தவனைப் பார்த்தால், அவளுக் குள் பெரும் கவலை எழுவதாய்!

''சரி.. உங்க வீட்டில பேசிப் பாருங்க.. அப்புறம் முடி வெடுக்கலாம்!''

அவனை ஆறுதல்படுத்தி அனுப்பி வைத்தாள் அவள்.

மறுநாளே பெரும் கோபத்துடன் வந்தவன், ரிஜிஸ்டர் கல்யாணத்திற்கான ஏற்பாடுகளை எல்லாம் உடனே செய்ய ஆரம்பித்தான்.

முதலில் அங்கு பதிவு செய்து வைத்து, அடுத்த வாரமே இருவரும் நண்பர்களின் துணையுடன் மணம் முடித்தனர்.

அப்படியே கோயிலுக்கு சென்று திருமாங்கல்யம் அணிவித்துவிட்டு குருவின் வீட்டிற்குப் போனபோது, தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார் அவன் தாய் மகா!

''என் தலையில் இப்படிக் கல்லைத் தூக்கிப்போட்டுட்டியேடா! உன் மாமாவுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்! எவ்வளவு அழுத்தமா நிக்கறா பாரு! இந்த ரம்பை தான் உன்னை மயக்கி கைக்குள்ளே போட்டுக் கிட்டவளா?''

''என் ஆசையில மண் அள்ளிப் போட்டுட்டு நீங்க நல்லாவே இருக்க மாட்டீங்க!''

மகா அந்தத் தெருவே அதிரும்படிக் கத்த, பலர் வெளியில் வந்து என்னவென்று எட்டிப் பார்த்தனர்.

''அம்மா! முதல்லே உள்ளே போகலாம்! தெருவே வேடிக்கை பாக்குது பாருங்க!''

அவன் அதட்டும்போதே டிரைவர் முருகன் ஓடி வந்தான்.

''அம்மா! அவங்க உள்ளே வரட்டும்மா.. அப்பறம் பேசிக்கலாமே!'' மெதுவாகக் கூறினான்.



ஏற்கனவே தன் மகன் முதன்முறையாக அதட்டிய கோபத்திலிருந்தவர், ''சீ... வாயை மூடிட்டு வெளியே போடா! வந்துட்டான் வக்காலத்து வாங்க!''

அவனிடம் எரிந்து விழுந்து விட்டு அரற்றியபடியே உள்ளே சென்றார்.

பிறகு இருவருமாக அவரைப் பின் தொடர, முதலில் பூஜையறைக்குச் சென்று வணங்கிவிட்டு, மகாவையும் இருவரும் நமஸ்கரித்தனர்.

ஆனால் அவர் வீம்பும் பிடிவாதமுமாக விலகிச் சென்று, தன் அறைக்குள் புகுந்து கதவை அழுந்த சாத்திக் கொண்டார்.

ஒரு பெருமூச்சுடன் அவளைத் தன் அறைக்கு அழைத்துப் போனவன், ''இது தான் இனிமே நம்ம அந்தப்புரம்! உனக்குப் பிடிச்சிருக்கா?''

காதருகில் செல்லச் சிணுங்லுடன் கேட்டான்.

பருத்திக் காடாய் மனம் மகிழ்ச்சியில் வெடிக்க, மெதுவாகத் தலையசைத்தாள் அவள்.

''இன்னிக்கு நம்ம ஃபர்ஸ்ட் நைட்.. தெரியுமா?''

குறும்புடன் கேட்டவனிடம், உடனே மறுத்தாள் அவள்!

''ஊஹூம்! நம்ம ரெண்டு பேர் வீட்டிலயும் எப்ப நம்ம கல்யாணத்தை ஏத்துக்கிறாங்களோ, அன்னிக்குத்தான் நம்ப சாந்தி முகூர்த்தம்!'' உறுதியுடன் முடித்தாள்.

''அய்யோ! அதக்குள்ளே நமக்கு வயசாயிடும்.. என்னால முடியாதும்மா!''

ஏக்கத்துடன் அவளைப் பிடித்து இழுத்துத் தன் மேல் சரித்தவனைத் தள்ளி விட்டு வெளியே ஓடினாள் அவள்.

பிறகு அவளை மீதமிருந்த ஒரு விருந்தினர் அறையில் தங்க வைத்தவன், தாயை நாடிச் சென்றான்.

அவன் என்ன கூறினானோ, சிறிது நேரம் கழித்து வெளியே வந்தவர், நேராக ஹாலில் அமர்ந்திருந்த ஊர்மிளாவிடம் வந்தார்.

''இங்கே பாரு! முதல்லே உன் வீட்டுக்குப் போயி அவங்க சம்மதத்தை வாங்கிட்டு வாங்க! அப்புறம் என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம்! கிளம்புங்க!'' என்று அவர்களை ஊருக்கு அனுப்புவதிலேயே குறியாக இருந்தார்.



## 7

அன்றே கிளம்பி இருவரும் நாகர்கோவிலுக்குச் சென்றபோது, விடியலில் அந்த ஊரே ரம்யமாய் விழிக்க ஆரம்பித்தது.

அந்த அதிகாலை வேளையில், ஜோடியாக நுழைந்த இருவரையும் கண்டதுமே, சிவநேசனுக்கு எல்லாம் புரிந்து போனது!

மகளை இழுத்துக் கீழே தள்ளி, இடுப்பிலிருந்த பெல்ட்டால் விளாச ஆரம்பித்தவரை, குருதான் தடுத்தான்!



''விடுறா.. அவ என் மக! நீ யாரு என்னைத் தடுக்க...''

கோபாவேசத்துடன் கத்தியவரைப் பிடித்துத் தள்ளி ஊர்மிளாவை எழுப்பிக் காப்பாத்தியவன், அவரை ஒரே வார்த்தையில் வீழ்த்தினான்!

''அவ என் மனைவி!''

அந்த வார்த்தையில் துடிதுடித்து போனார் சிவநேசன்!

''அடி ஓடுகாலி! நம்ம ஜாதிக்கே பெரிய அவமானத்தைத் தேடித் தந்துட்டியே! அவன் குலம் கோத்திரம் என்னன்னு தெரியுமா?

''ஊருக்கே பெரிய தலையாச்சே நான்! இனிமே எவன் என்ன மதிப்பான்?

''நம்ம ஜாதிக் கட்டுமானம் என்னாகிறது? உனக்கு உன் சுகம் தான் பெரிசாப் போச்சில்லே!''

அவர் கத்தும்போதே, அந்தப் பெரிய வீட்டின் பின்புறத்திலிருந்து ஓடி வந்து மகளைக் கட்டிக் கொண்டு அழுதார் தாமரை!

அதே நேரம், அவளுடைய அண்ணன் சந்திரனும் அவன் மனைவியும் எழுந்து முன்புற ஹாலுக்கு ஓடி வந்தனர்.

அனைவரும் உறைந்து நிற்கும்போதே, அந்தக் கொடிய தீர்ப்பை வழங்கினார் அவர்.

''என்னை பொறுத்தவரைக்கும் என் மக செத்துட்டா! இவ என் பொண்ணு இல்லை! என் சொத்துல இவளுக்கு ஒரு பைசா குடுக்க மாட்டேன்...''

''முதல்லே ரெண்டு பேரும் வெளியே போங்க.. இன்னியோட எங்களுக்கும் உனக்கும் நடுவில இருந்த

உறவு அறுந்து போச்சு! நீ நல்லா இருக்க மாட்டே... என் சாவுக்குக் கூட நீ வரக்கூடாது!''

பொங்கி எழுந்து சாபம் விட்டவர், அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி கதவை சாற்ற, குருவின் மார்பில் சாய்ந்து விம்ம ஆரம்பித்தாள் ஊர்மிளா!

அவளை ஆறுதல்படுத்தியவன், தங்களுக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்க முடியாமல், உடனே சென்னைக்கு அவளை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

அன்றிரவே இருவரும் சென்னையை அடைந்தாலும், மன உளைச்சலிலும் களைப்பிலும் ஓய்ந்து போயிருந்தனர்.

விபரத்தைக் கேள்விப்பட்ட மகாவும், அதிர்ச்சியுடன் மூலையில் முடங்கிவிட்டார்.

* * *

மறுநாளே ஹாஸ்டலிலிருந்து ஊர்மி தன் பொருட்களை எடுத்து வந்தாலும், அவளால் அங்கு இயல்பாகவே ஒன்ற முடியவில்லை.

அந்த வாரக் கடைசியிலேயே, எளிமையாக ஒரு ரிசப்ஷன் நடக்க, அன்றிரவே முதலிரவுக்கும் ஏற்பாடானது.

ஆனால், அந்த ஒரு வாரமும் மகா அவளிடம் முகம் கொடுத்துக் கூட பேசவில்லை!

முதலிரவு அன்று, குரு அவளிடம் சொன்ன முதல் வார்த்தையே அவள் வேத வாக்காய்!

''ஊர்மி! அம்மா ஏதாவது சொன்னா நீதான் பொறுத்துப் போகணும்! உங்க வீட்டிலயும் நம்மை ஏத்துக்கலை!



அம்மாவாவது நம்மை ஏத்துக்கிட்டு வீட்டுக்குள்ளே அனுமதிச்சி இந்த அளவுக்காவது இறங்கி வந்தாங்களேன்னு நிம்மதியா இருக்கு!

''உன் படிப்பும் இன்னும் ரெண்டு மாசம் இருக்கு..! எனக்கும் முடிய மூணு மாசம் ஆகும்.. இப்பவே கேம்பஸ் இண்டர்வியூவில செலக்ட் ஆயிட்டாலும் நாம செட்டில் ஆக எப்படியும் ஒரு ஆறு மாசமாவது ஆகும்!''

''அதனால அம்மாவை கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க! ப்ளீஸ்!'' என்றபடி அவளை அணைத்து தன் வசமாக்கிக் கொண்டான்.



# 8

மறுநாளிலிருந்துதான் அவளுக்கு பெரும் சோதனைகள் ஆரம்பமாயின!

அவை, அவளுடைய தைரியத்தை அழித்து முதுகெலும்பில்லாதவளாய் மாற்றின!

அங்கிருந்தே, இருவரும் காரில் கல்லூரி சென்று வர ஏற்பாடானது.

அதிகாலையில் கதவைத் தட்டி அவளை எழுப்பிய மகா, அலட்சியமாக அவளைப் பின்புறம் அழைத்துச் சென்றார்.

"இனிமே வேலைக்காரி வர மாட்டாளாம்.. அதனால தம்பி எழுந்திரிக்கறதுக்கு முன்னாடி எழுந்து வந்து பாத்திரமெல்லாம் தேய்ச்சு வீடு பெருக்கி மெழுகி துணியெல்லாம் துவைச்சுட்டு தான் காலேஜுக்குப் போகணும்! புரியுதா?"

"குருகிட்டே சொல்லி ஏதாவது திரிசமன் பண்ண லாமின்னு நினைச்சா அவ்வளவுதான்! நான் மனுஷி யாவே இருக்க மாட்டேன்.. என் பையனை என்கிட்ட யிருந்து பிரிச்சிட்டே இல்லை?"

கோபத்துடன் கூறிவிட்டு, வேகமாக உள்ளே சென்று விட்டார்.

உடனே போய் தலைக்கு குளித்து விட்டு வந்தவள், பாத்திரங்களை தேய்த்து இரு கூடைகளில் அடுக்கி உள்ளே எடுத்துப் போய் வைத்தபோது, சமையல்காரம்மா அவளைப் பரிதாபத்துடன் பார்ப்பது புரிந்தது.

விழியோரம் துளர்த்த நீரை அடக்கியவள், உடனே வீட்டைப் பெருக்கி "மாப்" செய்ய ஆரம்பித்தாள்.

அதற்குள் குளித்துவிட்டு வந்திருந்த மகா, எரிச்ச லுடன் அதட்டினார்.

"எவ்வளவு நேரம் பெருக்கித் துடைப்பே! உன்னை ஒண்ணுக்கும் உருப்படி இல்லாம வளர்த்து, நல்லா வெறும் கையோட அனுப்பியிருக்காங்க உன் வீட்டிலே!"

"சீக்கிரம்! என் மகன் மாடியிலேருந்து இறங்கி வாதுக் குள்ளே, நான் சொன்ன வேலையெல்லாம் முடிச்சிருக்கணும்!"

"இந்த மாதிரி மாப்பிள்ளை கிடைச்சு, நயா பைசா செலவில்லாம பொண்ணைத் தள்ளி விடணும்னே, இவங்க வீட்டுல காத்திட்டிருக்காங்க போலருக்கு! சே!"



வன்மத்துடன் முணுமுணுத்தபடி, அங்கிருந்து பூஜை யறைக்குள் சென்றார் அவர்.

அவமானத்தால் உடல் கூசி நின்றவள், வேகமாக வேலைகளை முடிக்க ஆரம்பித்தாள்.

பிறகு குரு எழுந்து வந்தபோது, பின்புறமிருந்தவளை அழைத்த மகா, இருவரையும் உட்கார வைத்து டிபன் பரிமாறினார்.

அவர் உள்ளே சென்றதும், "பாத்தியா எங்கம்மாவை? என்னவோ ரொம்ப பயந்தியே.. எவ்வளவு பாசமா இருக் காங்க பாத்தியா?"

குரு குறும்புடன் அவளுடைய இடுப்பைக் கிள்ளிய படிக் கேட்டான்.

அடிவயிற்றிலிருந்து பொங்கிய அழுகையை அடக் கியபடி தலையசைத்தாள் அவள்.

மனதிற்குள் பலத்த மௌன யுத்தம் நடக்க, கல் லூரிக்குச் சென்று திரும்பியதும், சாமர்த்தியமாக மாலை நேர சமையல் வேலையை அவள் தலையில் கட்ட ஆரம்பித்தார் அவர்.

"குரு! நம்ம வீட்டு சமையலை நானே பழக்கி விடப் போறேன் ஸார்மிக்கு! உனக்கு ஒண்ணும் ஆட்சேபணை யில்லையே?"

வாஞ்சையுடன் வினவியவரிடம், "நல்லதுதானேம்மா! மெதுவாகப் பழக்குங்க!" என்றான் புன்னகையுடன்!

அன்றிலிருந்து மாலையில் டிபன் வேலை, பாத்திரம் தேய்ப்பது துணி மடிப்பது, என்று, அவளை எங்கும் அவர் நகரவே விடவில்லை!

இரவில் அலுத்துக் களைத்து படுக்க வருபவள், அவனிடம் ஏதும் கூறுவதில்லை!

முதல் நாள் அவன் கூறிய நினைவில், சிறிது நாட்கள் போனால் எல்லாமே சரியாகி விடும் என்று நினைத்து, அமைதியாக தன்னை அடக்கி எல்லா வேலைகளையும் செய்யப் பழகிக் கொண்டாள்.

மேலும் சில நாட்களிலேயே சமையல்காரம்மாவும் நிறுத்தப்பட, அவளுக்கோ ஒன்றுமே முடியவில்லை.

அதிகாலையில் எழுந்ததிலிருந்து வேலை நெட்டி முறிய, மாலையிலும் இதுவே தொடர்ந்தது.

அவளாக எதுவும் கூறாததாலும், காலையில் ஏழு மணிக்கு எழுந்து வருபவன், தாயும் அவளும் ஒற்றுமை யாக சமைப்பதைப் பார்த்துவிட்டு, பெருமிதத்துடன் அகன்று விடுவான்.

அவன் இறங்கிவரும் நேரம் வேலை செய்வது போல் மகா பாவ்லா செய்து சமையலறைக்குள் நிற்பதையும், பிறகு அவன் தயாராகி வந்ததும் இருவரையும் அமர வைத்து சாப்பாடு பரிமாறுவதையும், நடிப்பென்று அவளால் தைரியமாகக் கூற இயலாது போயிற்று!

வாழ்க்கை இப்படியே ஒரு வித இயலாமையுடன் பயணிக்க, அவளைத் தனிமையில் மகா வார்த்தைகளில் அசிங்கப்படுத்தி வதைப்பது மட்டும் வாடிக்கையானது.

''எப்படித்தான் இப்படி வெத்துக் கையோட பொண்ணை அனுப்ப மனசு வந்ததோ இந்த சம்பந்தி வீட்டிலே.. சீ! என்னைப் பொறுத்தவரை நீ இங்கே வேலைக்காரிதான்!



மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல், அவர் வார்த்தைகளைக் கேட்டு அடக்கிய கண்ணீருடன், அவள் தவிப்பாள்.

அவருடைய சுடுசொற்களும் குத்தல் பேச்சும் பழகிப் போய்விட, புழுவை விடக் கேவலமாக அவர் மருமகளை நடத்த, வாய்மூடி மௌனியாக தனக்குள்ளேயே உருகிக் கரைந்து போனவளின் படிப்பும் ஒரு வழியாக முடிந்தது.

ஒரு நாள்... ''நம்ம ஊர்மிளையைப் பாருப்பா! தன் கையா லேயே உனக்கு சமைச்சிப் போடணுமாம்.. அதனால சமையலுக்கு வேற ஆளை ஏற்பாடு பண்ணினா வேண் டாம்கிறா.. ஏம்மா ஊர்மி?''

அவர் கேட்க, அவள் தர்ம சங்கடத்துடன் தலை யசைக்க, அவனோ மனைவி தன் மேல் வைத்துள்ள அன்பையும், தாய்க்கு தன் மனைவியிடம் உள்ள கரிசனத்தையும் எண்ணி பூரித்துப் போனான்.

அவளுக்குத்தான் உடல் இற்று விடும்போல் ஓய்ந் திருந்தது.

குருவிற்குத் தன் தாயின் திட்டங்களும், அவருடைய குரோத மனப்பான்மையும் புரியவே இல்லை!

அந்த அளவு, அவனெதிரில் அவளை தன் சொந்த மகள் போல் நடத்தி, ஒரு கை தேர்ந்த நடிகையாய் மாறி இருந்தார் மகா.

தன் தாயைப் பற்றி பெருமையுடன் அவன் பேசும் போது எல்லாம், தவிப்புடன் தலையசைப்பது மட்டுமே அவளின் வழக்கமாயிற்று.

* * *

அப்போது தான் குருவிற்கு வேலை கிடைத்து ஆறு மாத ட்ரெயினிங்கிற்காக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் வந்தது.

அவளுக்கோ பயமாய்.. அவன் இருக்கும்போதே இப்படி அவளை சித்ரவதை செய்பவள்.. அவன் சென்று விட்டால்.. குலையே நடுங்கிப்போயிற்று.

ஆனால் அவன் வளர்ச்சியைத் தடுக்கவும் மனசில்லை.

பிறகு அவனும் பிரியாவிடை பெற்று அமெரிக்காவிற்குக் கிளம்பி விட்டான்.

எப்படியாவது அந்த ஆறு மாதத்தை சமாளித்து கடந்துவிட முடிவு செய்தவளுக்கு மகாவின் சதித் திட்டம் புரியவில்லை!

அவளுடைய கொடுமைகள் அதிகமாக, அப்போது தான் அவளுடைய தாய் தாமரை இறந்ததாகத் தகவல் வந்தது.

தன் தாயின் இழப்பைத் தாங்க முடியாமல், குற்றவுணர்வுடன் அரற்றியபடி ஊருக்குக் கிளம்பினாள் அவள்.

அவளிடம், அன்றுதான் சிறிது ஆதரவாகப் பேசினார் மகா!

''இப்போ.. உன்னைத் தனியாவும் அனுப்ப முடியாது! அப்படியே நான் வந்தாலும் உங்க வீட்டில ஏதாவது அவமானப்படுத்தினா, நான் தாங்க மாட்டேன்!

''அதனால நான் முருகனை உன்கூட வரச் சொல்றேன்! போயிட்டு மெதுவாவே வா!''

முதன் முதலாகப் பரிவுடன் அவர் பேசுவதாக எண்ணியவளுக்கு, மகாவின் சதி புரியவில்லை.



துணைக்கு தன் வீட்டு டிரைவர் முருகனையும் அனுப்பிய மகா, அன்றிரவு பேசிய குருவிடம் அழ ஆரம்பித்து விட்டார்.

''குரு! நீ நினைக்கிற மாதிரி அந்தப் பொண்ணு இல்லைப்பா! நீ வேற இங்கே இல்லையா? பாவமாச் சேன்னு நானும் என் சொந்தப் பொண்ணு மாதிரிப் பார்த்துக்கிட்டேன்...''

''இப்பப் பாத்தா நம்ம டிரைவர் முருகன் இல்லை.. அவனோட தகாத உறவு வெச்சிருக்காப்பா!'' என்று கதை திரித்து விட்டார்.

அவனோ, நம்ப முடியாமல் அதிர்ந்து அம்மா கூறியதை ஏற்கவும் மனமின்றித் தடுமாறிப் போனான்.

அன்றே, அந்தத் தெரு முழுவதும் அவள் டிரைவருடன் ஓடி விட்டதாக ஒரு கதையைப் பரப்பி விட்டார் அவர்.

மகா அழைத்ததால், வேலைக்குத் திரும்பி வந்திருந்த சமையல்காரம்மாவிற்கோ மிகவும் கஷ்டமாய்!

அவர்தான், பிறகு இந்த விபரத்தையே ஊர்மிளாவிடம் கூறினார்.

தாயின் சாவுக்குச் சென்றவளை, அவர்கள் வீட்டிலும் ஏற்கவில்லை!

அவளுடைய அண்ணன் சந்திரன், அவளால்தான் தன் தாய்க்கு ஹார்ட் அட்டாக் வந்ததாகக் குறை கூறி, வாசலில் பிடித்துத் தள்ளி விரட்டி விட்டான்.

''ஓடுகாலி நாயே! அப்பாவுக்கு ஜாதிதானே உசுரு! அதைப் பெரிசா மதிக்காம எவனோ ஒரு வேத்து சாதிக்

காரனை இழுத்துட்டு ஓடினியே.. இப்ப அவனும் துரத்தி விட்டானா?''

''எனக்கும் சாதிதான் முக்கியம்.. எங்களைப் பொருத்த வரைக்கும் உன்னை எங்க ஜாதி ஜனத்திலிருந்து குடும் பத்திலிருந்து ஒதுக்கி வெச்சாச்சு? உன் ஒட்டும் வேணாம் உறவும் வேணாம்! வெளியே போ!''

அவன் அடிக்காத குறையாகத் துரத்த. அந்த ஊரே அதை வேடிக்கை பார்த்தது.

ஓய்ந்து போய் தூரத்திலேயே இருந்து தாயின் இறுதி யாத்திரையைக் கண்டவள், தலை சுற்றி மயங்கி விழ, முருகன்தான் உடனே அவளை டாக்டரிடம் அழைத்துச் சென்றான்.

அப்போதுதான் அவளுக்கு நாட்கள் தள்ளிப்போய்க் கருத்தரித்திருப்பதை ஊர்ஜிதம் செய்தார் அந்த டாக்டர்!



## 9

ஊர்மிளா மகிழ்ச்சியுடன் ஊருக்குத் திரும்பி வந்த போதுதான், வாசலிலேயே அவர்களை விரட்டினார் மகா!

தெருவே சிரிக்க, அவர்களிருவருக்கும் தொடர்பிருப்ப தாகக் கத்தி ரகளை செய்து அசிங்கப்படுத்தினார்.

தன் துணிகளடங்கிய ஏர்பேக் மேலே வந்து விழ, அதிர்ச்சி தாங்காமல் அவள் மீண்டும் மயங்கிச் சரிய,



முருகனே ஒரு ஆட்டோவில் அவளை ஏற்றி மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றான்.

பிறகும், அவர்கள் குருவின் வீட்டிற்குச் சென்று பேசிய போது, தெருவே அவதூறு கூறி அவர்களை விரட்டியது.

இருவரும் வீட்டை விட்டு ஓடி விட்டதாக மகா கதை கட்டியிருந்ததால், எல்லோருமே அதைத் தான் நம்பினர்.

அவள் கூறியதை ஒருவர் கூட ஏற்காமல் போக, உடனே குருவிற்குத் தொடர்பு கொண்ட போதோ, அவனும் செல்லை எடுக்கவேயில்லை!

பிறகுதான், அவள் ஒரு முடிவெடுத்து வேகமாகக் கடற்கரைக்கு ஓடினாள்.

தன் உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர, வேறு வழி தெரியவில்லை!

ஆனால், அவளைத் தொடர்ந்த முருகன்தான், தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றி தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, அவளைத் தன் தாயிடம் ஒப்படைத் தான்.

அவன் தாயும் விபரமறிந்து அதிர்ந்தாலும், அவளுக்கு ஆறுதல் கூறி ஒரு மகளாகவே ஏற்றுக் கொண்டார்.

பிறகு அவள் கருத்தரித்திருப்பதை அறிந்தும், அவளை ஒரு குழந்தையாகவே கவனித்தார். தன் மகன் கூறியதைக் கேட்டதும் ஓய்ந்து போனது அவர் மனது!

அழுகையும் குமுறலுமாய் வந்திருந்தவளைத் தேற்ற அவருக்கு இரு மாதங்களாயிற்று.

முருகனுக்கு வேலையும் போயிருக்க, இப்போது லோன் போட்டு ஒரு அம்பாசடர் காரும் வாங்கியிருந்தான் அவன்.

ஒரு டிராவல்ஸ் ஆரம்பித்து, காரை வாடகைக்கு ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவனுடைய தொலைபேசி அழைப்புகள் எல்லாமே நிராகரிக்கப்பட, ஊர்மிளா குருவிற்கு அனுப்பிய கடிதங்களுக்கும் பதிலில்லை!

தாய் வீட்டிலும் நிராகரிக்கப்பட்டு, கணவன் வீட்டிலும் துரத்தப்பட்ட நிலையில், அவனும் அவளைப் புரிந்து கொள்ளவில்லை.

அழுதழுது உடல் மெலிந்து தான் கருவுற்றதையும் எழுதிப் போட்டிருந்தவள்,

ஆறுமாதக் கருவைச் சுமந்திருந்தபோதுதான், குருவின் வீட்டு சமையல்காரம்மா ஒரு நாள் அவளைத் தேடி வந்தார்.

குரு, தாய் நாட்டிற்குத் திரும்பி விட்டதைக் கூறியவர், அவர் தாயின் சதியையும் பற்றிக் கூற, அதிர்ந்து போனாள் ஊர்மிளா.

உடனே அவளும் முருகனுமாக அவன் காரிலேயே கிளம்பி குருவின் வீட்டுக்குச் சென்றனர்.

ஆனால், குருவோ அவளைக் கண்டதும் எரிமலையாகி சீற ஆரம்பித்தான்.

அதுவும் முருகனுடன் அவள் வந்து நிற்க, தகாத வார்த்தைகளாகக் கூசாமல் உதிர்த்தான்.

தன்னை ஏமாற்றிவிட்டு அவள் சென்ற துரோகம் அவனிடம் தெரிய, "சீ நீயும் ஒரு பெண்ணா! உன்னை விரும்பி தாலி கட்டி அழைச்சிட்டு வந்தப்ப, எங்கம்மா உன்னைத் தன் பொண்ணு மாதிரிப் பாத்துக்கிட்டாங்களே!



"இப்படி என்னை ஏமாத்திட்டு இவனோட தகாத உறவு வச்சி வயத்துல ஒரு குழந்தையோட என் முன்னாடி வந்து நிக்கறயே... வெக்கமா இல்லை?"

ரௌத்ரமாய் கன்றிச் சிவந்த முகத்துடன் கத்தினான்.

அப்படியே தன் உயிரை யாரோ வேரோடு பிடுங்கி எறிந்த வேதனையில், அடி வயிற்றைப் பிடித்தபடி அழ ஆரம்பித்தாள் ஊர்மிளா!

"அழாதீங்கம்மா... நாம பேசினா அய்யா புரிஞ்சிப் பாங்க!"

அவளை ஆறுதல் படுத்திய முருகனை ஏசியபடி வேகமாக ஓடி வந்து குரோதத்துடன் இழுத்துப் பிடித்து கீழே தள்ளி, ருத்ரதாண்டவம் ஆட ஆரம்பித்து விட்டான் குரு!

அவன் எந்தக் குற்றமும் செய்யாதவனாயிற்றே என்ற தவிப்புடன் பதறிப் போய் அவள் தடுக்க முயன்றாள்.

"சீ... எங்கம்மா சொன்னதைக் கூட நம்பாம, என் ஃப்ரெண்ட்ஸை விட்டு விசாரிச்சப்பதான் நீ இவனோட ஓடிப் போனது... குடித்தனம் நடத்தினதெல்லாம் தெரிஞ்சுது!"

கசப்பும் வெறுப்புமாய் அவள் சீற, "இல்லை... நான் ஓடிப் போகலை... எங்கம்மா சாவுக்குத் தான் போயிருந் தேன்!"

"ஓ... அதுக்கு இவன் துணை எதுக்கு?"

வக்ரமாகக் கேட்டவனிடம், "அத்தை தான் அனுப்பி னாங்க! அவங்க சொல்லித் தான் நான் போனேன்..." என்றதும், ஓடிவந்து காளி அவதாரம் எடுத்துக் கத்த ஆரம்பித்தார் மகா!

''பாத்தியாப்பா... நீ என்னை முதல்லே நம்பலை இல்லை? இப்ப புரியுதா இவ யோக்யதை! ஓடிப் போனவ ளோடவே வந்து நியாயம் கேட்டு நிக்கிறா பாரு! கெட்டழிஞ்ச சிறுக்கி!

''இவளைப் போய் நிறுத்தி வெச்சிப் பேசிட்டிருக்கே... அடிச்சித் தூரத்து! இல்லேன்னா என்னைப் பத்திக் கூட தப்பா பேசுவா!''

அவர் முடிப்பதற்குள், பொங்கி எழுந்தாள் ஊர்மி.

''ஆமாம்! நீங்க என்னைக் கொடுமைப்படுத்தின தையும் சொல்லத்தான் போறேன்!''

அவள் குரலை உயர்த்த, உடனே அவளை இழுத்து அறைந்து கீழே தள்ளினான் அவன்!

அப்படியும் அவள் மகா தன்னைப் படுத்திய பாட்டைப் பற்றி எடுத்துக் கூற, ரௌத்ரமாய்த் தடுத்தான்.

''சீ இனி ஒரு வார்த்தை என் அம்மாவைப் பத்திப் பேசினே... உன்னைக் கொன்னுடுவேன்! அவங்க உன்னை எப்படிப் பாத்துக்கிட்டாங்க... இப்பதான் புரியுது... ஆசைக்கு இவனும், ஆஸ்திக்கு நானும் உனக்கு வேணுமா?''

திராவகமாய் அவன் வார்த்தைகளை வீச, அதற்கு மேல் தாங்க முடியாமல் சுருண்டு சரிந்தாள் அவள்.

கீழே விழுந்து மயங்கியவளை, மெதுவாக எழுப்பி அழைத்துச் சென்று காரில் படுக்க வைத்தவன், நேராக குருவிடம் திரும்பி வந்தான்.

''சீ நீயும் ஒரு மனுஷனா? இந்தப் பொம்பளை சொல் றதைக் கேட்டுட்டு அற்புதமான அந்தப் பொண்ணைப்



போய் சந்தேகப்படறியே... ஒரு நாள் உண்மை உனக்குத் தெரிய வரும் பாரு!''

''எல்லாம் எனக்குத் தெரிஞ்சிடுச்சிடா! நீயும் அவளும் வெச்சிருந்த கள்ளத் தொடர்பு, அவ என் வீட்டிலிருந்து உனக்காகத் திருடிக் கொடுத்த மூணு லட்ச ரூபா, அதிலே நீ வாங்கின இந்தக் கார்... உன் குழந்தையை அவ சுமக்கறது எல்லாமே தெரியும்டா!''

''இங்கேருந்து நீ இப்பப் போகலை... போலீஸை கூப்பிடுவேன்... சீ!'' என்றபடி கதவை அறைந்து சாற்றி னான் அவன்!

# 10

பிறகு, காரின் பின் சீட்டில் மயக்கமாய் சாய்ந்திருந்த ஊர்மிளாவை, நேரே டாக்டரிடம் அழைத்துச் சென்றான் முருகன்.

மனம் பேதலித்த நிலையில் அவள் பிரமை பிடித்தாற் போலிருக்க, எத்தனை முறை சென்று குருவிடம் பேசியும் அவளுக்கு நியாயம் கிடைக்கவில்லை!

காலம் வேக முனைப்புடன் விரைய, தன் பிரசவத்தின் போது அவளுடைய அதிர்ச்சியும் தெளிய, குழந்தையின் முகத்தைப் பார்த்த பிறகே இயல்பானாள் அவள்.

பிறகு, குழந்தையே அவளுடைய வாழ்க்கையாகிப் போனது.

"சரயு" என்று அவளுக்குப் பெயரிட்டவள், மழலையே உலகமாகிப் போனாள்,

அப்படியே ஊர்மிளாவை உரித்து வைத்திருந்தவள், தந்தையின் அரவணைப்பின்றி அவன் முகம் பார்க்காமலே, வளர்ந்து தவழ ஆரம்பித்தாள்.

இப்போது, அவளுக்கு ஒன்றரை வயதாகிறது!

முருகனின் தாய் கோகிலாவிடம் அவளை ஒப் படைத்து விட்டுத் தான், ஊர்மிளா வேலைக்கு வர ஆரம்பித்திருக்கிறாள்.

அவரும், குழந்தையை ஒரு பொக்கிஷமாய் வளர்த்து வருகிறார்.

இந்த நிலையில், குருவை சந்தித்த பிறகுதான், அவள் வாழ்க்கையே தலை கீழாய்!

நேற்று முருகனுடன் அவளைக் கண்டதும், கொதித்துப் போன குரு, அவனை அடிக்கவே வந்து விட்டான்.

பிறகு அவள் தடுக்க, ஆதவன்தான் அந்த நிமிடம் அங்கு வந்து இருவரையும் பிரித்து விலக்கி அனுப்பி வைத்தான்!

ஒரு பெருமூச்சுடன் ஊர்மிளா தன் கதையைக் கூறி முடித்தபோது, ஒரு சுனாமியே பொங்கி வந்து தன் சேதங் களை விட்டுச் சென்றதைப் போல் உணர்ந்தாள் ப்ரஷா!





# 11

அந்த நிமிடம்... ஊர்மிளாவைப் பார்த்தபோது பரிதாபமாய்!

இவள்தான், வாழ்க்கையில் எவ்வளவு அடிபட்டிருக் கிறாள் என்று எண்ணும்போதே, தன்னுடைய மனக் காயங்களும் மறவாமல் ஞாபகம் வந்தன!

உடனே, அவளை அணைத்துத் தேற்றியவளுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

எப்படியாவது, குருவிற்கு உண்மையைப் புரிய வைத்து விட வேண்டுமென்ற வேகம் வருவதாய்!

"ஊர்மி! கவலைப்படாதே! எல்லாம் நல்லபடியா முடி யும்! குரு உன்னைப் புரிஞ்சிப்பாரு! நான் எப்படியாவது உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கிறேன்!"

ஒருவித ஆவேசத்துடன் கூறிவிட்டு, அவள் கையைப் பிடித்து அழுத்தினாள்.

ஆனால், அது நடக்காதென்பது போல் ஏக்கத்துடன் தலையசைத்து கண்ணீருடன் மறுத்தவளை, ப்ரஷா வெகுவாய் தைரியப்படுத்தினாள்.

பிறகு சாப்பாடும் வந்துவிட, இருவருமாகச் சாப்பிட் டனர்.

உடனே ஊர்மிளா வீட்டிற்குக் கிளம்ப, தானும் கூடவே சென்றாள் ப்ரக்ஷா.

ஏனோ, அவளுக்கு உடனே சரயுவைப் பார்க்க வேண் டும் போல்!

ஸ்கூட்டியை வழியில் நிறுத்தி, இரு புது உடைகளும், சில விளையாட்டு சாமான்களும் வாங்கிக் கொண்டாள்.

முருகனின் சிறு வீடு எளிமையான அழகுடனிருக்க, உள்ளே சென்று குழந்தையைக் கண்டவுடனே அவள் கை நீட்ட, மழலைச் சிரிப்புடன் ஓடி வந்தவளை மார்போடு அணைத்துக் கொஞ்ச ஆரம்பித்தாள்.

பிறகு பழைய கதைகளைப் பேசுவதிலும், என்ன செய்வதென்று விவாதிப்பதிலுமே நேரம் சென்றது.

ஆனால், குரு மறு திருமணம் செய்து கொள்ள வில்லை என்பதே பெரும் ஆறுதலாய்!

ஆனால், விவகாரத்திற்கு தான் ஒப்புக் கொள்ளாததைப் பற்றி அவள் கூற, அது கூட ஒரு காரணமோவென்றும் தோன்றியது.

குழந்தை சரயுவுடன் விளையாடியபோது, இந்தத் தரு ணங்கள் எவ்வளவு அற்புதமானவை... இதைத் தேவை யில்லா சந்தேகத்தினால் குரு இழந்திருக்கிறானே என்ற வேதனையும் கோபமும் வந்தன!

வெகு நேரம் அங்கு பொழுதைக் கழித்து விட்டு, மாலை யானதும் கிளம்பியபோது, சரயுவை விட்டுப் பிரியவே அவளுக்கு மனமில்லை!

அவளுக்காகவாவது, பிரிந்த இருவரையும் இணைத்து மீண்ட சொர்க்கமாய் தன் தந்தையின் அன்பையும் அந்த சிறு குழந்தைக்கு பரிசளிக்க, மனம் ஏங்கியது.



# 12

பிறகு வீட்டிற்கு வந்தபோதுதான் அவளை செல்லில் அழைத்தான் ஆதவன்!

''ப்ரக்ஷா! என்ன மதியத்திலிருந்து செல்லிலே கூப் பிட்டா எடுக்கவே இல்லை... நான் பயந்திட்டேன்!'' அக்கறையுடன் வினவினான்.

''ஓ... ப்ரண்ட் வந்திருந்தாங்க! வெளியிலே போயிட்டு இப்பதான் சார் வந்தேன்... காலையில சார்ஜிலப் போட் டேன்... எடுத்துப் போக மறந்துட்டேன்!''

அவள் கூறியதும், ''ம்... எனிதிங் ஸ்பெஷல்? செல்லை மறந்திட்டுப் போற அளவு முக்கியமான அந்த ஃப்ரெண்ட் யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

ஒரு மாதிரிக் குரலில் வினவினான் அவன்.

''ம்... அது ஒரு சஸ்பென்ஸ்! நானே உங்களோட அதைப் பத்திப் பேசணும்னு நினைச்சேன்! நாளைக்கு மீட் பண்ணலாமா சார்?''

ஆவலுடன் அவள் கேட்க, யோசனையுடன் சரியென் றான் அவன்.

''ஓகே! நாளைக்கு மதியம் லன்ச் புக் பண்ணிடறேன்... எந்த ஹோட்டலுன்னும் நானே போன் பண்றேன்! வேற ஒன்னும் ப்ராப்ளமில்லையே!''

"இல்லை சார்... நாளைக்குப் பாக்கலாம்... பை!" என்று செல்லை அணைத்தாள் அவள்!

அவனுக்கோ பெரும் தவிப்பு!

அவள் எங்கு சென்றிருப்பாள்... யாருடன் பேசியிருப்பாள்... செல்லை ஏன் எடுத்துச் செல்லவில்லை? அவனுள் பல குழப்பக் கேள்விகள்!

* * *

மறுநாள் காலையிலேயே ப்ரஷாவிற்கு போன் செய்து விட்டான் அவன்.

அவன் கூறிய ஹோட்டலுக்குச் சென்றபோது, அவளுக்காக அவன் ஆவலுடன் காத்திருப்பது தெரிந்தது.

அழகிய வெள்ளை நிறச் சுடிதாரில், ஒரு தேவதையின் மறு பதிப்பாய் வந்தவளை ரசனையுடன் வருடின... அவன் விழிகள்!

பிறகு சாப்பிடும்போது, அவள் ஊர்மிளாவைப் பற்றிக் கூறிய விபரங்கள் அவனுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தருவதாய்!

சட்டென்று விழிகள் கூர்மையுடன் இடுங்க, "இது உண்மையா?" நம்ப முடியாமல் கேட்டான் அவன்!

உடனே நிமிர்ந்தவள், "என் ஃப்ரெண்டை எனக்கு சின்ன வயசிலருந்து தெரியும்... அவ பொய் சொல்ல மாட்டா!" சிறு சினத்துடன் முடித்தாள்!

மறுகணமே தலையைப் பின்புறம் தள்ளிக் கம்பீரமாய் சிரித்தவன், "என் நண்பனை எனக்கும் ரெண்டரை வருஷமாத் தெரியும்... அவன் யு.எஸ்.க்கு ட்ரெயினிங் வந்தப்பதான் நான் முதன் முதலா சந்திச்சேன்.



"அங்கே ஆரம்பிச்ச நட்பு... அவன் ரொம்ப உடைஞ்சு போயிருந்த அந்த நேரத்தில... தன் மனைவி தன்னை ஏமாத்திட்டான்னு அவன் தற்கொலைக்கு முயன்றப்ப காப்பாத்தினதுல... ரொம்ப நெருக்கமாச்சு!"

"அவனோட வலிகளை நேரில் பார்த்தவன் நான்... எனக்கே முகம் தெரியாத அந்தப் பொண்ணு மேல... இப்ப வேகமாப் பரவிட்டிருக்கிற மேல் நாட்டுக் கலாசாரத்து மேல அதீத வெறுப்பு!"

அவன் முகத்தில் இனம் புரியாத ஒருவித இறுக்கம் நடம் பதித்திருக்க, "என் நண்பனும் பொய் சொல்ல மாட்டான்!" ஆழ்ந்த குரலில் முடித்தான்!

உடனே அவளுக்குள் பொங்கிய கோபம் அலையலையாய் பரவ, "மிஸ்டர் ஆதவன்! நான் அப்படிச் சொல்லலை! குருவோட அம்மா பொய் சொல்லியிருக்கலாம் இல்லையா?

"தன்னோட பணக்கார அண்ணன் பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்க முடியலையேன்னு ரெண்டு பேரையும் பிரிச்சிருக்கலாமே!" அழுத்தமாகக் கேட்டாள்.

உடனே அவன் முகம் யோசனையுடன் மாற, "ஏன்... அந்த நேரம் முருகன் வீட்டுக்கு ஏன் போகணும்? அவங்க அம்மா வீட்டுக்கு ஊர்மிளா போயிருக்கலாமே?" கூர்மையுடன் கேட்டான்.

"அவ என்னிக்கு ஜாதி விட்டு கல்யாணம் செஞ்சுக்கிட்டாளோ அப்பவே அவங்கப்பாவும் அந்த ஊரும் உறவும் அவளைப் புறக்கணிச்சு வெறுத்து ஒதுக்கிட்டாங்க...

"அவங்கப்பா அந்த ஊரில பெரிய மனுஷர்... அவரை மீறி ஒருத்தரும் எதுவுமே செய்ய முன் வரலையாம்!

''கர்ப்பமா இருந்த அந்த நேரத்துல கூட ஒரு தடவை முருகனோட அம்மாவை அழைச்சிட்டுப் போயிருக்கா... வாசலிலேயே வெச்சி விரட்டிட்டாராம் சந்துரு அண்ணா... பாவம்!''

''அவ இப்ப ரெண்டு பக்கமும் உறவுகளைத் தொலைச்சிட்டு நிக்கறா! குருவுக்காக தன் குடும்பத்தை இழந்தா... தன் மாமியாரால கணவனைத் தொலைச்சிட்டா!''

''அந்தக் குழந்தை சரயுவை ஒரு தடவை நீங்க பாக்கணும்! அவ்வளவு அழகு! ஆனா அந்தச் சின்னக் குழந்தையோட செலவழிக்க வேண்டிய அற்புதமான தருணங்களை... அது மழலையில பேசற அழகை... எல்லாத்தையும் குரு அனுபவிக்காம தவற விட்டுட்டாரு.

''எதிர்காலத்துல திரும்பிப் பார்க்கும்போது தான் தெரியும் குரு எவ்வளவு மிஸ் பண்ணிட்டாருன்னு... அவ்வளவுதான் சொல்லுவேன்!''

ஒருவித ஆதங்கத்துடன் கூறிவிட்டு ''எக்ஸ்கியூஸ் மீ!'' என்றபடி கை கழுவ எழுந்தாள் அவள்!

பிறகு இருவருமாகக் கிளம்பியபோது, ''இது என்னோட ஹம்பிள் ரிக்வெஸ்ட்! ஒரு கணவன் மனைவி பிரியலாம்... ஆனா ஒரு அப்பா அம்மா பிரியக்கூடாதுன்னு சொல்லுவாங்க.

''நீங்க சொன்னா உங்க ஃப்ரெண்ட் கேட்பாருன்னு நினைக்கிறேன்! அவர் கிட்ட பேச முடியுமா சார்? ஊர்மிக்காக... அந்தக் குட்டி சரயுக்காக... ப்ளீஸ்!'' மெல்லிய குரலில் கோரினாள்.



உடனே விழிகள் பளிச்சிட, அவளையே கூர்ந்தவன், ''இதெல்லாம்விட 'எனக்காக செய்ங்க ஆதவன்'னு நீ கேட்டிருந்தா உடனே செய்வேன்!'' என்றபோது சிறு குறும்பில் அவன் உதடுகள் துடித்தன!

ஒரு நொடி, அவள் விழிகள் அலைப்புறுதலுடன் தவித்து, பிறகு அவனிடமே சரணடைந்தன.

''என்ன... மௌனமா இருக்கே? உனக்காகன்னா செய்ய மாட்டேனா? அப்புறம் இந்த 'சார்...' வேண்டாமே? ஒரு தடவை மிஸ்டர் ஆதவன்னு கோபமா மிரட்டியாச்சு!''

''இல்லை!''

அவள் விதிர்ப்புடன் இடை மறிக்கும்போதே, ''இரு... இரு... நான் முடிச்சிடறேன்! அந்த மிஸ்டரை எடுத்துட்டு ஆதவன்னு நீ கூப்பிடறதா இருந்தா நான அவன் கிட்ட பேசறேன்!'' சீண்டலாக முடித்தான்.

''சார்... ப்ளீஸ்!''

அவன் சலுகையாக மறுக்க, ''நோ... கால் மீ ஆதவன்! இல்லை... அது ரொம்பப் பெரிசா இருக்கறதா நினைச்சா, எங்கம்மா மாதிரி 'தவா'ன்னு கூப்பிடலாம்!'' இயல்பாக முடித்து விட்டான்!

அரை குறை மனதுடன் மெல்லத் தலையசைத்து, அவள் ''பை...'' என்று விடை பெற்றாள்.

''ப்ரஷா! நீ யார் கிட்டயும் ப்ளீஸ்னு கெஞ்சினதில்லை... கெஞ்சிப் பழக்கமில்லைன்னு நினைக்கிறேன்! ஆனா அது கூட ரொம்ப அழகா இருந்தது... பை!''

செல்லமாக அவள் தோளில் தட்டிவிட்டு அவன் கம்பீரமாக விடைபெற, அவன் தீண்டிய இடத்தில் சிறு பட்டாம் பூச்சியின் மென் சிறகடிப்பு!

ஏனோ, மனம் முழுவதும்... திடீரென்று பூத்துக் குலுங்கிய கோடி மலர்களின் வாசம்!

வெண்பஞ்சு மேகக் கூட்டத்தின் மேல் மிதப்பது போல் ஒரு உணர்வு!

அதே துள்ளலுடன், ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு நேரே முருகனின் வீட்டிற்குச் சென்றாள் அவள்.

ஆனால், மனதிற்குள் ஒரு மூலையில் ஆண்களை நம்பாதே என்ற எச்சரிக்கைக் குரல்!



## 13

முருகனின் வீட்டில், சிறிது நேரம் சரயுவுடன் விளையாடிவிட்டு, தனிமையில் ஊர்மிளாவுடன் பேசிய போது ப்ரஷா எல்லா விபரங்களையும் கூறினாள்.

அதை அறிந்ததும் அவளுக்கும் நிம்மதியாய்... தோழியின் கரத்தை நன்றியுடன் பற்றிக் கண் கலங்கினாள் ஊர்மி!

பிறகு, அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு வீட்டிற்கு வந்தவளுக்கு, ஆதவனின் பேச்சும், குறும்புப் பார்வைகளுமே மயிற்பீலியாய் இதயம் வருடின!

மனதின் ஓரம் ஒலித்த எச்சரிக்கை குரலை, அலட்சியம் செய்தன.... உணர்வுகள்!



வெகு நேரம் அந்தத் தாக்கத்தின் ஆட்படுதலில் சிலிர்த்திருந்தவளை, சிணுங்கலாய் அழைத்தது செல் போன் ஒலி!

எடுத்தால் ஆதவன்தான்...!

"ப்ரஷா! நான் குருவோட பேசிப் பார்த்தேன்... ஆனா அவன் ஊர்மிளாவைப் பத்தி பேச்செடுத்தாலே ரொம்பக் கோபமாயிடறான்... தன் கல்யாண வாழ்க்கையப் பத்தி மட்டும் எதுவும் பேச வேண்டாமின்னு மேலே பேச மறுத்திட்டான்!

"கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம்... ரொம்ப விரக்தியா இருக்கான்! அவனும் பாவம்தானே! ஒருத்தரோட ஒருத்தர் பேசிப் புரிஞ்சிக்கிட்டா அப்புறம் எல்லாமே சுலபமா யிடும்!"

அவன் கூறியதும் "ம்... தேங்க்யூ சார்!" நன்றியுடன் மெல்ல முணுமுணுத்தாள்.

எதிர் முனையில் சிறிது நேரம் சத்தமின்றிப் போகவே "ஹலோ... ஹலோ..." பதட்டத்துடன் அழைத்தாள்.

"ம்... நான் லைன்ல தான் இருக்கேன். உனக்கு கொஞ்சம் செலக்டிவ் அம்னிஷியா போலருக்கு! நீதான் எல்லாத்தையும் மறந்திடறே!" ஆழ்ந்த குரலில் குற்றம் சாட்டினான்.

"என்ன... எதை மறந்தேன்?"

அவள் திகைக்கும் போதே நினைவு வந்துவிட, "ஓ! சாரி ஆதவன்... போதுமா?" சிரிப்பும் குறும்புமாய் வினவி னாள்.

"இப்ப உடனே... உன்னை நேரில பாக்கணும் போலருக்கு...!"

"ஏன்...?"

''ம்... குறும்பும் சிரிப்பும் உன் குரலிலே டன் கணக்கா கசிஞ்சு வழியுதே... அந்தக் கண்கள் இப்ப எப்படி இருக்கும்னு யோசிச்சேன்!''

''அப்படியே யோசிட்டே நல்ல பிள்ளையாத் தூங் குங்க..!''

''தூங்கினா கனவுல நீ வரேன்றியா? அப்படின்னா இப்பவே நான் உறங்கப் போறேன்!''

''பாவம்! நான் அதைச் சொல்லலை! இப்படி யோசிச் சிட்டே இருந்தா விடிஞ்சுடும்... காலையில ஆபீஸிலே பாக்கலாமின்னு சொன்னேன்... பை!''

உடனே இணைப்பைத் துண்டித்தாலும், நயாகராவின் சாரலாய் மனம் முழுவதும் குளிர்ச்சியாய் ஒருவித உணர்வு!

அவனுடன் வார்த்தைக்கு வார்த்தை கேலி செய்து மல்லுக் கட்டுவதில், இனம் புரியா ஒரு நிறைவு வருவது புரிவதாய்!

அன்றிரவு உறக்கமே வராமல் வெகு நேரம் விழித் திருந்தவளின் கனவிலும், சாமரம் வீசியது... ஆதவனின் புன்னகை!

## 14

மறுநாள் அலுவலகத்திற்குச் சென்றபோது, ஆவ லுடன் வரவேற்ற ஊர்மிளாவின் முகத்தில், ஏதோ ஒரு தெளிவும் நம்பிக்கையும் வந்திருப்பது போல்!



ஆறுதலுடன் அவள் கையைப் பற்றி அழுத்தி, முறுவலித்தபடி அமர்ந்தாள், ப்ரஷா!

அன்று, குருவும் அதீதமான அமைதியிலிருந்தான்.

சுகந்தி தான் ஏதேதோ உளறியபடி உசேனிடம் கதை யளந்து கொண்டிருந்தாள்.

மதியம் லஞ்ச் முடிந்ததும், நேரமிருந்ததால் கேண்டீனி லேயே அமர்ந்து நான்கு பேரும் பேசிக் கொண்டிருந்தனர்.

''இந்த ஆபீஸிலே நீங்க எப்ப சேர்ந்தீங்க சுகந்தி?'' ஆவலுடன் விசாரித்தாள் ஊர்மிளா.

''ம்... ஆறு மாசமாச்சு! நானும், ப்ரஷாவும் உசேனும் ஒண்ணாதான் ஜாயின் பண்ணினோம்... ஆனா எங் களுக்கு வேற கன்சர்னிலே வேலை பாத்த அனுபவம் இருந்தது. உசேன் தான் புதுசா சேர்ந்தான்! அது பெரிய ஜோக் போங்க!'' சிரிப்புடன் பதில் கூறினாள்.

''உங்களுக்குத் தெரியுமா ஊர்மிளா! இங்கே வந்த புதுசுல நான் ரொம்ப பயந்தேன்... மதுரையிலேயே படிச்சி வளர்ந்தவனா? இந்த ஊர்க் கலாச்சாரம், நுனி நாக்கு இங்கிலீஷ், இதெல்லாம் பாத்து மிரண்டு போனேன்...

''இங்கே தமிழ் தெரிஞ்சாக் கூட இங்கிலீஷ்லேதான் பேசுவாங்க... எனக்கு தாழ்வு மனப்பான்மை நிறைய இருந்தது... இங்கிலீஷ் பேசத் தெரிஞ்சாலும் தப்பாப் பேசிடுவோமோன்னு தயக்கமா இருக்கும்... பேசவே மாட்டேன்!''

''அதைப் புரிஞ்சுக்கிட்டு என்னை மாத்தினது ப்ரஷா தான்! ஆங்கிலம்கிறது ஒரு மொழி மட்டும்தான்... பிச்சைக்காரன் கூட லண்டன்லே ஆங்கிலம்தான் பேசு வான்... அது தெரியலைன்னா அவமானமில்லை...

ஈஸியாக் கத்துக்கலாமின்னு நம்பிக்கையா சொன்னாங்க!

"இந்த ஊரிலே ஆங்கிலம் பேசினா மதிப்பாங்கன்னு, இல்லை.. உன்னை மாதிரி திறமைசாலிகளுக்குத்தான் இங்கே மதிப்பும் வரவேற்பும் அதிகம்னு என்னை உணர வச்சாங்க!

"ஸ்போக்கன் இங்கிலீஷ் கத்துக்க சொல்லி தைரியமா ப்ராஜெக்ட்டுல நுழைஞ்சு, ஒண்ணாவே இருந்து சந்தோஷத்தை பகிர்ந்துக்கிட்டு, கஷ்டப்படறப்ப தோழமையோட ஆறுதல் சொல்லி, ஆண் பெண் நட்பு புனிதமானதுன்னு புரிய வச்சது ப்ரஷாதான்!"

நெஞ்சார்ந்த நன்றியுடன் அவன் கூற, "ஏய்... இது ரொம்ப ஓவர்!" என்றபடி ஒற்றை விரலுயர்த்தி போலியாக எச்சரித்தாள் அவள்.

"ஏய்! ப்ரஷா எப்பவுமே அப்படித்தான்! அவளோட இருந்தா பொழுது போறதே தெரியாது!

"வெரி எனர்ஜடிக் பர்சன்... எப்பவுமே சிரிச்சிட்டே இருப்பா... அவளோட சந்தோஷம் உற்சாகம் எனர்ஜி எல்லாம் ஒரு தொத்து நோய் மாதிரி நம்மையும் தொத்திக்கும்... சின்ன வயசுல இருந்தே அவ அப்படித்தான் ரொம்ப போல்ட்! நான்தான் கொஞ்சம் கோழை!"

பெருமையாக முடித்தாள் ஊர்மிளா.

உடனே சுகந்தியின் குரல் வேகமாக இடையிட்டது...

"ப்ரஷாவா! சும்மா பேச்சுதான்! மத்தபடி விமன்ஸ் லிப் பத்தி எல்லாம் அவளுக்குத் தெரியாது..." நக்கலாகக் கூறினாள்.



"ஏன்... அவங்களுக்கென்ன?"

உடனே பரிந்து வந்த உசேனுக்கு, அவளுடைய பொறாமையும் துவேஷமும் புரிவதாய்!

"ம்... மாடர்னா ட்ரெஸ் பண்ணிக்கறது... டேட்டிங் போறது... 'பப்'புக்கு போறதெல்லாம் விரும்பாத கட்டுப் பெட்டி அவ!"

அலட்சியமாக அவள் பகர்ந்தபோதுதான், சிலிர்த்து நிமிர்ந்தாள் ப்ரஷா!

"ஓ! உன்னைப் பொறுத்தவரைக்கும் உடம்பை எக்ஸ்போஸ் பண்ற மாதிரி உடை அணியறதும், க்ளப்புக்குப் போறதும்தான் பெண் சுதந்திரம்னா அது எனக்குத் தேவையில்லை சுகந்தி!" அழுத்தமாகக் கூறினாள்.

"அப்போ நம்ம அம்மாங்க மாதிரி சமையலறையிலேயே கிடந்து அவதிப்பட்டு, ஆணுக்கு அடங்கி, குழந்தைகளைப் பெத்துப் போட்டு டிபிகல் தமிழ்ப் பொண்ணா வாழறது தான் சரியா? ஆண்களை எதிர்த்து சுதந்திரமா வாழ வேண்டாமா?"

"ப்ச்... பெண் விடுதலைன்னா என்ன சுகந்தி? ஆண்களை எதிர்த்து நின்று போராடி போர்க்கொடி தூக்கி ஜெயிக்கிறதா? எனக்குத் தெரிஞ்சு இல்லைன்னுதான் சொல்லுவேன்!"

"ஓ! அப்ப அடங்கிப் போறதுதான் பெண் விடுதலையா?"

எகத்தாளமாகக் கேட்டாள் சுகந்தி.

"இல்லை... ஆணோ பெண்ணோ, இயல்பா சக மனுஷியை மதிக்கிறது... சக பெண்களோட வளர்ச்சியில,

உயர்வுல பெருமைப்படறது... அவளை உயர்த்தறது இதெல்லாம் தான் இப்ப தேவை...

''ஆண்களை விடு... எல்லாப் பெண்களும் அதை செய்யறோமா? ஆண்கள் கிட்டருந்து விடுதலைன்னா என்ன வேணும்?

''இப்ப நானும் அவங்களுக்கு நிகரா வேலை பாக்க றேன்... ஆட்டோ ஓட்டறோம்... குடும்பத்துக்கு ஃபினான் சியலா சப்போர்ட் பண்றோம். ராக்கெட்டுல போயாச்சு! ஸ்போர்ட்ஸிலேயும் இருக்கோம்... எதுலே குறைச்சல்னு சொல்லு!

''ஆனா, ஒரு பெண்ணை மருமகளா நினைச்சி வரதட்சணை கொடுமையால ஸ்டவ் வெடிக்கறது... ஒரு விதவைப் பெண்ணை சபையில ஒதுக்கி வைக்கறது... பெண்தானே படிப்பெதுக்குன்னு அவங்க முன்னேற் றத்தை தடை செய்யறது... விவாகரத்தான பெண்ணை வாழா வெட்டின்னு தனிமைப்படுத்தறது... இதுக்கெல் லாம் ஒரு ஆணா காரணம்?

''யோசிச்சிப் பாக்கணும்... எனக்குத் தெரிஞ்சு பெண் களே பல சமயங்கள்லே பெண்களுக்கு எதிரியா இருக் கறதுதான், மறுக்க முடியாத உண்மை!

''இதிலே நாம யார் கிட்டருந்து விடுதலை கேக்கறோம் சுகந்தி? பெண்களாகிய நம்ம கிட்டே இருந்தேவா?''

''நாம முதல்லே ஒண்ணா இருக்கணும் இல்லியா? அப்புறம்தானே ஆணாதிக்க சமுதாயத்துக்கு எதிரா உரிமைப் போரெல்லாம் செய்ய முடியும்?

''அவங்க மூலமா நாம பாதிக்கப்படற பல விஷயங் களை... குடும்ப வன்முறை, பெண் சிசுக் கொலை, இதெல்லாம் தடுக்க முயற்சிக்கலாம்!



'முதல்லே... அதுக்கு பெண்கள் நாம ஒத்துமையா இருக்கணும்! நம்ம மனசு விசாலமா மாறணும் இல் லையா?''

அவள் இயல்பாகக் கேட்க, சட்டென்று ஒலித்த கைதட்டல் சப்தம், அனைவரையும் திரும்பிப் பார்க்க வைக்க, அங்கு ஆதவன் நின்றிருந்தான்.

''வெல்டன் ப்ரஷா! இவ்வளவு அழகா அறிவுப் பூர்வமா யோசிக்க உன்னால மட்டும் தான் முடியும்!''

மனமாரப் பாராட்டியபடி அமர்ந்தவனின் தேகம், சட்டென்று குளிர்ந்து லேசானது!

அவள் எண்ணங்களில் இவ்வளவு தெளிவும் தீர்க்கமுமா? இவள்தான் எவ்வளவு யோசித்திருக்கிறாள் என்கிற பிரமிப்பும் வியப்பும் அவனுள் வந்தன!

எல்லோரையும் போல் ஆண்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி நியாயம் கேட்காமல், நடுநிலையுடன் யோசிப்பது, எத்தனை பேருக்கு சாத்தியம்?

அப்போது, அங்கு விரவித் தெரிந்த மௌனம் கூட ஒரு இன்னிசை சத்தமாய்!

அவளுடைய பேச்சு, ஊர்மிளிடமும் உசேனிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க, திடீரென்று சீற்றத்துடன் எழுந்தாள் சுகந்தி.

அதே நிமிடம், அவள் கை பட்டு, கீழே விழுந்து சிதறிய கண்ணாடி தம்ளரின் சிலீரென்ற ஒலி... அனைவரையும் கலைத்தது.

வேகமாக அந்த இடத்தை விட்டுக் கோபத்துடன் வெளியேறிய சுகந்தியை, எவருமே கண்டு கொள்ள வில்லை.

# 15

ஒரு சிப்பந்தியை அழைத்து அந்த இடத்தைச் சுத்தம் செய்யும்படிப் பணித்துவிட்டு அனைவரும் கிளம்பினர்.

''நீங்க எப்ப வந்தீங்க சார்?'' அறிந்து கொள்ளும் ஆர்வம் உசேனிடம்!

''ம்! நீ உன் காம்ப்ளெக்ஸ் பத்தி பேசும்போதே வந்திட்டேன்! க்ரேட் ஜாப் ப்ரஷா! ஹேட்ஸ் ஆஃப் டு யூ!'' அவளை வியந்து பாராட்டினான்.

திடீரென்று குறும்புடன் அவளையே ஊடுருவியபடி, ''எனக்குக் கூட ஒரு விஷயத்துல நிறைய சந்தேகம் இருக்கு... நீதான் அதைத் தீர்த்து வைக்கணும்!'' என்றான் சீரியஸான குரலில்!

ஆனால் அவன் விழிகளோ, குறுகுறுப்பாய் சிரித்தபடி அவள் விழிகளுக்குள் புகுந்து மாயம் செய்தன.

அவள் இதயம் ஆடிக் காற்றில் சிக்கிய சிறு காகிதமாய் தடதடத்தது.

அதை அறியாத உசேனோ, ''எல்லா விஷயமும் ப்ரஷாவுக்கு அத்துப்படி சார்! ஃபிங்கர் டிப்புல வெச்சிருப் பாங்க...'' வெகுளித்தனமாகப் பேசியபடி பின் தொடர்ந் தான்.



''என்ன ப்ரஷா? சொல்லித் தர்றியா?''

குறும்புடன் ஒற்றைக் கண் சிமிட்டி அவன் கேட்க, ஏதோ புரிய, விதிர்ப்புடன் தலை குனிந்தாள் அவள்.

பூமியில் அசாத்தனமாய் பரவிச் சுழன்று, தன் ஆதிக் கத்தின் கீழ் வந்தவற்றை எல்லாம் தனக்குள் எடுத்துச் செல்லும் சுழற் காற்றாய் மாறி... அவன் தன்னை இழுத்து ஆகர்ஷிக்க முயல்வது புரிய, பெரும் பயம் வருவதாய்!

''வேண்டாம் பெண்ணே... ஆண்கள் சந்தர்ப்ப வாதிகள்'' மனதோரம் மெல்லிய எச்சரிக்கைக் குரல்!

அந்த வாரம் அப்படியே செல்ல, சுகந்தி மட்டுமே எப்போதும் எரிச்சலும் சிடுசிடுப்புமாக இருந்தாள்.

இப்போதெல்லாம் அவள் ப்ரஷாவிடம் சரியாகப் பேசுவதில்லை!

அவளும் அதைப் பொருட்படுத்தாமலிருக்க, ஊர்மிளா வும் உசேனும் அவளுடன் இயல்பாக இருந்தனர்.

* * *

அந்த சனியன்று காலையில் வீட்டை சுத்தம் செய்து விட்டு, தலை குளித்து ஓய்வாக அமர்ந்து உலர வைத்த படி, தனக்குப் பிடித்த இசையில் லயித்திருந்தாள் ப்ரஷா.

திடீரென்று அழைப்பு மணி ஒலிக்க, கதவை திறந் தால்.. வாசலை குள்ளமாக்கியபடி அங்கு நின்றிருந்தது ஆதவன்தான்!

''ஓ! வாங்க!''

நைட்டியிலிருந்ததால் தர்ம சங்கடத்துடன் வரவேற்ற வள், ''ஒரு நிமிஷம்!'' என்றபடி உள்ளே ஓடினாள்.

மயில் தோகையாய் கூந்தல் விரித்திருக்க, ஒரு வெள்ளை உடை தேவதையாய் அவள் சென்று மறைந்த கோலம், அவனுக்குள் மறக்க இயலாத கவிதைத் துளியாய்!

சிறிது நேரத்திலேயே உடை மாற்றி வந்தவள், ''என்ன சாப்பிடுறீங்க!'' காபி ஆர் கோல்ட்?'' மெல்லக் கேட்டாள்.

''ம்... ஒண்ணும் வேண்டாம்! ஆனா என் பெயரைச் சொல்றதை நீ கவனமாத் தவிர்க்கிற மாதிரி இருக்கு!'' என்றவனுக்குள் உள்ளூர ஒரு ஏக்கப் பெருமூச்சு எழுந்தது.

நீலநிற ஜீன்ஸும், கறுப்பு டீ-ஷர்ட்டும் அவனுக்கு மிகவும் பொருத்தமாயிருக்க, அவளால் விழிகளை விலக்கவே முடியவில்லை!

''என்ன... பதிலே காணோம்? ம்...? நான் ஓகேவா... எவ்வளவு பர்சன்டேஜ் வாங்கியிருக்கேன்... என்னதான் யுனிவர்சிடியில கோல்ட் மெடல்னாலும் உன் மனசுல எவ்வளவு மார்க்குன்னு தெரிஞ்சுக்க மனசு எப்படித் தவிக்குது தெரியுமா?''

மிருதுவான குரலில் குறும்பும் ரசனையுமாய் அவன் கேட்க, அவளுக்கோ தேகம் சிலிர்ப்பாய் நடுங்கியது!

''அன்னிக்கு, உசேன் உனக்கு எல்லா விஷயமும் தெரியுமின்னான்! எனக்கொரு சந்தேகம்!

''ஆம்பிளைங்க எல்லாம் காதலிச்சா, அதை மறைக்க முடியாம தான் விரும்பின பெண்ணை சுத்திச் சுத்தி வருவாங்களாம்!

''ஆனா இந்தப் பொண்ணுங்க மட்டும் எல்லா உணர்வு களையும் மனசுக்குள்ளேயே புதைச்சி வச்சிட்டு, ஆண் களை சுத்தவிட்டு வேடிக்கைப் பாப்பாங்களாமே! அது உண்மையா!''



அடிக் குரலில் சீண்டலாகக் கேட்டான்.

''ம்... எனக்குத் தெரியாது... ஆனா ஒரு பொண்ணு ஒருத்தரை மனசுல நினைச்சிட்டா, அவரைக் கடைசி வரைக்கும் மறக்க மாட்டா...!''

அவள் முடித்ததும், ''தேங்க்யூ சோ மச்!'' என்றான் அவன்.

''எதுக்கு...?''

ப்ரஷா புரியாமல் வினவ, ''பெண்களைப் பத்தி எனக்கிருந்த சந்தேகத்தை தீர்த்ததுக்கு!'' அவளையே ஆழ்ந்து கூர்ந்தபடி அமர்த்தலாக உரைத்தான்.

உடனே எழுந்து உள்ளே சென்றவள், டிபனும் ஆரஞ்சு ஜூஸும் எடுத்து வந்தாள்.

மெதுவாக அதைப் பருகியவன், ''எனக்கொரு ஐடியா தோணுச்சி... அதான் உடனே வந்தேன்! குருவை ரொம்ப ஃபோர்ஸ் பண்ணவும் முடியலை!

''என் பாஸுங்கற பதவியை வெச்சி நான் டிமாண்ட் பண்ணப் போயி, அவன் வேலையை விட்டே போயிட் டான்னா, அப்புறம் ரொம்பக் கஷ்டம்!

''அதோட, ஒரு நண்பனாப் பேசறதைத்தான் நான் விரும்புறேன்! ஆனா அதுக்கும் ஒரு லிமிட் இருக்கே! அன்னிக்கு அவன் கோபத்துல ஒரு கேள்வி கேட்டான்!

''இவ்வளவு நடந்தும், இப்ப தனியா வாழ்க்கை நடத்தற அளவு சம்பாதிச்சும், அந்த டிரைவர் வீட்டில ஏன் இருக்கா ளர்மிளான்னு கேட்டான்.

அது நியாயம்தானே! ம்... அதனால வேற வீடு பாத்து அவங்களை போகச் சொல்லலாமே!''

யோசனையுடன் அவன் கூற, அவளுக்கும் அதுவே சரியென்று பட்டது.

"சரி! நான் இதுபத்தி நாளைக்கே ஊர்மியோடப் பேசறேன்! இந்த ஃப்ளாட்டுல கூடக் கீழ்வீடு இந்த மாசம் காலியாகறதா சொன்னாங்க! கேட்டுப் பாக்கறேன்!"

"குரு, எல்லா விதத்திலயும் கன்வின்ஸ் ஆகற மாதிரி ஊர்மி நடந்துக்கணும்தான்! ஆனா, முதல்லே ஒரு கணவனுக்கு மனைவிகிட்ட தேவையானது நம்பிக்கை தானே! அதுவே இல்லையே... அதான் கஷ்டமா இருக்கு!"

ஒரு பெருமூச்சுடன் அவள் முடிக்க, "பாப்போம்! அவளுக்கு எப்படியாவது புரிய வைக்கிறேன்... அதை விட அவங்கம்மாவோடப் பேசிப் பாப்போம்!" தீர்மான மாக முடித்தான் அவன்.

பிறகு அவன் விடைபெற்றுக் கிளம்ப, அவளுக்கோ அந்த இடமே வெற்றிடமான ஒரு உணர்வு!

இதயப் பரப்பில்... ஏதோ ஒரு சூன்ய சுழிப்பு மெல்லப் பரவுவதாய்!

* * *

அன்றே ஊர்மியிடம் போனில் இது பற்றிப் பேச, அவளும் சரியென்றாள்.

"நான் கூட அதைப் பத்தித்தான் யோசிச்சிட்டிருந்தேன் ப்ரஷா! முருகன் அண்ணாவுக்கும் அம்மாவுக்கும் எவ்வளவு நாள்தான் தொந்தரவு குடுக்கறது... ஆனா சரயுவைத்தான்!" கவலையுடன் நிறுத்தினாள்.

"குழந்தைகளைப் பாத்துக்க இப்ப க்ரச் இருக்கு... அதிலே சேத்திடலாமா? யோசிச்சி முடிவெடு ஊர்மி!"



"சரி... இன்னிக்கே அவங்ககிட்டே பேசறேன்!" என்று இணைப்பைத் துண்டித்தாள் அவள்.

# 16

மறுநாளே, நேரில் வந்து விட்டாள் ஊர்மிளா!

அவளை உற்சாகத்துடன் வரவேற்ற ப்ரஷாவிடம், "எல்லாம் நல்லபடியாப் பேசி முடிச்சிட்டேன் ப்ரஷா! இந்த ஃப்ளாட்டிலயே ஒரு வீடு இருக்குன்னியே... அதையே முடிச்சிடலாம்!

"ஆனா குழந்தைதான் பாவம்! கோகிலாம்மாவே பாத்துக்கறேன்னு சொல்றாங்க தான்!... ஏனோ மனசுக்கு கஷ்டமா இருக்கு!" சோர்வுடன் முடித்தாள்.

உடனே துள்ளி எழுந்த ப்ரஷாவின் முகத்திலோ, கோடி சூர்யப் பிரகாசம்!

"இரு... இதுக்கும் ஒரு முடிவு பண்ணலாம்! நம்ம ஸ்டாஃபிலே பத்து பர்சண்ட் லேடீஸுக்காவது சின்ன குழந்தைங்க இருக்கும் இல்லியா? இது பத்தி ஆதவன் கிட்டே பேசறேன்!"

"என்ன பேசப் போறே ப்ரஷா?"

புரியாமல் வினவினாள் ஊர்மி.

"நாளைக்கு பேசினப்புறம் சொல்றேன்..." என்றவள், தங்களின் பால்யக் கதைகளை நினைவு கூற, நேரம் போனதே தெரியவில்லை!

''அப்போ எல்லாம் நாம எந்தக் கவலையும் இல்லாம பட்டாம்பூச்சி மாதிரி சுதந்திரமா சுத்தித் திரிஞ்சோம் இல்லை ஊர்மி? படிப்பைத் தவிர எந்த யோசனையும் கிடையாது!''

''ஆமாம்! தினம் ஸ்கூலுக்குப் போறதும், வந்தவுடனே பாண்டி கொக்கோ, ஐஸ் பாய்ஸ்ன்னு தோப்புல ஏதாவது விளையாடறதும், அப்புறம் படிக்கறதும் எவ்வளவு இனிமையா இருந்தது!''

பழைய நினைவுகளில் சிலிர்த்தாள் ஊர்மிளா!

''லீவு நாளிலே ஓடைக்குப் போவோமே, தோட்டத்துல பாட்டுப் பாடி டான்ஸ் ஆடறது.

''நாகப்பழம், மாங்கா, கொடுக்காப்புளின்னு மரத்துல ஏறி உலுக்கிப் பறிச்சி சாப்பிடறது... எத்தனை இயல்பான ஒரு வாழ்க்கை இல்லை?''

''ம்... எதை மறக்கறது... எதை விடறது? கவலைகளே இல்லாத துள்ளித் திரியற அந்தப் பருவம், நமக்கு அழகா ஒரு கவிதை மாதிரி அமைஞ்சது!

''அப்போ, இப்ப இருக்கற மாதிரி டி.வி. கம்ப்யூட்டரோட ஆதிக்கமெல்லாம் அங்கே அவ்வளவா இல்லை! நம்மைக் கட்டிப் போட்டு ஒரே இடத்துல உக்கார வச்சது, எப்பவோ போற சினிமாக்கள் மட்டும்தான்... இல்லை?''

''ஆமாம்! பொங்கலப்ப, சூரியனைப் பாத்து தோட்டத்துலதானே பொங்கல் வைப்பாங்க! காணும் பொங்கலன்னிக்கு கும்மி அடிச்சி கூட்டாஞ்சோறு செய்வோமே, தோட்டத்துல... ஞாபகம் இருக்கா ப்ரஷா?''

''எப்படி மறக்க முடியும் ஊர்மி? ஆடிப் பெருக்குக்கு ஆத்துக்குப் போய் பூஜை செய்யறது... இயற்கையோட



ஒத்து வாழ்ந்துட்டிருந்தோம் அப்பல்லாம்? இப்ப எல்லாமே தொலைஞ்சு போய், நாம இயந்திரமா மாறிட்டமோன்னு பயமா இருக்கு!''

பழைய நினைவுகளின் தாக்கத்திலிருந்து மெதுவாக விடுபட்டவள், ''அப்புறம் அப்பாவையும் அண்ணாவையும் பார்க்கவே இல்லையா ஊர்மி?'' கவலையுடன் மெல்ல விசாரித்தாள்.

''எனக்கு அந்த தைரியம் இல்லை ப்ரஷா! கர்ப்பமா இருக்கறப்பவே, என்னை ஏத்துக்கலையே... ப்ச்!''

''இல்லை... இப்ப சரயுவைப் பாத்தா எல்லாமே மாறிடும்! சின்னக் குழந்தைங்க தான் இது மாதிரிப் பிரிஞ்ச குடும்பங்களை சேர்த்து வைக்கிற பாலமே!

''ஒரு தடவை நீயும் நானுமா சேர்ந்தே போய்ப் பாத்துட்டு வரலாம் ஊர்மி!''

அவளை ஆறுதல் படுத்தியவள், உடனே ஊர்மியை கீழே அழைத்துச் சென்று வீட்டுச் சொந்தக்காரரிடம் கீழ் வீட்டைப் பேசி முடித்து விட்டாள்.

தன் தோழியின் அருகிலேயே இருக்கப் போகும் மகிழ்ச்சியும், நிம்மதியும் ஊர்மியின் முகத்தில் விரவித் தெரிந்தன!

மலரில் உறங்கும் சிறு பனித் துளியாய்... இதயம் நம்பிக்கையை சுமக்க ஆரம்பித்தது.

* * *

மறுநாளே, ஆதவனிடம் இது பற்றிப் பேசினாள் ப்ரஷா.

குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள இங்கு அலுவலக வளாகத்திலேயே ஒரு க்ரச்சை உருவாக்கினால் நன்றாக

இருக்குமே என்று கூறியபோது, அவனும் அது பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.

"ம்... எல்லாரும் ஒத்துக்கணுமே... ஃபண்ட்ஸ் வேற அலாட் பண்ணனும்!" யோசனையுடன் கூறினான்.

"சார்... சாரி ஆதவன்! பணத்தைப் பத்தி கவலை வேண்டாம்! குழந்தையோட பேரண்ட்ஸ் கிட்டயே சார்ஜ் பண்ணிடலாம்! அங்கே மூணு வயசு வரைக்கும்தான் குழந்தைகளுக்கு அனுமதின்னு ஒரு கண்டிஷனும் போட்டுடலாம்!"

"சாப்பாடெல்லாம் அவங்க வீட்டில இருந்தே குடுத்துடணும்! குழந்தைகளைப் பாத்துக்கவும், சுத்தம் செய்ய, சாப்பாடு குடுக்கவும்னு ரெண்டு பேரை அப்பாயிண்ட் பண்ணலாமே!"

ஆர்வத்துடன் கூறியவளையே ஆழ்ந்து நோக்கியவனுக்குள், இவள்தான் மற்றவர்களுக்காக எவ்வளவு பொது நலத்துடன் யோசிக்கிறாளேவென்ற பரவசம்!

அதற்காகவாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்தவன், உடனே தன் தந்தையுடன் கலந்தாலோசித்து, அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினான்.

ப்ரஷாவின் திட்டப்படி, எல்லா டிபார்ட்மெண்ட்டிற்கும் 'ஹெச் ஆர்' மூலம் ஒரு மெயில் அனுப்பப்பட்டது!

எதிர்பாராத விதமாக உடனே பத்து பெண்கள் அதை வரவேற்று மெயில் அனுப்பியிருந்தனர்.

பிறகு ஒரு மீட்டிங் நடத்தி எல்லாவற்றையும் விவரித்தவர்கள், கீழ்த்தளத்திலிருந்த ஒரு பெரிய ஹாலை அதற்குத் தேர்ந்தெடுத்தனர்.



குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் வேலைக்கு, கோகிலாவே வருவதாகக் கூற, பெரும் நிம்மதி வந்தது ஊர்மிளாவிற்கு!

அந்த ஹாலை வடிவமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட, கோகிலாவின் மூலம் வேறொரு பெண்ணையும் தேர்ந்தெடுத்தனர்.

பதினோரு குழந்தைகளுக்கு, அங்கு இடம் ஒதுக்கப் பட்டது.

விளையாட்டுப் பொருட்களும் இரு தொட்டில்களும் வாங்க, ஒரு நாள் மாலையில் ஆதவனுடன் கடைக்குச் சென்றிருந்தாள் ப்ரஷா.

எல்லாவற்றையும் வாங்கி முடித்ததும், "மத்தவங்களைப் பத்தி இவ்வளவு யோசிக்கிறயே ப்ரஷா... உன்னைப் பத்தியும், உன் நினைவிலேயே ஒருத்தன் ஏங்கி சுத்திக்கிட்டிருக்கானே... அவனைப் பத்தியும் மட்டும் ஏன் நினைச்சே பாக்க மாட்டேங்கிறே?"

ஆதவன் மென் குரலில் கேட்டான்.

"ம்... என்னைப் பத்தி நான் எப்பவுமே யோசிக்கறதே யில்லை! ஆனா என் நினைப்புல யாரோ சுத்திட்டிருக்கறதா சொன்னீங்களே... யாரையும் காணோமே... அதான் பாத்தேன்!"

சுற்றும் முற்றும் பார்த்து, தேடுவது போல் பாவ்லா செய்தாள் அவள்.

"ம்... உனக்கு ஒரு வேளை மாலைக் கண் நோயோ... எதிர்லே இருக்கறவனைத் தெரியலையேன்றே! எல்லாம் நேரம்!" என்றபடி செல்லமாக அவளை அடிக்க கை ஓங்கினான் அவன்.

"ஓ! ஏக்கத்தோட காத்திட்டிருக்கறவங்க, இப்படித்தான் அடிக்க வருவாங்களோ... எனக்குத் தெரியாமப் போயிடுச்சே!"

அவள் குறும்புடன் உரைக்க, "இனிமே அடிக்க வரலை! அன்பா கட்டிப் பிடி வைத்தியம் செய்யவா... உனக்கு ஓகேன்னா எனக்கு டபுள் சம்மதம்!"

கண்கள் மட்டும் குறுஞ் சிரிப்பாய் புன்னகைக்க, முடித்தான் ஆதவன்!

"அதானே பாத்தேன்... கொஞ்சம் இடம் குடுத்தா அவ் வளவுதான்... எங்களுக்கு எந்த வைத்தியமும் வேண் டாம்!... வாங்க கிளம்பலாம்!" என்றபடி சில பொருட் களுடன் வெளியே வந்தாள் அவள்!



## 17

அந்த மாசக் கடைசியிலேயே ப்ரஷாவின் கீழ் ஃப்ளாட் டுக்கே ஊர்மிளா பால் காய்ச்சிக் குடித்தனம் வந்து விட்டாள்.

சரயுவும் அவளிடம் அம்மா அம்மாவென்று ஒட்டிக் கொள்ள ஆரம்பித்தாள்.

அலுவலகத்திலும், மறு வாரமே 'க்ரச்' தயாராகி விட, குழந்தைகளை அதிலயே விட்டு விட்டு அம்மாக்கள் நிம்மதியாக வேலை பார்க்க ஆரம்பித்தனர்.

இந்த ஐடியா ப்ரஷாவுடையதுதான் என்பதை அறிந்த எல்லாப் பெண்களுமே அவளைத் தேடி வந்து மனதார நன்றியுரைத்தனர்.

வாழ்க்கை... அழகாய் மாறிய உணர்வுடன் கைய சைத்துக் கொண்டே பயணிக்க, ஒரு நாள் அவளை செல்லில் அழைத்தான் ஆதவன்!



"ப்ரஷா! நாளைக்கு சனிக்கிழமை... மதியம் உனக்கு வேற ஏதாவது ப்ரோக்ராம் இருக்கா?" ஆர்வத்துடன் வினவினான்.

"ம்... இல்லை... க்ளீனிங் முடிச்சிட்டு ரெஸ்ட் தான்! சாயந்தரமா சரயுவை அழைச்சிட்டு பீச்சுக்குப் போகலா மின்னு இருக்கோம்!"

"ஓ! அப்ப எங்க வீட்டுக்கு என் கூட லஞ்சுக்கு வரே... ஓகேயா?"

"என்னது... நான் எப்படி உங்க வீட்டுக்கு... ஊஹூம்!"

சட்டென்று பதறி அவள் மறுக்க, "ஹேய்... என் வீடு என்ன ஜுராசிக் பார்க்கா... இப்படி பயப்படறே? அங்கேயும் மனுஷங்க தாம்மா இருக்காங்க.

"எங்க அம்மா துளசி... அப்பா வேதகிரி... அப்புறம் நிறைய வேலைக்காரங்க... நானே நினைச்சாலும், உன்னை எதுவும் பண்ண முடியாது... அதனால இந்த பயத்தை முதல்லே விடு!"

அன்புக் குரலில் அவன் ஆணையிட, அவளால் மீற இயலாது போயிற்று!

* * *

மறுநாள், தலை குளித்து தளரப் பின்னலிட்டு ஜர் தோசி ஒர்க் செய்த க்ரேப் புடவையில் எழிலோவியமாய் தயாராகிக் காத்திருந்தாள் ப்ரஷா!

அழைப்பு மணி ஒலித்ததும், துள்ளி ஓடிச் சென்று திறந்த வளை, இமை மூடாமல் ரசிக்க ஆரம்பித்தான் ஆதவன்!

முதன் முதலாய் புடவையில் அவளைக் கண்டவன், நல்ல உயரத்தில் சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய உடலமைப்பும், குறுகுறுக்கும் விழிகளும், லட்சணமான

முகமுமாய் ஒரு தேவலோக நங்கையைப் போல் நின்றிருந்தவளை, தலை முதல் கால் வரை, பார்வையா லேயே வருடினான்.

உடனே தேகம் கூசிச் சிலிர்க்க, சப்தஸ்வரங்களின் சங்கமமாய் ஒரு இசை அவளுக்குள்ளே கேட்டது.


''ம்... இன்னிக்கு அம்மாவும் அப்பாவும்... பாவம் க்ளீன் போல்ட் ஆகப் போறாங்க!'' குறும்புடன் கண் சிமிட்டிச் சிரித்தான்.

அவன் வார்த்தைகள் மனதில் பதியன் போடப்படா மலே போக, ''என்ன சொல்றீங்க?'' தவிப்புடன் வினவினாள்.

''போச்சுடா! அதுக்குள்ளே ரெண்டு ஸ்பீக்கரும் அவுட்டா? கடவுளே... எதைச் சொல்லி... எப்படிப் புரிய வச்சி... கத்திக் கத்தியே ஆயுசு முழுக்க கழிஞ்சிடும் போலருக்கே... ஹூம்... ஆதவா நீ பாவம்டா!''

வேண்டுமென்றே குறும்புடன் திருத்தியவன், ''கிளம்பலாமா மேடம்?'' என்று அழைத்தான்.

ஏனோ, அவனுடைய இயல்பான கேலியில் முகம் உதய வானமாய் சிவக்க, நேற்றே வாங்கி வைத்திருந்த பழங்கள், ஸ்வீட்டுடன் உடன் கிளம்பினாள் அவள்!



# 18

அவனுடைய வீடு, நீலாங்கரையில் பரந்த நிலப்பரப் பில் ஒரு குட்டி அரண்மனையைப் போல் பரந்து விரிந்த தோட்டத்தின் நடுவே... கம்பீரமாய்க் காட்சியளித்தது.



வாசல் கேட், ரிமோட்டின் உதவியுடன் தானே திறக்க, பிரமிப்பும் வியப்புமாய் அந்த மாளிகையை ஏறிட்டாள் அவள்!

''ஏன் இப்படி வாயைப் பிளக்கறே? இந்த ஏழையோட சிறு குடில் இதுதான்! வா!'' என்றபடி, இருபுறமும் பூக்கள் விரவித் தெரிந்த டைல்ஸ் பதித்த பாதையில் காரை உள்ளே செலுத்தினான் அவன்.

பிறகு இறங்கி உள்ளே செல்லும்போது, அதன் பிரம் மாண்டமும், செல்வச் செழிப்பும் அவளுள் சிறு பயத் தையே விதைக்க, நெஞ்சம் எதிலும் ஒட்டாமல் தவித்தது.

ஆனால் உள்ளே சென்று அவனுடைய தந்தையையும் தாயையும் சந்தித்ததும்... ஏனோ இதயம் லேசாகியது போல் ஒரு பிரமை!

இருவரும் அவ்வளவு எளிமையுடனிருந்தனர்... வாஞ்சையுடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

''இவங்க தான் என் அப்பா வேதகிரி... அம்மா துளசி...''

சிறு முறுவலுடன் அறிமுகம் செய்தான் அவன்!

பிறகு அவர்களிடம் திரும்பி, ''மிஸ். ப்ரத்யுஷா இவங்கதான்!'' என்றான்.

அவளும் பையை துளசியிடம் கொடுத்துவிட்டு இருவரையும் வணங்க, ''வாம்மா! இன்னிக்கு ஒரு ஸ்பெஷல் கெஸ்ட் வரப்போறதா தவா சொன்னான்! ஆனா யாருன்னு சொல்லலை... சர்ப்ரைஸ்ன்னான்!

''இப்பப் புரியுது... தன்னைப் பத்தி யோசிக்காம மத்தவங்களுக்காக நீ நிறைய யோசிச்சி செயல்படுவி யாமே... நம்ம கம்பெனியில குழந்தைகளுக்கு 'க்ரச்' உரு வாக்கணும்கிற திட்டத்தை சொன்னதும் நீதானாமே... தவா சொன்னான்!

''அதைக் கேட்டவுடனே உன்னைப் பாக்கறதுக்கு முன்னாடியே எனக்குப் பிடிச்சிப்போச்சு! இப்படி இந்தக் காலத்துல மத்தவங்களுக்காக யாரு யோசிக்கிறாங்க?''

''உன்னோட சமூக அக்கறை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! 'ஈ.சி.ஆர்.'ரோடுலே அய்யா பேரிலே ஒரு ஹோம் நடத்திட்டிருக்கோம்... உனக்கு நேரம் இருக்கறப்போ அங்கே வந்து பாரு! நானும் வாரம் ஒரு முறை அங்கே போயிடுவேன்!'' கம்பீரமாக முடித்தார் அவர்.

''ஓ! ஒரு ஞாயிற்றுக்கிழமை நானும் உங்களோட அங்கே வரேம்மா!'' ஆவலுடன் கூறினாள் அவள்.

''ஞாயித்துக்கிழமைகள்லே நான் எங்கேயுமே போக மாட்டேன்... அன்னிக்கு தான் அய்யாவும் தவாவும் வீட்டுலே ஓய்வா இருப்பாங்களே... அதனால அவங்களை கவனிக்கவே சரியா இருக்கும்... மத்த வேலைகள் வார நாட்கள்லேதான்!''

அவருடைய கரிசனமும் அக்கறையும், அவளுள் பெரும் மதிப்பை விதைத்தன.

''அப்போ சனிக்கிழமை வரேம்மா... அட்ரஸ் மட்டும் குடுங்க!'' என்று கேட்டு வாங்கிக் கொண்டாள்.

பிறகு, வேதகிரியும் துளசியும் அவள் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க, மெல்லிய குரலில் தன்னைப் பற்றிப் பகர்ந்தாள்.

''வெல்டன் ப்ரத்யுஷா! ஒண்ணு தெரியுமா? மனசால ரொம்ப அடிபடறவங்க...காயப்பட்டுப் போறவங்க, நிறையப் பேர் ஒய்ஞ்சுடறதில்லை... வாழ்க்கையில போராடி எதிர் நீச்சல் போட்டு சாதிச்சிக் காட்டறாங்க!''

''அந்த வெறியை அவங்களுக்குள்ளே ஏற்படுத்தறதே, அந்த கசப்பான அனுபவங்கன்னு கூட நான் சொல்லுவேன்!



''என்னைக் கூடப் பாரு! நான் அந்தக் காலத்துலயே வேற ஜாதியில காதல் திருமணம் செஞ்சுக்கிட்டேன்னு எங்க வீட்டில என்னை ஒதுக்கி வெச்சாங்க!''

''அதுவே பெரிய வெறியாக மாறி என்னை தொழில்லே இறக்குச்சு! சிவில் டிப்ளமோதான் படிச்சிருந்தேன்... முதல்லே ரியல் எஸ்டேட் கன்ஸ்ட்ரக்ஷன், அப்புறம் தீம் பார்க், இப்ப கம்ப்யூட்டர் கன்சர்ன்னு என்னை நான் ஷேப் பண்ணிக்க உதவினதே... எனக்கு நேர்ந்த கசப்பான அனுபவங்கள்தான்!

''என்னைப் புறக்கணிச்சவங்க... என்னை நிராகரிக்கவே முடியாதபடி என்கிட்டயே வேலைகேட்டு வந்து நிக்கற மாதிரி ஒரு நிலை வந்தது...

''ஆரவாரமா ஓடிட்டிருந்த காட்டாறு மாதிரி உழைப்பு உழைப்புன்னு ஓடினாலும், அதுக்கு நிதானமான ஒரு கரையா இருந்தா துளசி!

''அவங்க வீட்டிலே எங்களை ஏத்துக்கிட்டாலும், அவங்க உதவியையும் ஏற்க மறுத்தா... சுயமா வந்தோம்...

''இப்போ... பாதிப் பொறுப்பை தவா கிட்ட ஒப்படைச்சாச்சு! அமைதியா ஓடற நதி மாதிரி ஆயிட்டேன் நான்!'' சிறு முறுவலுடன் முடித்தார்.

அவள் விழிகளிலோ பெரும் வியப்பும் பிரமிப்பும்... கூடவே அவருடைய வாழ்க்கைப் பயணத்தை அறிந்த நிறைவும்!

''என்னப்பா அதிசயமா இருக்கு... உங்க பூர்வ கதையை நீங்க யார் கிட்டயுமே சொல்லி நான் கேட்டதில்லையே!'' ஆச்சர்யத்துடன் கூறினான் அவன்.

''ஆமாம்! முன்னாடி நீ அழைச்சிட்டு வந்தியே ஒரு கிளாமர் டால்... பேரென்ன.... சுகந்தியா? அந்தப்

பொண்ணுகிட்டே எல்லாம் இதை சொன்னா, 'கிழம் சரியான அறுப்பு கேஸ்'ன்னு முகம் சுழிச்சிருப்பா!

''ஆனா ப்ரஷா அப்படி இல்லைன்னு பாத்தாலே தெரியுது... அவளுக்கு குடும்பம், உறவுகள், அதோட அருமை எல்லாமே தெரிஞ்சிருக்கு!

''கூடவே நிறைய மனிதாபிமானம், சமூக அக்கறை, மத்தவங்களுக்காக யோசிக்கற கருணை மனசு எல்லாமே இருக்கு... அதைவிட ப்ரஷாவை எனக்குப் பிடிச்சிருக்கு! அதான் சொன்னேன்'' என்றவர் அவளிடம் திரும்பினார்.

''இப்படியே இரும்மா நீ... மாறிடாதே... இந்தப் பட்டணத்துப் பகட்டுலே மயங்கி உன் இயல்பை, அந்த அன்பான முகத்தைத் தொலைச்சிடாதே!'' கனிவுடன் அறிவுறுத்தினார்!

சிறு முறுவலுடன் அதை ஏற்றுத் தலையசைத்த வளைப் பரிவுடன் உள்ளே அழைத்துச் சென்றார் துளசி!



## 19

பிறகு வீட்டைச் சுற்றிப் பார்த்தபோது, உள் அலங் காரங்கள் வெகு நேர்த்தியாக இருந்தன!

பழைய கால அரண்மனை ஒன்றிற்குள் நுழையும் உணர்வு ஏற்பட, அதை அப்படியே கூறிவிட்டாள் அவள்!



''ரொம்ப அழகா இருக்கு! மாடர்னாவும் இல்லாம அதே சமயம் நிறைய மர வேலைப்பாடோட, பழங்கால பாரம்பரியமும் சேர்ந்து ஒரு ஆண்ட்டிக் எஃபெக்டோட, உங்க வீடு ரொம்ப அழகா இருக்கும்மா!''

ரசனையுடன் கூறியவளையே, கண்களில் குறுகுறுப் புடன் வருடின அவன் விழிகள்!

''இதெல்லாம் நம்ம தவாவோட ஃப்ரெண்ட் கன்யாதான் செஞ்சா! இன்டீரியர் டெகரேஷனுக்கு பேர் போனவ அவ!

''ஆனா ஐடியாவெல்லாமே தவாவுடையது! ரெண்டு வருஷம் முன்னாடி இந்த வீட்டையே மாத்தி அமைச்சான் அவன்!'' பெருமையுடன் முடித்தார்.

உடனே அவன் இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள, சட்டென்று சிரிப்பு வந்தது அவளுக்கு!

சுற்றிலும் கம்பியிடப்பட்ட பெரிய வெராந்தாவில், நடுவே அழகிய குட்டி இளவரசியைப் போல் அசைந்து கொண்டிருந்த ஊஞ்சலைப் பார்த்தால், பழைய ஞாபகங்கள் அலைபுரண்டு வந்தன.

ஒரு காலத்தில், ஊர்மிளாவின் வீட்டில் இருவரும் ஊஞ்சலே கதி என்று ஆடிக் கொண்டிருப்பார்கள்.

சிறு வயதில், அந்த ஊஞ்சல்தான் இருவருக்குமே உற்ற தோழி என்று கூடக் கூறலாம்!

இன்று ஆதவனின் வீட்டில், ராஜஸ்தான் வேலைப்பாட் டுடன் வெள்ளிப் பூண்களிட்ட அலங்காரச் சங்கிலியில் கோர்க்கப்பட்டு, முகம் பார்க்கும் அளவு பளபளப்புடன் தெரிந்த ஊஞ்சல், அவளைப் பாசத்துடன் ஈர்த்தது!

உடனே ஓடிச் சென்று கம்பிகளைப் பற்றி வாஞ்சை யுடன் வருடியவளைக் கனிவுடன் ஏறிட்டார் துளசி!

''உனக்கும் ஊஞ்சல்னா ரொம்பப் பிடிக்குமாம்மா! இந்த வீட்டில தவாவுக்குப் பிடிச்ச இடமே இந்த ஊஞ்சல் தான்!

''ஓய்வா இருக்கற நேரங்கள்லே இங்கேதான் படுத் துட்டு ஆடிட்டே இருப்பான்!''

அவர் கூறியதும், இவ்வளவு மென்மையான மனம் கொண்டவனா இவனென்ற வியப்புடன் அவனிடம் திரும்பினாள்.

''என்ன பாக்கறே? அங்கே ஆஃபிஸிலே ரொம்ப அரிஸ் டோகிராட்டிக்கா, சொப்பஸ்டிகேட்டட்டா இருக்கறவ னுக்குள்ளே இவ்வளவு சின்னச் சின்ன ரசனைகளான்னா?''

அவன் கேட்டதும், தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு!

இவன் என் இதயத்தில் ஓடும் எண்ணங்களை எப்படி ஒரு வரி விடாமல் வாசிக்கிறான் என்ற விதிர்ப்பும், பயமும் போட்டி போட்டு வந்தன.

''என்ன... பதிலே காணோம்? முகம் கூட மாறிடுச்சி... என்னடா...இவன் சுலபமா நம்ம மனசைப் படிச்சிடு றானே... அப்படியே உள்ளே போய் அங்கே இருக்கிற அவனோட உருவத்தையும் பாத்துட்டா, என்ன செய்யற துங்கிற பயமா?''

ஆழ்ந்த குரலில் அழுத்தமாக அவன் வினவ, அந்த மாயத் தருணம் மிக அற்புதமாய்!

ஆனால் ஏதோ பழைய நினைவில் அது கலைந்து விட, சுற்றிலும் பார்வையை ஓட விட்டாள்!

''அம்மா போயி ரெண்டு நிமிஷமாச்சு! உனக்கு ஜூஸ் அனுப்பறேன்னுட்டுப் போனாங்க! நான் சொன்னது ஏதாவது புரிஞ்சுதா?''



மென் சிரிப்புடன் வினவினான் அவன்.

அவள் பதறி நிமிர்ந்தபோது, அந்தப் பார்வையில் காஷ்மீரத்து 'தால்' ஏரியின் குளிர்ச்சி தெரிவதாய்!

ஒரு கணம் அதில் ஆழ்ந்து சிலிர்த்து நின்றவள், உடனே தலையைக் குலுக்கித் திரும்பினாள்.

''பயமா?'' திடீரென்று கேட்டான் அவன்!

''எதுக்கு?''

குழப்பத்துடன் வினவியவளிடம், ''ம்... இந்த சாம்ராஜ்யத்து ப்ரின்ஸோட சார்மிலே மயங்கி உன்னையே தொலைச்சிடுவோமோன்னு பயமான்னு கேட்டேன்!''

''ம்... ராஜா கால தர்பாரெல்லாம் முடிஞ்சு பல வரு ஷங்களாச்சு... தெரியுமில்லையா? இப்ப இளவரசர் களெல்லாம் தேடினாக்கூட கிடைக்கமாட்டாங்க!''

உதடுகளைச் சுழித்தபடிக் கேலியாகக் கூறினாள் அவள்.

''எங்கேயும் போய் தேட வேண்டாம்... இதோ உன் முன்னாடியே நிக்கறது தெரியலை?''

குறும்புடன் அவன் கேட்க, அவள் யாரையோ தேடு வது போல் வேண்டுமென்றே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''கிழிஞ்சுது போ! உன் எதிர்லே ஆறடி உயரத்துக்கும் மேல் கம்பீரமா ஒருத்தன் நின்னுட்டிருக்கானே... அது தெரி யலையா? போச்சு... ஸ்பீக்கர் மட்டும் தான் அவுட்டுன்னு நினைச்சேன்... ஃபோகஸ் லென்ஸூம் காலியா?''

குலுங்கிக் குலுங்கி அவன் சிரிக்க, அது அவளையும் தொற்றிக் கொண்டது!



# 20

பிறகு மாடியிலிருக்கும் பால்கனிக்குச் சென்றபோது, "ஓ! இதுதான் அரசகுமாரனோட உப்பரிகையோ?" குறும்புடன் கேட்டாள் அவள்!

"ஆமாம்... தேங்க்ஸ்" என்றான் அவன்!

"அதென்ன தேங்க்ஸ்?"

அவள் புரியாமல் வினவ, "ம்... என்னை ஒரு ப்ரின்ஸ் தான்னு ஒத்துக்கிட்டதுக்கு! அதோட இந்த அரசகுமாரன் ராணி இல்லாமத் தனியா இருக்கானே பாவம்... அதுக்கு ஏதாவது செய்வோம்னு அக்கறையாத் தோணுதா? சே!"

போலியாக சலித்தவனிடம் "சார்! நான் மேரேஜ் புரோக்கர் இல்லை... மேட்ச் மேக்கிங் என் வேலை கிடையாது. நான் ஒரு சாஃப்ட்வேர் இஞ்சினியர்!" அவளும் கேலியாகவே முடித்தாள்.

"அதென்ன திமிர்னு சார்...? ஆதவன்கிற பேரு சின்னதுதாம்மா... மறந்துடுச்சா...? ப்ச்! என்னவோ... பெரிய இஞ்சினியர்... கம்ப்யூட்டரைப் புரிஞ்சிக்கிட்ட அளவு மனசைப் புரிஞ்சிக்கத் தெரியலையே!"

அடிக்குரலில் முணுமுணுத்தான்!

"என்ன... இப்ப என்ன சொன்னீங்க?"



"ம்... நீ ஒரு வாத்துன்னு சொன்னேன்... போதுமா? வா... கீழே போகலாம்!"

அவன் இறங்க ஆரம்பிக்க, உள்ளூரச் சிரித்தபடி அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

மனதோரம்... மௌனச் சிறகடிப்பாய் அவன் வார்த்தைகள்!

இருவரும் கீழே வந்ததும், அனைவரும் சாப்பிட அமர்ந்தனர்.

மகனுக்கும், கணவருக்கும் பிடித்தவற்றை நடுவிலேயே அமர்ந்து கரிசனமும், பாசமுமாய் பரிமாறிய துளசியின் கரிசனம், அவளுக்குள் சிறு ஏக்கத்தை விதைப்பதாய்!

சின்னஞ்சிறு பெண்ணாய் அவள் இருக்கும் போதே இறந்த தாயையும், தன்னைப் பாசத்துடன் தாயுமானவனாய்ப் பேணிய தந்தையையும் உடனே நினைவுப்படுத்தின.... அவருடைய செயல்கள்!

விழியோரம் துளிர்க்க, அதை அடக்கியபடி உண்ண ஆரம்பித்தாள் அவள்.

பிறகு சாப்பிட்டுவிட்டு அவள் விடைபெற, அழகிய டிசைனர் சேலை ஒன்றைப் பரிசளித்தார் துளசி!

"எதுக்கும்மா இதெல்லாம்... வேண்டாம்... உங்க ஆசீர்வாதம் மட்டும் போதும்!"

அவர்களுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தாள் அவள்.

"நம்ம வீட்டுக்கு யார் வந்தாலும் வெறும் கையோடப் போகமாட்டாங்க! ஏதாவது குடுத்துதான் அனுப்புவோம்!"

அவர் கூறியதும் அவளிடம் குனிந்தவன், ''என்னைப் புரிஞ்சிக்காததுக்கு ரெண்டு உதை குடுத்து அனுப்ப லாமின்னுதான் சொன்னேன்... இந்த அம்மாதான் கேட்கலை!'' சீண்டலாகக் கிசுகிசுத்தான்.

''ம்...வீட்டுக்கு வந்தவங்களுக்கு அடிதான் குடுப் பீங்களா? தெரிஞ்சிருந்தா வந்திருக்கவே மாட்டேன்!''

அவளும் கேலியாகவே முணுமுணுத்து விட்டு, பெரியவர்களிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.

* * *

காரில் திரும்பி வரும் போது, இருவரிடையேயும் நிலவிய மௌனம் மிகவும் அர்த்தம் நிறைந்ததாய்!

''ம்... இந்தப் பெண்களைப் புரிஞ்சிக்கவே முடி யலைப்பா?''

திடீரென்று, அவளைக் கலைத்தது அவன் குரல்!

''ஏன்?''

புரியாமல் வினவியவளிடம், ''ஒண்ணுமில்லை...'' ஒரு பெருமூச்சுடன் முடித்தான் ஆதவன்!

உடனே, ''உங்க அம்மாவும் அப்பாவும் ரொம்ப அருமையான மனுஷங்களா இருக்காங்க ஆதவன்! எனக்கு அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு!'' பெருமிதத்துடன் உரைத்தாள் அவள்.

''ஆமாம்! அந்த விஷயத்துல நான் ரொம்ப லக்கி! ஆனா எனக்கு வரப் போற மனைவியும் அவங்க மாதிரியே பாசம், ப்ரியம், மனித நேயம், கருணை, அக்கறை எல்லாம் நிறைஞ்சவளா இருக்கணும்னு நான் நினைக்கிறேன்... பாப்போம்!''



ஒரு பெருமூச்சுடன் நிறுத்தியவனிடம், ''அவங்க ளோட அற்புதமான மனசுக்கு நல்ல மருமகளே அமை வாங்க!'' பட்டும் படாமல் முடித்தாள் அவள்!

''ஏன்... என் மனசுக்குன்னு சொல்லமாட்டியா?''

என்றவனது உள்மனது ''நானே வரேன்னு சொல்ல மாட்டாயா?'' என்று கேள்வி எழுப்பியது!

''ப்ச்... நான் உங்களையும் சேர்த்துதான் சொன்னேன் ஆதவன்!''

ஏதோ யோசனையுடன் கூறியவளையே, ஓரக்கண் ணால் கூர்ந்தான் அவன்!

உடனே ''சரி... நம்ம கதை இருக்கட்டும்! குருவோடப் பேசினீங்களா? என்ன சொன்னாரு? ஊர்மிதான் இப்ப தனியா குடித்தனம் வந்துட்டாளே! அப்புறம் என்ன வாம்?'' மெல்லக் கேட்டாள்.

''அவனோட பழைய கணிப்பு இன்னும் மாறாமத்தானே இருக்கு! இந்த வாரம் முடிவாப் பேசிடலாமின்னு இருக் கேன்! பார்ப்போம்!''

''அப்படி நீங்க பேசலைன்னா நான் பேசறேன்! பாவம் அவ... அந்தக் குட்டிப் பாப்பா சரயுவும், அப்பாவோட அன்பில்லாம இருக்கா! இன்னும் கொஞ்சம் வருஷம் போய் ஸ்கூல்லே சேர்ந்துட்டா, அப்போ தனக்கு மட்டும் அப்பா இல்லையேன்னு அவளுக்குத் தோணாதா?''

''சில மனுஷங்க ஏன்தான் இப்படி மனிதாபிமானம் இல்லாம இருக்காங்களோ... எரிச்சலா இருக்கு!''

கோபத்துடன் அவள் படபடக்கும் போதே, வீடு வந்து விட்டது.

கீழே முன்புறமிருந்த கார் பார்க்கிங்கில், தத்தித் தத்தி ஓடி ஒரு காகத்தைத் துரத்தியபடி ஊர்மியிடம் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் சரயு!

ப்ரஷாவைக் கண்டதும் ''ஷாம்மா...'' என்று ஓடிவந்து கால்களைப் பிரியத்துடன் கட்டிக் கொண்டாள்.

''வாங்க சார்...''

வரவேற்ற ஊர்மி, ''ஏய்... அவளை விடு... புதுப் புடவை... சாப்பாட்டைத் தேய்ச்சி அழுக்காக்கி நாசம் பண்ணிடாதே!'' மகளை அதட்டியபடி இழுத்தாள்.

''ப்ச்... விடு ஊர்மி! துவைச்சா போயிடப் போகுது...'' என்றபடி அப்படியே அவளை அள்ளி ஏந்தி அணைத்துக் கொண்டாள் ப்ரஷா!

அவளுடைய தாய்மை உணர்வை உடனே உணர்ந்தவனுடைய பார்வை, மெல்ல இளகியது... இதயம் இதமாய் இன்னிசை எழுப்பியது!

''அதென்ன ஷாம்மா?''

அவன் வினவ, ''முதல்லே அம்மா... அம்மான்னா! மத்தவங்க என்ன நினைப்பாங்களோன்னு ப்ரஷாம்மான்னு சொல்லித் தந்தா, முதல் பாதியை விட்டுட்டு ''ஷாம்மா'ன்னு பிடிச்சிக்கிட்டா!''

ஊர்மி தான் விளக்கமளித்தாள்.

''ஓ... நான் அப்ப கிளம்பறேன் ஷாம்மா!''

அவன் குறும்புடன் விடைபெற, பெண்கள் இருவரும் புன்னகையுடன் தலையசைத்து விடை கொடுத்தனர்.

''பை குட்டி சரயூ!'' என்றபடி அவளிடமும் கூறிவிட்டு, காரை எடுத்தான் அவன்.



அவன் கார் பார்வையிலிருந்து மறைந்ததும், குறும்புடன் அவளிடம் திரும்பினாள் ஊர்மி.

''ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாருந்தது ப்ரஷா! ஆதவன் சார் உன்னை விரும்பறார்ன்னு நினைக்கிறேன்! ஆல் தி பெஸ்ட்!''

உற்சாகத்துடன் வாழ்த்தினாள் அவள்.

''ஊர்மி... உன் வாழ்க்கை எனக்கு ஒரு பாடம்... என் வாழ்க்கையும் தான்... எந்த ஆணையும் அவ்வளவு சுலபத்துல நம்ப நான் தயாரா இல்லை!

''அதோட, அவர் பெரிய மல்ட்டி மில்லியனர்! நான் சாதாரணமானவ... ஒரு மிடில் கிளாஸ் அநாதை! இந்த ஓவர் பில்டப் உடம்புக்கு ஆகாதும்மா!

''எனக்குன்னு ஒரு குப்பனோ சுப்பனோ எங்காவது பிறந்திருப்பான்... அவன் நேரில வரப்ப பாத்துக்கலாம்!'' ஆர்வமின்றி முடித்தாள்.

''ஏய்... பொய் சொல்லாதே! எங்கே உன் மனசைத் தொட்டு சொல்லு... அங்கே ஆதவன் சார் இல்லைன்னு!''

குறும்புடன் வினவினாள் ஊர்மி!

''ப்ச்! மனசு சின்னக் குழந்தை மாதிரி ஊர்மி! எதை வேணாலும் ஆசைப்படும்...

''ஆனா, அறிவுக்குத் தெரியும் அது கிடைக்காதுன்னு...! அறிவு ஒரு முதிர்ந்த பக்குவப்பட்ட எதார்த்தவாதி... நான் அது பேச்சைத் தான் கேப்பேன்!''

''இப்போ, சரயுவே வானத்துல பறக்குற விமானத்தை ஆசைப்பட்டா, அதை நம்மால வாங்கித் தர முடியுமா? தூர இருந்து பாத்து ரசிக்கலாம்...! வேணா பொம்மை ஏரோப்ளேன் வாங்கலாம்! அது மாதிரித்தான் இதுவும்!''

''அப்போ ஏன் உன்னை மட்டும் ஸ்பெஷலா அவர் தன் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகணும்!'' விடாமல் கேட்டாள் அவள்.

''ஓ... அதுவா? நம்ம கம்பெனியில க்ரச் நடத்த ஏற்பாடு செஞ்சேனே... அந்த ஐடியாவை தந்தது நான்தான்னு வீட்டில ஆதவன் சொல்லியிருக்காரு!

''அவங்க அம்மாவும் அப்பாவும் ரொம்ப அற்புதமான மனுஷங்க! ஊருக்கு வெளியே ஒரு அனாதை ஆசிரமம் கூட நடத்தறாங்களாம்...!

''என் முயற்சியைப் பாராட்டத்தான் அழைச்சிட்டு வரச் சொன்னாங்களாம்! நம்ம சுகந்தி கூட ஒரு தடவை அங்கே போயிருக்காளாம்! அப்போ அவளையும் ஆதவன் விரும்பறாருன்னு சொல்லுவியா?''

தோழியை மடக்கிய திருப்தியுடன் ''பைடா சரயு!'' என்றபடிப் படியேற ஆரம்பித்தவளைத் தடுத்தது ஊர்மி யின் குரல்!

''பாப்போம்! நீ மாறுவேன்னு தான் நான் நினைக் கிறேன்... அப்ப உன்னை விட மாட்டேன்'' என்றபடி, சரயுவைத் தூக்கிக் கொண்டு தன் வீட்டிற்குள் சென்றாள்.

* * *

அன்று மாலையே ஸ்கூட்டியில் கிளம்பி இருவரு மாகக் குழந்தையுடன் கடற்கரைக்குச் சென்றிருந்தனர்.

இருபுறமும் அவளைப் பிடித்தபடி இருவரும் அலை களில் பாதம் பதித்திருக்க, அலையின் கரங்கள் பாதங் களை இதமாய்ப் பிடித்து விட்டன!

பிறகு, ஆர்ப்பரிக்கும் அலைகளைப் பார்த்து சரயு பயந்ததால், ஊர்மி கரையிலேயே அமர்ந்திருக்க, கடலில்



துள்ளும் மீனாய்த் துளைத்து உற்சாகமாய் நின்றிருந்தாள் அவள்.

'ப்ரஷா! உனக்கு போன்!''

ஊர்மி அழைத்ததும் மனமின்றி தண்ணீரை விட்டு வந்து எடுத்தால், ஆதவன் தான் பேசினான்.

''எங்கே இருக்கே ப்ரஷா?'' ஆர்வத்துடன் வினவினான்.

''ம்... பீச்சில இருக்கோம்! என்ன விஷயம் ஆதவன்?''

''குருவோட அம்மாவைத் தனியா கோவில்லே பாத்தேன்... ஊர்மி பத்தி சில விபரங்களைக் கேட்டப்ப, முன்னுக்குப் பின் முரணாத்தான் பேசினாங்க... தப்பு அவங்ககிட்டதான் இருக்கற மாதிரித் தெரியுது!

''அவங்களை ஒரு நாள் வீட்டிலே போய்ப் பாத்து பேசணும்! கூடிய சீக்கிரமே அதை செய்வோம்... அப்ப என் கூட நீயும் வந்தா பெட்டர்! பாப்போம்... ஹேவ் எ நைஸ் டே!'' என்றபடி வைத்தான்.

உடனே, கடற்கரை மணலில் சிறுவீடு கட்டி சுற் றிலும் அகழி அமைத்து சரயுவிற்கு விளையாட்டுக் காட்டி னாள் ப்ரஷா!

''வாழ்க்கைகூட இப்பல்லாம் இந்த மாதிரி மணல் வீடுகளா ஆயிடுச்சி ப்ரஷா!

''முன்னாடி மாதிரி அன்பால அடித்தளம் போட்டு நேசக் கட்டடம் எழுப்பி நம்பிக்கையோட வாழற உறுதி யான திருமண வாழ்க்கை ஏன் இப்பல்லாம் இல்லாமப் போச்சு?''

ப்ரஷாவிற்கு பதில் கூற இயலவில்லை.

# 21

அந்த வாரத்தில் ஒரு நாள், ஊர்மியும் ப்ரஷாவும் மாலை யில் ஸ்கூட்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஒரு தெருவின் திருப்பத்தில், சிறு கூட்டம் ஒன்று தெரிய ஆளாளுக்கு விவாதித்தபடி அங்கிருந்த ஒரு குப்பைத் தொட்டியை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

உடனே வண்டியை ஓரம் கட்டி நிறுத்தியவள், "இங்கேயே இரு ஊர்மி... நான் என்னன்னு பாத்துட்டு வரேன்" என்றபடி அங்கு சென்றாள்.

எட்டிப் பார்த்தால், குப்பைத் தொட்டியில் ஒரு சிறு சிசு கை காலை அசைத்து தீனமாய்க் குரல் எழுப்பிக் கொண்டிருந்தது.

உடனே பதட்டத்துடன் குனிந்து அந்தக் குழந்தையை எடுத்து ஏந்தியவள், "இது யாரோட குழந்தைன்னு உங்க யாருக்காவது தெரியுமா?" கவலையுடன் கேட்டாள்.

"நான் இந்த வீடுதாம்மா! தெரிஞ்சா எம்மா சுத்தி நின்னு வேடிக்கை பாக்கறோம்... தூக்கி அவங்க கையிலயே குடுத்து அனுப்பமாட்டோம்!" ஒரு முதியவர் கேட்டார்.

"சரி! இந்தக் குழந்தையை எடுத்திட்டுப் போய் ஒரு ஆசிரமத்துல ஒப்படைச்சிடறேன்! இது என் விசிட்டிங் கார்டு... யாராவது வந்து தேடினா விபரம் சொல்லி, என்



போன் நம்பரைக் குடுங்க!" என்றபடி அவரிடம் தன் கார்டைக் கொடுத்தாள்.

பிறகு ஊர்மிளாவிடம் திரும்பியவள், "வண்டியை இவர் வீட்டிலேயே நிறுத்திடுவோம்! உடனே நான் ஆதவனோட அம்மாவுக்கு போன் பண்ணி பேசறேன்! நீ ஆட்டோவில வீட்டுக்குப் போயிடறியா?" என்று கேட்டாள்.

"இல்லை! நீ தனியாப் போக வேண்டாம்! பக்கத்துல தான் முருகன் அண்ணா வீடு... அங்கே போய் சரயுவை விட்டுட்டு நாம ரெண்டு பேருமாப் போகலாம்! வண் டியையும் அங்கேயே விட்டுடலாம்!"

ஊர்மி கூறிய யோசனையை ஏற்றவள், உடனே முருக னுடைய செல்லுக்குத் தொடர்புகொள்ள, நல்ல வேளை யாக அவன் வீட்டிலிருந்தான்.

அவள் விபரம் கூறியதும் உடனே வருவதாகக் கூறி னான்.

பிறகு அவனுடன் ஊர்மிளாவையும் குழந்தைகளையும் அனுப்பியவள் ஸ்கூட்டியில் பின் தொடர்ந்தாள்.

அவனுடைய வீட்டிற்குச் சென்றதும் ஆதவனுக்கும் தகவல் கொடுக்க, அவன் முக்கியமான மீட்டிங்கில் இருப்பதால் அதை முடித்துவிட்டு, நேரே அங்கு வருவ தாகக் கூறினான்.

தன் தாயிடம் பேசும்படி தொலைபேசி எண்ணை அளித்தவனுக்கு நன்றி கூறி வைத்து, அவருக்குத் தொடர்பு கொண்டாள் அவள்.

உடனே அந்த ஆசிரமத்தின் முகவரியும் தொலைபேசி எண்ணையும் அளித்தவர், தானே அங்கு பேசி விடுவ தாகவும் கூறினார்.

பிறகு, முருகனின் காரில் கிளம்பி குழந்தையை எடுத்துக் கொண்டு ஊர்மிளாவின் துணையுடன் ப்ரஷா ஆசிரமத்திற்குக் கிளம்பினாள்!

அங்கு சென்றதுமே, அதன் நிர்வாகி அவர்களை அன்புடன் வரவேற்று, துளசியம்மா போன் செய்த விபரத்தைக் கூறினார்.

அந்தப் பச்சிளம் சிசுவை அவரிடம் ஒப்படைத்து, அதைக் கண்டெடுத்த இடத்தைப் பற்றியும் கூற, அவர் பதிவு செய்து கொண்டார்.

முருகனின் வீட்டில் சிறு பாலாடையில் பாலைப் புகட்டியிருந்ததால், குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது.

பெண் குழந்தை என்பதால் குப்பைத் தொட்டியில் போட்டிருப்பார்களா... இல்லை தவறான முறையில் பிரசவித்த சிசுவென்பதால் இப்படியா... அவளுக்குள் பல குழப்பங்கள்!

மனதிற்குள் விரக்தியுடன் ஜனித்து ஒரு சோகக் கவிதை!

**கலியுக விநோதம்...**

**குப்பைத் தொட்டிகள் கூட**

**கருவறைகளாய்!**

**கர்ப்பம் தரிக்காமலே**

**குழந்தைகளைப்**

**பிரசவிக்கின்றன!**

''என்னடி சிரிக்கறே?''

ஊர்மி கேட்டதும் தன் மனதில் தோன்றியதை ஒரு கசந்த முறுவலுடன் கூறினாள்.

''ஓ! டைம்லி பன்ச்! நல்லாருக்கு!''



அவள் பாராட்டும் போதே, அந்த ஆசிரம நிர்வாகி ப்ரஷாவை அழைத்தார்.

''மிஸ் ப்ரத்யுஷா! அந்தக் குழந்தைக்கு ஒரு பெயர் சொல்லுங்களேன்... துளசி மேடம் உங்க கிட்டே கேக்க சொன்னாங்க!'' என்றார்.

மறுகணமே யோசித்தவள், ''ஆராதனா... நல்லாருக்கா?'' ஆவலுடன் கேட்டாள்.

''சரிம்மா! அதையே வெச்சிடலாம்'' என்று ஒப்புக் கொண்டார் அவர்.

பிறகு எல்லா ஃபார்மாலிட்டிகளையும் முடித்துக் கிளம்பும் நேரம், ஆதவன் அங்கு வந்து விட்டான்!

அந்த நிர்வாகியிடம் சிறிது நேரம் பேசியவன், அவர்களிடம் வந்தான்.

''குட் ஜாப் ப்ரஷா! நமக்கென்னன்னு போகாம இங்கே கொண்டு வந்து சேத்திருக்கியே அது பெரிய விஷயம்! கிளம்பலாமா?'''' சிறு முறுவலுடன் கேட்டான்.

பிறகு முருகனுடைய காரில் ஏறப் போனவளை அழைத்தவன், ''நான் உன் கூடக் கொஞ்சம் பேசணும்! அவங்க போகட்டும்'' என்றபடி முருகனுக்கு பணம் கொடுக்க, அவன் வாங்க மறுத்துவிட்டான்.

''நானும் மனுஷன்தான் சார்! ஒரு நல்ல காரியத்துக்கு உதவக் கூலி வேண்டாம்!'' உறுதியாக மறுத்துவிட்டு ஊர்மியுடன் கிளம்பினான்.

ஒரு நொடி வியப்புடன் இரு புருவங்களையும் உயர்த்தி அவனையே தொடர்ந்த விழிகளை விலக்கி, தோளைக் குலுக்கி, ''கெட்-இன்'' என்றபடிக் காரில் ஏறினான் ஆதவன்!

"ப்ரஷா! குரு கொஞ்சம் இறங்கி வந்திருக்கான்... நேத்து தான் நான் சொல்ல வந்ததை முழுசாக் கேட்டான்!

"ஆனா தன் அம்மா அப்படி செஞ்சிருக்கமாட்டாங்கன்ற தவிப்பையும், தான் தப்பு பண்ணிட்டோமோன்ற சஞ்சலத்தையும் அவன் முகத்துல பாத்தேன்... கூடிய சீக்கிரமே அவன் மாறுவான்னு நினைக்கிறேன்!"

அவன் கூறியதும், பெரும் நிம்மதியுடன் பின்புறம் சாய்ந்து கண் மூடி "தேங்க்யூ ஆதவன்" என்றாள் அவள்.

"இந்த பிரச்சனை சுலபமா முடிஞ்சா எனக்கு நீ என்ன தருவே ப்ரஷா?"

உலர்ந்த குரலில் அவன் கேட்க, "ம்... என்ன வேணும் ஆதவன்... உங்க கிட்ட இல்லாததா? என்கிட்ட என்ன இருக்கு?" ஒருவித இயலாமையுடன் உரைத்தாள்.

"ம்... அதை, இந்த ப்ராப்ளம் சால்வ் ஆன பிறகு கேக்கறேன்... ஆனா மறுக்காம நான் விரும்பறதைத் தாணும்!"

அவன் பொடி வைத்துப் பேச, அவளுக்குள் பெரும் விதிர்ப்பாய்!

மெல்லப் பரவிய குளிர், இதயத்தில் சிறு நடுக்கத்தை ஏற்படுத்த, மெதுவாகத் தலையசைத்தாள்.



# 22

மறுநாளே நடந்த அந்த நிகழ்வு, குருவின் பொறாமை மனப்பான்மையை வெட்ட வெளிச்சமாக்குவதாய்!



அன்று மதியம், சாப்பிட்டுக் கொண்டே ப்ரஷாவும் உசேனும் ஊர்மியும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

"என்ன ப்ரஷா? இன்னிக்கு முகத்துல தௌசண்ட் வாட் பல்ப் எரியுது... ஏதாவது ஸ்பெஷல் நியூஸா? நேத்து ஆதவன் சாரோட தனியா போறப்பவே நினைச்சேன்!"

குறும்புடன் அவள் வினவ, உசேன் வியப்புடன் விழி விரித்தான்.

"ஓ! இந்த ஆஃபிஸிலே எனக்குத் தெரியாம இவ்வளவு நடந்திருக்கா... என்னன்னு எனக்கு சொல்லக் கூடாதா ஊர்மிளா?" ஆர்வத்துடன் வினவினான்.

பிறகு அவள் நேற்று நடந்த விஷயங்களைக் கூற, "ஓ! வெல்டன் ப்ரஷா!" என்று கையை குலுக்கிப் பாராட்டினான்.

"இதுவே நானா இருந்தாக் கூட நமக்கு எதுக்கு வம்பு... போலீஸுக்கு அலைய முடியாதுன்னு கண்டுக்காமத் தான் போயிருப்பேன்" என்றான் அவன்.

"அதான் ப்ரஷா! சின்ன வயசலருந்தே அவ அப்படித் தான் உசேன்! எங்க ஊரிலே ஒரு வாய்க்கால் இருக்கு... அதிலே எப்பவாவது இதுமாதிரி தப்பாப் பிறந்த குழந்தைங்களை விசிடுவாங்க போலருக்கு!

"பிங்க் கலரிலே வாய்க்கால்லே மிதந்து போற அந்த உயிரில்லாத சிசுக்களைப் பாத்தா ப்ரஷா உடைஞ்சு போயிடுவா!

"அந்தக் குழந்தைகளை அப்படியே அள்ளி எடுத்து "ஓ"ன்னு கதறணும் போலருக்குன்னு என்கிட்டே சொல்லுவா... சின்ன குழந்தைங்க கிட்ட எப்பவுமே அவளுக்கு ரொம்ப சாப்ட் கார்னர் உண்டு!"

உற்சாகத்துடன், தங்களின் பால்ய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தாள் அவள்!

தாங்கள் காக்கா கடி கடித்து சாப்பிட்ட கமர்கட்... தோட்டத்தில் சமைத்து உண்ட கூட்டாஞ்சோறு... மைதானத்தில் நடத்திய பாட்டுப்போட்டி... இருவரும் சிலிர்த்து ஆடிய ஊஞ்சல்... டேப்ரிகார்டரை போட்டுவிட்டு நடனம் பழகிய நாட்கள்... மணல் குவித்து அமர்ந்து டெண்ட் கொட்டகையில் பார்த்த 'சிவந்த மண்' சினிமா...

உள்ளங்கையில் பம்பரம் சுற்றி குறுகுறுப்புடன் ஏந்திய சிலிர்ப்பு... முதன்முதலில் சைக்கிள் கற்றுக்கொண்டு கீழே விழுந்து முழங்காலில் பட்ட சிராய்ப்பு!

நேரம் போனதே தெரியாமல் பேசிக் கொண்டே போனாள் ஊர்மிளா.

தோழியையே ரசித்தபடி, இடையில் குறுக்கிடாமல் ப்ரஷா அமைதியாக அமர்ந்திருந்தாள்.

அவள் முடித்ததும், உற்சாகமாகக் கை தட்டினான் உசேன்!

''இன்னிக்கு என்ன ஃபுல் ஃபார்முல இருக்கீங்க? உங்களைச் சுத்தி எப்பவுமே ரெண்டு பேர் சோகமா வயலின் வாசிச்சிட்டே அலைவாங்களே... அவங்களை எங்கே காணோம் ஊர்மி?''

குறும்புடன் வினவினான்.

அவன் கேள்வியில், சட்டென்று சிரித்து விட்டாள் அவள்.

ஆனால், அப்போது சீற்றத்துடன் ஒரு குரல் அவர்களை இடைமறித்தது.

''இங்கே உங்களுக்கு சம்பளம் தர்றது வேலை பாக்க... இப்படி வெட்டியா உக்காந்து அரட்டை அடிக்க இல்லை!



என்ன... ஒரே சிரிப்பா இருக்கு! உசேன்... பிஹேவ் யுவர் செல்ஃப்!''

சுள்ளென்று அவன் எரிந்து விழ, பதட்டத்துடன் மூவரும் எழுந்தனர்.

''குரு... என்னாச்சு? ஏன் இவ்வளவு கோபம்...? இயல்பான பேச்சைக்கூட ஏன் தப்பா நினைக்கறீங்க?'' ப்ரஷா தான் கேட்டாள்.

''நான் உன்னை ஒண்ணும் சொல்லலை...''

அவன் வெறுப்பும் கசப்புமாய் பதிலிறுக்க, ''அப்ப உங்க மனைவிய சொன்னீங்களா?'' போட்டு உடைத்து விட்டாள் ப்ரஷா!

உடனே அவன் அடிபட்டாற்போல் நிற்க, உசேனோ திகைத்து எழுந்து விட்டான்!

''ஏன் குரு அவளைப் புரிஞ்சிக்கமாட்டேன்றீங்க... அவ எவ்வளவு நல்லவ தெரியுமா? அவளைப் போய் தப்பா நினைக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது?

''சே! மத்தவங்களைப் பத்தி நல்லா நினைக்க நம்ம கிட்டயும் நல்லமனசு இருக்கணுமே!

''அம்மா அம்மான்னு இப்படி நம்பறீங்களே...? உங்கப்பா யாருன்னு சொல்ற உரிமை வேணா உங்கம்மாவுக்கு இருக்கலாம்! ஆனா சரயுவோட அப்பா யாருன்னு கை காட்டற முழு உரிமையும் ஊர்மிக்குத்தான் உண்டு!

''அவளுக்காக என்ன செஞ்சிருக்கீங்க நீங்க... அவளை காயப்படுத்தி சந்தேகப்பட்டு வருத்தியதைத் தவிர!

''நீங்க புறக்கணிச்சப்பகூட உங்க குழந்தையை பத்து மாதம் சுமந்து வலி தாங்கிப் பெத்து வளக்கிறா அவ! உங்களுக்காக, தன்னைப் பெத்தவங்களையும், கூடப்

பிறந்தவரையும் விட்டுட்டு வந்த ஒருத்தியை, ஏன் இப்படி வதைச்சீங்க குரு?

"உங்களுக்காக அவ செஞ்சிருக்கற தியாகங்கள் புரியலையா? இல்லை புரியாத மாதிரி நடிக்கறீங்களா?"

"குற்றவாளிக்கு கூட அவங்க பக்க நியாயத்தை பேச உரிமை உண்டு... ஆனா நிரபராதியான அவளுக்கு விசாரிக்காமலே தண்டனை வழங்குற உரிமையை யார் உங்களுக்குத் தந்தது?

"அவளை அதிகமா சந்தோஷப்படுத்தினதும் நீங்க தான்... அவளை இப்ப அழ வெச்சிட்டிருக்கறதும் நீங்க தான்!"

"அவளுக்காக பேச யாருமில்லைன்னு நினைச்சீங் களா? நான் இருக்கேன் அவளுக்கு! வாழ்நாள் முழுக்க கண்ணீரோட வாழறதை விட, ஒரு நாள் கண்ணீர் விட்டு பிரிஞ்சதே சரின்னு நான் சொல்றேன்... அவ புரிஞ் சிக்கமாட்டேன்றாளே! ப்ச்... ஒரு சாடிஸ்ட் குரு நீங்க...!

"உங்களால தன்னை மட்டுமே நேசிக்க முடியும்... உயர்வா நினைக்க முடியும்... மத்த யாரையும் நேசிக்க முடியாது... உங்களுக்கு நீங்க உங்க சுகம்தான் முக்கியம்... அந்த அளவு பெர்வர்ட்டட்!

"இப்பவும் ஒண்ணும் கஷ்டமில்லை! ஒரு 'டி.என்.ஏ.' டெஸ்ட் போதும்... சரயு உங்க குழந்தைதான்னு நிரூபிச் சிடும்! அந்த அளவுக்கு இறங்க வேண்டாமேன்னு பாக்க றோம்!"

பொங்கியெழுந்து, கோபத்தில் குமுறித் தீர்த்து விட் டாள் அவள்.

அருகிலேயே உசேன் உறைந்து நின்றிருக்க, நடுக்கத் துடன் அழுதபடி அமர்ந்திருந்தாள் ஊர்மிளா!



நம்ப இயலாத் திகைப்புடன் ப்ரஷாவையே வெறித்த படி நின்றிருந்த குரு,உடனே திரும்பி வேகமாய் வெளியேறினான்.

"அழாதே ஊர்மி! அந்தக் காலத்துல குழந்தையைத் தன் முதுகிலே கட்டிக்கிட்டு போர்க்களத்துக்கு வந்து எதிரிகளோட சண்டைபோட்டாங்களாம் ஜான்சிராணி!

"அவ்வளவு தைரியம் இல்லேன்னாலும் முதுகெலும்பே இல்லாதவ மாதிரி நீ இப்படி அழறதை நிறுத்திட்டு, குருவை எதிர்த்து நியாயத்துக்காக போராடப் பழகு!"

ஆழ்ந்த குரலில் அறிவுறுத்தினாள் ப்ரஷா.

"வெல்செட் ப்ரஷா! இந்த ஷாக் ட்ரீட்மெண்ட் அவ னுக்குத் தேவைதான்! பாப்போம்... அவன் என்ன முடிவெடுக்கிறான்னு!"

திடீரென்று அங்கு வந்த ஆதவன், தோளைத் தட்டி ப்ரஷாவைப் பாராட்டினான்.

உடனே அந்தக் கையை ஆதரவுடன் பற்றிக் கொண் டாள் அவள்.

அங்கு சூழ்ந்திருந்த இறுக்கமான மௌனம் கலைந்து விட, தவிப்புடன் மூவரும் இருக்கைக்கு வந்தனர்.

ஆனால் குரு மட்டும் வீட்டிற்கு சென்றிருந்தான்.

## 23

பிறகு தொடர்ந்த நிமிடங்கள் தர்ம சங்கடத்தில் கழிய, மாலையானதும் வீட்டிற்குக் கிளம்பியபோது குழந் தையைக் காணவில்லை!

கோகிலாவிடம் கேட்டபோதோ, குருதான் வந்து தூக்கிச் சென்றதாகக் கூறினார்.

உடனே, பதட்டத்துடன் ஆதவனுக்குத் தொடர்பு கொண்டாள் ப்ரஷா.

ஊர்மிளா பயந்து அழ ஆரம்பிக்க, உடனே அங்கு வந்து தேற்றிய ஆதவன், இருவரையும் தன் காரிலேயே குருவின் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அவனுடைய வீட்டிற்குச் சென்று குழந்தையைப் பார்க்கும் வரை... அவளுடைய உயிர் அவள் வசமில்லை!

ஆனால் எதிர்பாராத விதமாக அவர்களைக் கண்டதும், ஓடிவந்து ஊர்மிளாவின் கைகளைப் பற்றி அழ ஆரம்பித்தார் மகா!

''என்னை மன்னிச்சிடும்மா! என் அண்ணன் மகளை இந்த வீட்டுக்கு மருமகளாக்க முடியலை... அதோட நீயும் எந்த சொத்தும் இல்லாம பஞ்சப் பராரியா வந்தே! என்னால உன்னை மருமகளா ஏத்துக்கவே முடியலை!

''அதான் கொடுமைப்படுத்தினேன்... தகாத வார்த்தைகளால திட்டினேன்... நீ... தப்பானவ.... முருகனோட தவறான உறவு வெச்சிருக்கேன்னு ப்ளான் பண்ணி பொய் சொன்னேன்!

''என் மகனும் அதை நம்பிட்டான்! உன்னை டைவர்ஸ் பண்ணலாமின்னா நீ ஒத்துக்கலை... என் அண்ணனும் தன் மகளை வேற இடத்துல கல்யாணம் செஞ்சு குடுத்திட்டாரு!

''இவனுக்கு வேற கல்யாணம் செஞ்சிடலாம்னு பாத்தா, குருவும் மறுத்திட்டான்... நான் முயற்சி செஞ்சப்ப, என் குணம் தெரிஞ்சு யாருமே பொண்ணு குடுக்க முன்வரலை!



''மனசுக்குள்ளேயே மறுகிட்டு என் மகன் கிட்டயும் உண்மையச் சொல்ல முடியாம ஒரு வருஷமாத் தவிச்சிட்டிருந்தப்ப தான் மதியானம் குரு குழந்தையோட வந்தான்!

''இந்தக் குழந்தை மேல ஆணையா நான் சொன்னதெல்லாம் உண்மையான்னு கேட்டான்... என்னால எப்படி முடியும்? என் பேத்தியாச்சே! அப்படியே வாரி அணைச்சிட்டு மனசில அடைச்சிருந்த பாரத்தை எல்லாம் கொட்டி கதறித் தீர்த்துட்டேன்!

''என்னை மன்னிச்சிடும்மா ஊர்மிளா! உன் முகத்தில முழிக்கவே எனக்கு கஷ்டமா இருக்கு!''

முகத்திலறைந்து கொண்டு அழ ஆரம்பித்தார் அவர்.

ஊர்மிளா உறைந்து சிலையாய் சமைந்திருக்க, ப்ரஷாதான் அவரை சமாதானப்படுத்தினாள்.

அப்போதுதான் அங்கு தயாராக இருந்த சூட்கேஸையும், ஏர்பேகையும் கவனித்தான் ஆதவன்!

''இது என்ன குரு? யாரோடது?''

அவன் வினவ, ''இவங்களோடதுதான்! போதும்... இதுவரைக்கும் நான் அனுபவிச்சது... ஊரிலே கிராமத்துல போய் இருந்து வயல்களைப் பாத்துக்க சொல்லிட்டேன்!''

வெறுப்பும் விரக்தியுமாய் கூறிவிட்டு, அவன் ஊர்மிளையே ஏக்கமும் தவிப்புமாய் நோக்க ஆதவன் புரிந்து கொண்டான்.

''ஊர்மி! நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க! நாங்க அம்மாவை பஸ் ஏத்தி விட்டுட்டு அப்படியே கிளம்பறோம்!'' என்றான்.

உடனே, ''இல்லை... நானும் வரேன்... சரயு எங்கே?'' சிறு நடுக்கத்துடன் குருவிடம் வினவினாள் அவள்.

''அவ... உள்ளே தூங்கறா... சாப்பாடு குடுத்திட்டேன்...'' என்றவன் வேகமாக அவளருகில் வந்தான்.

''ஊர்மி... எத்தனை ஜென்மம் மன்னிப்புக் கேட்டாலும் தீராது... என்னை மன்னிச்சிடும்மா ப்ளீஸ்!''

முதன் முறையாக உடைந்து, குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான்.

உடனே அவளும் உடைந்து சிதறி அழுதபடி அவனை சமாதானப்படுத்த, ப்ரஷாவிடம் திரும்பினான் ஆதவன்!

''அவங்க நிறைய பேசணும்... அவங்களுக்கு இப்போ தேவை தனிமைதான்!''

''இனிமே நாம இங்கே தேவையில்லை ப்ரஷா! போய் சரயுவைத் தூக்கிட்டு வா!''

''முருகனோட அம்மாகிட்டே விட்டுடலாம்... வாங்கம்மா... உங்களை பஸ் ஸ்டாண்டுல நான் ட்ராப் பண்ணிடறேன்.''

அவன் கூறியதும் வேகமாக உள்ளே சென்று பூக்குவியலாய் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை எடுத்துத் தோளில் அணைத்தபடிக் கிளம்பினாள் ப்ரஷா!

## 24

பிறகு கதவைத் தாளிட்டுக் கொள்ளும்படி அறிவுறுத்திவிட்டு மூவரும் காரில் ஏற, தன் பேத்தியை



வாங்கி இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் வடிக்க ஆரம்பித்தார் மகா!

இருவருக்கும் அவருடைய தவிப்பும் குற்றவுணர்ச்சியும் புரிந்தன!

மெதுவாக அவரை ஆறுதல்படுத்தியவள், ''கொஞ்ச நாள் போகட்டும்மா! அப்புறம் குருவுக்கு உங்க மேல இருக்கற கோபம் குறைஞ்சிடும்! நீங்களும் இங்கேயே வந்து சரயுவோட இருக்கலாம்!'' மெல்லக் கூறினாள்.

பிறகு குழந்தைக்கு முத்த மழை பொழிந்து அவர் விடைபெற பஸ்ஸில் ஏற்றி அமர வைத்து டிக்கெட் எடுத்து அவர் கையில் கொடுத்தான் ஆதவன்.

பிறகு, கொஞ்சம் பணத்தையும் அவர் கையில் கொடுத்து வைத்துக் கொள்ளும்படிக் கூறினான்.

''வேண்டாம்ப்பா! குரு நிறையக் குடுத்திருக்கான்! அங்கே எங்களோட வீடு பூட்டிதான் கிடக்கு! சுத்தம் பண்ணினா தங்கிக்கலாம்! குத்தகைக்கு விட்டிருக்கற நிலத்தைப் பாத்துக்கணும்! அவ்வளவுதான்!

''சாப்பாட்டுக்கு தங்கச்சி வீட்டில சொல்லிடலாமின்னு இருக்கேன்! பணம் குடுத்திடலாம்... வேறென்ன செலவு வந்திடப் போகுது! ஒரே மகனை வாழவிடாம செஞ்சதுக்கு இந்த தனிமை தண்டனை தேவைதான்!''

சோர்வுடன் சலித்தபடி விடை பெற்றவரைப் பரிதாபத்துடன் பார்த்தாள் ப்ரஷா!

பஸ் கிளம்பிவிட, கையசைத்து விடை கொடுத்து காருக்கு வந்தபோது, ''தப்பு பண்ணினப்ப ராயலா இருந்தாங்க அந்தம்மா! இப்போ திருந்தினப்புறம் பாருங்க... தனிமைப்படுத்தப்பட்டிருக்காங்க! என்ன ஒரு பொயட்டிக் ஜஸ்டிஸ் இது!''

ஒரு பெருமூச்சுடன் முடித்தாள் ப்ரஷா!

தொடர்ந்த பயணம் முழுவதும், சிணுங்கிய குழந்தையை மார்பில் ஏந்தி அவள் சமாதானப்படுத்தி உறங்க வைக்கும் தாய்மை அழகை, அவ்வப்போது ஓரக் கண்ணால் ரசித்தபடி இருந்தான் ஆதவன்!

பிறகு முருகனின் வீடும் வந்துவிட, அவர்களிடம் குழந்தையை ஒப்படைத்து விபரம் கூறியபோது, இருவருமே மிகவும் மகிழ்ந்து போயினர்.

ஆனந்தத்தில் கண்களில் நீர் துளிர்க்க, குழந்தையை அணைத்துக் கொண்டார் கோகிலா!

''ரொம்ப நன்றிம்மா ப்ரஷா! இதை சாதித்தது நீதான்!'' பெருமையுடன் கூறினார் அவர்!

''இல்லைம்மா! ஆதவன்தான் முக்கியக் காரணம்! அவர் குருவோடப் பேசிப் புரிய வைக்கலைன்னா இதுநடந்தே இருக்காது... அதனால க்ரெடிட் கோஸ் டு ஹிம்!''

''அதோட எனக்கு இன்னொரு முக்கியமான கடமை இருக்கு... நான் அவளோட குடும்பத்துக்கு ரொம்ப கடன் பட்டிருக்கேன்... என் மேல அவ்வளவு பாசமா இருந்த வங்க தாமரை அம்மா!

''என் பால்யத்தை அழகா அர்த்தமுள்ளதா ஒரு பாசப் பூந்தோட்டமா மாத்தினது அவங்க எல்லாரும் தான்!

''இப்போ அதை அவ தன் காதலாலதான் இழந் திருக்கா! அவங்களை மறுபடி சேத்து வைக்கணும்! குருவோட சேர்ந்து அங்கே போனாத்தானே அவளுக்கு மரியாதை!

''இந்த நாளுக்காகத் தான் காத்திட்டிருந்தேன்... இனிமே அந்த வேலை ஒண்ணு மிச்சமிருக்கு!''



ஒருவித தீர்க்கமான முடிவுடன் அவள் கூற, பெருமை யுடன் அவளையே ஊடுருவியது ஆதவனின் பார்வை!

பிறகு அவர்களிடம் விடைபெற்றபோது சரயு தூங்கிக் கொண்டிருந்தாள்.

''சரயு ஒரு வாரத்துக்கு இங்கேயே இருக்கட்டும்... சின்னஞ் சிறுசுங்க ரொம்ப நாள் கழிச்சி சேர்ந்திருக்காங்க... சந்தோஷமா இருக்கட்டும்!''

யதார்த்தமாக யோசித்து இயல்பாகக் கூறினார் கோகிலா.

பிறகு உசேனிடமிருந்து போன் வர, எல்லா விபரங் களையும் கூறிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

## 25

குருவின் வீட்டில், பொழுது மௌனத் தருணமாய் கழிந்து கொண்டிருக்க, அங்கு வாய் மொழி விளக்கங்கள் தேவையில்லாததாய்!

தன் தவறை உணர்ந்து திருந்தி மனமார மன்னிப்பு வேண்டி நின்றவனை, மன்னித்து ஏற்றுக் கொண்டாள் ஊர்மிளா!

அந்த இரவு... இருவருக்குமே மறக்க முடியாத ஒன்றாய்!

வானவில்லின் பாதையாய், நொடி நேரமே வர்ணம் சேர்த்தது அவனுடைய மௌன யாசிப்பு!

மீண்டும் ஒரு உறவு காதலாகிக் கசிந்துருகி மலர்ந்தது அங்கு!

தனக்காக எத்தனை எத்தனை இரவுகள் அவள் காத்திருந்தாள் என்பதை இன்று உணர்ந்தான் குரு.

அத்தனை போராட்டங்களுக்கு மத்தியில் இணைந்த காதல், முத்தப் பரிமாற்றத்தில் துவங்கியது!

''காதல் கொண்ட பெண்ணின் நிலை சிலந்தி வலை போன்றது! காதல் உண்டாக்கும் காயத்தை காதலால் மட்டுமே ஆற்ற முடியும்'' என்ற பொன்மொழி அங்கு உண்மையாய்!

* * *

மறுநாள் காலையிலேயே ஊர்மிளாவிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்துவிட்டது.

''தேங்க்ஸ் ப்ரஷா... லட்சம் கோடி தேங்க்ஸ்!''

உணர்ச்சிகள் நிரம்பிய குரலில் அவளுக்கு நன்றியுரைத்தவளின் குரல் அதிகபட்ச ஆனந்தத்தில் உடைந்திருந்தது.

''வெல்கம்! அதோட இன்னொரு விஷயம்! சரயுவை கோகிலாம்மா பாத்துக்கறேன்னுட்டாங்க! நீங்க ரெண்டு பேரும் முதல்லே லீவு போட்டுட்டு எங்காவது போயிட்டு வாங்க! ஊட்டி கொடைக்கானல் இந்த மாதிரி!'' குறும்புடன் நிறுத்தினாள் அவள்.

''ஊஹூம்... அவர் தன் ஃப்ரெண்ட் வந்தாத்தான் வருவாராம்!''

ஊடலுடன் சிணுங்கினாள் ஊர்மி!

''என்னது... ப்ரெண்ட் வந்தாவா! மனைவியோட தனியாப் போறதுதான் ஹனிமூன்... இல்லேன்னா அது சனி மூனாயிடும்னு குருகிட்ட கொஞ்சம் எடுத்துச் சொல்லும்மா?'' ப்ரஷா கேலியாகக் கூறினாள்.



''சரி.... நாங்க இந்த வாரம் லீவ்... ப்ரவாயில்லையா? ப்ராஜெக்ட்டிலே...''

அதற்குள் இடைமறித்தவள், ''அதெல்லாம் நாங்க மூணு பேரும் பாத்துக்கறோம்... நீங்க ரெண்டு பேரும் நிம்மதியா சந்தோஷமா இருங்க! ஆல் தி பெஸ்ட்!'' மனமார வாழ்த்தினாள்.

''என்ன தவம் செய்தனை... இப்படி ஒரு தோழி கிடைக்கன்னு பாடணும் போலருக்கு!'' ஊர்மியின் குரல் உடைந்தது.

''அதெல்லாம் இப்ப வேண்டாம்...''

''உச்சி குளிர்ந்ததடி சகியே... உடம்பு நேராச்சு!

இச்சை பிறந்ததடி... எதிலும் இன்பம் விளைந்ததடி!

என்னும் பொழுதிலெல்லாம்... அவன் கை இட்ட விடத்தினிலே

தண்ணென்றிருந்ததடி; புதிதோர் சாந்தி பிறந்ததடி!''

அப்படின்னு பாரதியார் பாட்டைப் பாடு... அதுதான் சரி... பை!''

குறும்புடன் மொழிந்துவிட்டு இணைப்பைத் துண்டித்தவளின் மனமோ பரவசமாய்!

இந்த ஒரு நாளுக்காக எத்தனை பொழுதுகள் காத்திருந்தோமென்ற பெருமூச்சும் கூடவே கசிந்தது.

அந்த நினைவுகளுடனே மகிழ்ச்சியுடன் கிளம்பி அலுவலகம் சென்றவளுக்கு, அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருப்பதை ப்ரஷா அறியவில்லை.

# 26

அன்று சீக்கிரமே வந்து விட்ட சுகந்தி கணினியை திறந்து வைத்து மற்றவர்களுக்காகக் காத்திருந்தாள்.

அப்போதுதான் வந்த உசேன் நேற்று நடந்த விஷயங்களைப் பற்றி வியப்புடன் அவளிடம் கூற ஆரம்பித்தான்.

அதைக் கேட்டதும் அவளுக்கோ பெரும் வியப்பாய்...

''என்ன... குருவோட ஒய்ஃப் ஊர்மிளாவா? என்னென்னவோ தப்பாப் பேசிக்கிட்டாங்க அவங்களைப் பத்தி... ஓடிப் போயிட்டதா?''

''அதான் இல்லை.. அவங்கம்மா பேச்சைக் கேட்டுட்டு குரு தன் மனைவியை தப்பாப் புரிஞ்சி விலக்கி வெச்சிருக்காரு... ப்ரஷா போட்ட போடுல இப்ப எல்லாம் சரியாயிடுச்சி!'' என்று விபரத்தைக் கூறினான்.

அவள் வாய் பிளந்து கேட்கும் போதே ''இன்னொரு ஆச்சர்யம் கூட நடக்கப் போகுது... நம்ம ஆதவன் சாரும் ப்ரஷாவை விரும்பறாருன்னு நினைக்கிறேன்!'' குஷியுடன் ஆர்ப்பரித்தான்!

உடனே அவள் முகம் இருண்டு சுருங்கியதை அவன் கவனிப்பதற்கு முன்பு, ''மார்னிங் கைஸ்'' என்றபடி ப்ரஷாவே வந்து விட்டாள்.



அவள் முகத்தையும் உற்சாகத்தையும் பார்த்த சுகந்தியின் விழிகள் வன்மத்துடன் சுருங்கின.

''என்ன சுகந்தி... டல்லா இருக்கே?'' அவளிடம் விசாரித்தாள் ப்ரஷா!

''ம்... எங்க ப்ராப்ளமெல்லாம் உனக்குத் தெரியுமா? ஊர்மி உன் ஃப்ரெண்ட், அவளுக்கு உதவி பண்ணுவே! நான் அப்படியா?'' மெதுவாக இழுத்தபடி முடித்தாள்.

''ஏன்... உனக்கு என்ன ப்ரச்னை சுகந்தி?''

பரிவுடன் விசாரித்தவளைத் தனியே அழைத்துச் சென்று அவள் கூறிய விஷயமோ பேரிடியாய்!

''நான் தப்பு பண்ணிட்டேன் ப்ரஷா! அதுக்கான தண்டனையை இப்ப அனுபவிச்சிட்டுருக்கேன்...''

கலங்கிய விழிகளுடன் கூறியவளை மெல்ல சமாதானப்படுத்தி விபரத்தை கிரகித்தவள், அப்படியே ஆடிப்போனாள்.

''நான் இப்ப கர்ப்பமா இருக்கேன்... அதுக்குக் காரணம் யார் தெரியுமா? சொன்னா நீ நம்ப மாட்டே.... நம்ம பாஸ்தான்!''

அவள் கூறியதும் சுனாமியாய் உணர்வுகள் பந்தாடப்பட அப்படியே மரத்துப்போய் நின்று விட்டாள் ப்ரஷா!

''இது உண்மையா?'' உதடுகள் நம்ப இயலாமல் முணுமுணுத்தன!

''ஆமாம்... இந்த விஷயத்தில் யாராவது பொய் சொல்லுவாங்களா ப்ரஷா? அவரோட லிஸ்டுலே பெண்கள் எப்பவுமே உண்டுன்னு தெரிஞ்சும் அளவுக்கு மீறி விட்டுக் கொடுத்திட்டேன்!''

முகம் மூடி விசும்ப ஆரம்பித்தவளை ஆறுதல் படுத்தக் கூட முடியாமல், வேரோடி நின்றிருந்தாள் அவள்.

"நிறைய பெண்கள் தொடர்பு உண்டுன்னு கேள்விப் பட்டிருக்கேன். எனக்குத் தெரிஞ்சு சுகன்யா... அவ ஒரு ஆர்க்கிடெக்ட்... அப்புறம் நான்... எல்லாம் தெரிஞ்சுமே அவரை நான் விரும்பினேன்... இப்ப அந்த லிஸ்ட்டுலே வேற யாரோ தெரியாது."

அவள் முடிப்பதற்குள் "அந்த முட்டாள் நான் தான்" என்று ஊமை நெஞ்சம் ஓங்கிக் கூக்குரலிட்டு அழுதது.

"அவர் உன்கூட நெருக்கமா பழகினப்ப கோபப்பட்டது கூட அதனால தான்... நான் அடிக்கடி லீவு போட்ட தெல்லாம் கூட அவருக்காகத்தான்! அவங்க வீட்டுக்குக் கூட என்னை ஒரு முறை அழைச்சிட்டுப் போயிருக்காரு!"

அவள் முடிக்க முடியாமல் அழுததும், மின்னலாய் ஒரு ஞாபகம்!

சுகந்தியை அவன் அழைத்து வந்ததாக துளசி கூடக் கூறினாரே!

சுகன்யா அவன் தோழி என்று கூட... கடவுளே எவ்வளவு முட்டாளாய் இருந்திருக்கிறேன் நான்!

உள்ளம் உடைந்து அழ ஆரம்பித்தது.

ஓரக்கண்ணால் அவள் உணர்வுகளை வாசித்தவன், "ம்... என் கஷ்டத்தை உன்கிட்டே சொல்லி உன்னையும் வருத்திட்டேன் சாரி..." ஓய்ந்து போனவளைப் போல் கூறினாள் சுகந்தி!

"இல்லை... நீ என்னைத் தெளிய வச்சிருக்கே" உள் மனது ஓலமிட்டது!



"நல்லவேளை! நீ கொஞ்சம் ஸ்ட்ராங் பர்சன்! இல் லேன்னா, என்னை மாதிரி அவரோட சார்மிலே மயங்கி உன் வாழ்க்கையத் தொலைச்சிருப்பே... தேங்க் காட்!"

அவள் மேல் அக்கறை இருப்பது போல் சுகந்தி நடிக்க "இல்லை... என் இதயத்தை ஆதவனிடம் தொலைத்து விட்டேனே!"

கதறித் துடித்தது நெஞ்சம்!

"பெரிய பணக்கார வீட்டு ஆண்களுக்கு இதெல்லாம் சகஜம்னு எல்லாரும் சொல்லுவாங்க... ஆனாலும் இந்த பாழாப்போன மனசு கேக்க மாட்டேங்குதே!

"என் காதல்.. அன்பு மூலமா அவரைத் திருத்திடலா மின்னு நினைச்சேன்! ஆனா என் நம்பிக்கை பொய்யா யிடுச்சி!

சோகத்துடன் கூறியபடிச் சென்று அவள் வேலையில் ஆழ்ந்தாள் சுகந்தி!

அன்று மதியம் வரை உணர்வுகள் தன் வசமில்லாது ஓய்ந்திருந்தவளை, ஆதவன் மெயில் மூலம் அழைத் திருந்தான்.

அவனைப் பார்த்துப் பேசவே மனமின்றி தவித்த மனதை அடக்கியவள் மெல்ல எழுந்தாள்.

"எங்கே போறே ப்ரஷா?"

விசாரித்த சுகந்தியிடம் "பாஸ் கூப்பிட்டிருக்காரு அதான்!" சோர்வுடன் நடக்க ஆரம்பித்தாள்.

உடனே செயல்பட்டது சுகந்தியின் மூளை!

"ஒரு நிமிஷம் இரு ப்ரஷா... நானும் உன்னோட வரேன்! உனக்கு முன்னாடி நான் அவரைப் பாத்து

நியாயமும் கேட்டுட்டுப் போயிடறேன்!'' அவளும் உடன் வந்தாள்.

முதலில் அவள் உள்ளே செல்ல, அங்கு என்ன நடக்கிறதென்பதை அறியத் தவித்த உள்ளத்தை அடக்க முடியாமல் சிறிது நேரம் கழித்து மெல்லக் கதவைத் திறந்து நோக்கியவளுக்கோ பேரதிர்ச்சி!

சுகந்தி ஆதவனை அணைத்தபடித் தோளில் சாய்ந் திருக்க, அவனுடைய கரம் அவள் முதுகை வருடிக் கொண்டிருந்த கோலம் அவளுடைய அடி வயிற்றை கலக்கியது.

எப்படி வந்தாளென்றே புரியாமல் ஓடிச் சென்று லிஃப்டில் பயணித்து தன் இருக்கைக்கு வந்து அமர்ந்து விட்டாள் ப்ரஷா.

இதயம் பந்தயக் குதிரையாய் தடதடக்க, உயிரிலிருந்து யாரோ எதையோ பிரித்த வலி!

உணர்வுகள் ஊமையாய் அழ ஆரம்பிக்க, பிறரிடம் தன்னை வெளிப்படுத்தி விடாமலிருக்க, ப்ராஜெக்ட்டில் கவனம் செலுத்துவது போல் கணினியிடம் பார்வையைப் பதித்திருந்தாள்.

ஆனால், அடி வயிற்றிலிருந்து பொங்கிய கேவல், கண்ணீராய் வெளிப்பட பார்வை மறைத்து பொருளின்றி மாயத் தவிப்பில் படபடத்தன இமைகள்!

முதல் காதல் மனதில் அழகாய் புஷ்பித்திருக்க, புயலில் சிதைந்தாற்போல் ஒரே நொடியில் அது சிதைந்ததில் இதயம் நொறுங்கியது!

உள் உணர்வுகள் உச்சஸ்தாயியில் கூக்குரலிட்டு அழ, நெருப்புத் தணலை சுமக்கும் எரிமலையாய் அவள் சிலையாக.



அசையாது அமர்ந்திருந்தாள்.

உசேன், காபி குடிக்கச் சென்றிருக்க, அந்த நேரத்து தனிமை அவளுக்குத் தேவையான ஒன்றாய்!

சில நிமிடங்களிலேயே அழுதபடி வந்த சுகந்தியைக் கண்டதும், தன்னை அடக்கப் படாத பாடுபட்டாள் அவள்!

''என்னாச்சு சுகந்தி?'' என்றவளின் மடியில் சரிந்து அழ ஆரம்பித்தாள் அவள்!

பதட்டத்துடன் விசாரித்தபோது, ''முதல்லே பொறுமை யாத்தான் கேட்டாரு... அப்புறம் ரொம்பக் கோபமா யிட்டாரு! குழந்தையை அழிச்சிடு... எவ்வளவு பணம் வேணாத் தரேன்னாரு!

''இப்ப என்னால இந்த கமிட்மெண்டை ஏத்துக்க முடியாதுன்னாரு! வேற யாரோடவோ பழக ஆரம்பிச்சிட் டாருன்னு நினைக்கிறேன்.

''ஆண்கள் மலருக்கு மலர் தாவர வண்டுகள் மாதி ரின்னு என் ஃப்ரெண்ட் ஒருத்தி சொல்லுவா! சந்தர்ப்பம் கிடைக்கற வரைக்கும் எந்த ஆணும் நல்லவன்தான்னும் கேள்விப்பட்டேன்.

''அது சரின்னு நெத்தியடியா இன்னிக்குதான் புரிஞ்சுது!

''எனக்கு அவரோட பணமும் வேண்டாம்... ஒன்னும் வேண்டாமின்னு சொல்லிட்டு வந்துட்டேன்... இந்த வேலையை ரிசைன் பண்ணப் போறேன்...

''வேற எங்கேயாவது போய் என் குழந்தையை வளத் துக்கறேன்!'' என்றபடி எழுந்தாள்.

''எங்கே போவே சுகந்தி? நான் வேணா... பாஸ்கிட்டே பேசவா?''

தவிப்புடன் வினவிய ப்ரஷாவைக் கையமர்த்தியவள், "வேண்டாம்.. எனக்காக பேசப் போய் அப்புறம் உன் வேலைக்கு ப்ரச்னை வந்துடப் போகுது!

"என் ப்ராப்ளத்தை நானே பாத்துக்கறேன்! வரேன் ப்ரஷா! நீங்கள்லாமாவது இது மாதிரி ஏமாந்திடாம ஜாக் கிரதையா இருங்க!"

அழுகையுடன் கூறிவிட்டு ஓய்ந்து போய் விடை பெற்றுச் சென்றவளைப் பார்த்தால் பரிதாபமாய்!

ஆதவன் மீது கடும் கோபம் வர, உடனே ஒரு லீவ் லெட்டரை மெயில் மூலமாக அனுப்பிவிட்டு அவளும் கிளம்பி விட்டாள்.



## 27

காால் போன போக்கில் என்பதுபோல் மனம் செல்ல, எங்கு செல்கிறோமென்றே புரியாமல் சென்றவளின் ஸ்கூட்டி, கடற்கரைக்கு வந்திருந்தது.

மாலை வெயில் சூடாய் தேகம் தீண்ட, மணலில் கால் புதைய நடந்தபோது, புயலில் சிக்கிய சிறகாய் சிதைந் திருந்தாள் அவள்!

கடல் நீருக்கருகே சென்றபோது, கரை முழுவதும் அலையின் சுவடுகள் நுரையாய் பரவித் தெரிந்தன.

அவளுக்குள்ளும், அவனுடைய சுவடுகள் நீங்காத செல்லரிப்பாய்!



**'காதலிப்பவர்கள், சிரிப்பதற்கு மட்டுமல்ல... அழுவ தற்கும் தயாராக இருக்க வேண்டும்..! காதல் ஒருவிதப் போராட்டம் மட்டுமே!'**

எப்போதோ படித்த வரிகள் ஞாபகம் வர, முகம் மூடிக் குலுங்கிக் குலுங்கி அழத் துவங்கினாள் அவள்!

அன்று இருட்டும் வரையில் கடல்கரையிலேயே அமர்ந்து ஓய்வில்லாது கரைக்கு ஓடிவந்து திரும்பிச் சென்ற அலைகளையே பார்த்திருந்தவளுக்கு, ஒரு மாற்றம் தேவையாய்!

மறுகணமே ஒரு முடிவுடன் கிளம்பியவள், வீட்டிற்குச் சென்றபோதுதான் கவனித்தாள்.

அவளுடைய செல்லிற்கு ஆதவனிடமிருந்து பல மிஸ்டு கால்கள் வந்திருந்தன.

இங்கிருந்தால், அவன் தன்னைத் தேடி வந்து விடக் கூடுமென்ற விதிர்ப்பு வருவதாய்!

உடனே ஒரு முடிவெடுத்து துணிகளை அடுக்கியவள், முருகனுக்கு மட்டும் போன் செய்தாள்.

தான் வெளியூருக்கு செல்வதாகவும், குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படியும் கூறி விட்டுக் கிளம்பியவள், அன்றிரவே நாகர்கோவிலுக்கு பஸ் ஏறினாள்.

* * *

காலையில் சென்று நாகர் கோவிலில் இறங்கியபோது, பழைய ஞாபகங்கள் அழையா விருந்தாளியாய் ஓடி வந்து அவளுக்குள் ஒட்டிக் கொண்டன!

அவர்கள் இருந்த கிராமத்திற்கு செல்கின்ற பேருந்தில் ஏறி அந்தப் பேருந்து நிறுத்தத்தில் உதிர்ந்தபோது,

அங்கிருந்த ஒற்றை ஆலமரம், ப்ரஷாவின் மலரும் நினைவுகளுக்கு சாட்சியாய்!

சுற்றிலும் தூரத்தில் அரணாய் காட்சியளித்த மலைத் தொடர்களும், எங்கு நோக்கினாலும் விரவித் தெரிந்த பசிய வயல்களும், அதன் நடுவே பெரிய மலைப் பாம் பாய் வளைந்து நெளிந்து தெரிந்த தார்ச் சாலையும், ஆவலோடு அவளை வரவேற்ற மென் பனிக்காற்றும் மனதிற்கு பெரும் இதம் தந்தன!

ஆட்டோக்களை விலக்கி விட்டு அங்கு நின்றிருந்த ரெட்டை மாட்டு வண்டியருகே சென்றாள்.

பட்டணத்திலிருந்து வந்திருந்த பெண் அருகே வந்ததில் மகிழ்ச்சியடைந்த வண்டிக்காரர் வாடகை பேசியவுடன் குதூகலமாய் வண்டியை எடுத்தார்!

'ஜல் ஜல்' என்ற மணியோசையுடன் தாவி ஓடிய மாட்டு வண்டியின் குலுக்கலில் சுகமாய் ஆழ்ந்த மனதில் அதற்குள்ளேயே காதல் துருப்பிடிக்க ஆரம்பித்திருந்தது.

அவர்கள் குடியிருந்த தெரு வந்ததும் ஆர்வமாய் அவள் பார்வையை சுழற்ற, பல வீடுகள் அப்படியே மாறாமல் இருந்தன!

சில ஓட்டு வீடுகள் மட்டும் மச்சு வீடுகளாய் மாறியிருந்தன.

கான்கிரீட் வனமாய் தெரிந்த சென்னைக்கும், இந்த இயற்கை அழகிற்கும்தான் எவ்வளவு வித்தியாசம்...? நெஞ்சம் வியந்தது.

''இந்தத் தெருவில் யாரு வீடும்மா?''

வண்டிக்காரரின் குரல் அவளை உசுப்ப, கலைந்தவள், ''அதோ... அந்தப் பெரிய வீடு தான்!'' என்றாள்.



அடுத்திருந்த அவள் வீடும் அப்படியே இருக்க, மனதிற்குள் மகிழ்ச்சி மெல்ல வந்து எட்டிப் பார்த்தது.

''நம்ம சிவநேசன் அய்யா வீடுங்களா? நீங்க அவங்களுக்கு சொந்தமா?''

வண்டிக்காரர் ஆர்வத்துடன் விசாரித்தார்.

மறுக்க மனமின்றி மெல்லத் தலையசைத்தவள், வண்டியிலிருந்து இறங்கத் தயாரானாள்.

பிறகு அவருக்கு கூலியைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்த போது, வெளிப்புறமிருந்த பெரிய சாய்வு நாற்காலியில், சிவநேசன் அமர்ந்திருப்பது தெரிந்தது.

வண்டிக்காரரே பொருட்களை எடுத்துவர, வேகமாகப் படியேறியவளுக்குள் பழகிய பாசம் ஊற்றெடுத்தது.

''அப்பா... எப்படி இருக்கீங்க?'' என்றபடி குனிந்து முழந்தாளிட்டு அவரின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

முன்பிருந்த கம்பீரம் சற்றும் குறையாமலிருந்தவர், ''யாரு?'' கண்களைச் சுருக்கியபடி அவளை ஏறிட்டார்.

''நான் ப்ரத்யுஷா வந்திருக்கேன்ப்பா!''

வாஞ்சையுடன் கூறியவளை வியந்த கண்களால் ஆராய்ந்தவரின் முகம் சட்டென்று மலர்ந்து கனிந்தது!

''வாம்மா... எப்படி இருக்கே? எங்களை எல்லாம் மறந்திட்டியா?'' என்றவர் உள்புறம் திரும்பினார்.

''சந்துரு... இங்கே யாரு வந்திருக்கா பாரு!'' உற்சாகக் குரலில் அழைத்தார்.

''மறக்கலைப்பா... படிப்பு வேலைன்னு அப்படியே எட்டு வருஷம் ஓடிப் போச்சு!''

"உங்களை எல்லாம் பார்க்கணும்னு திடீர்னு ஒரு ஆசை... அதான் உடனே கிளம்பி வந்திட்டேன்!"

அதற்குள் சந்துருவும், அவன் மனைவியும் உள்ளிருந்து வந்துவிட, "சந்துருண்ணா! எப்படி இருக்கீங்க?"

ஆவலுடன் விசாரித்தபடி எழுந்தாள்.

"யாரு... ப்ரஷாவா? எப்படிம்மா இருக்கே... எத்தனை வருஷமாச்சு! உன் தோழி பண்ணின அநியாயம் தெரியுமா?"

சட்டென்று அவன் குரல் உயர,

"ஏய்... நம்மைப் பார்க்க ஆசையா வந்திருக்கற புள்ளைகிட்ட அந்த ஓடுகாலி நாயைப் பத்தி ஏன் பேசறே! விடு!" என்றவர் மருமகளிடம் திரும்பினார்.

"தாயி! இதுவும் என் பொண்ணு மாதிரித் தான்... நம்ம பக்கத்து வீட்டு வாத்தியார் மக!

"சின்ன வயசில இங்கேயே சுத்தித் திரிவாங்க ரெண்டு பேரும்! ஹூம்... எல்லாம் மாறிப் போச்சு!"

"உடனே ஆளை விட்டு சந்தைக்கு அனுப்பி நல்ல குறும்பாட்டுக் கறியாப் பாத்து வாங்கிட்டு வரச் சொல்லி குழம்பு வைம்மா! ப்ரஷாவுக்கு ரொம்பப் பிடிக்கும்!"

தன் விருப்பங்கள் கூட அவருக்கு மறக்காதிருக்கிறதே என்ற வியப்புடன் "அப்பா! இத்தனை வருஷமாகியும் மறக்காம ஞாபகம் வச்சிருக்கீங்க? ஆச்சர்யமா இருக்கு" என்றாள்.

"ம்... பழசை எல்லாம் மெதுவா அசை போடற சுகமே தனிம்மா! எப்படி மறக்க முடியும்? நீயும் அவளும் இந்த ஊஞ்சல்லே ஜோடி போட்டு ஆடினதை மறக்கச் சொல்றியா...?



"பண்டிகையன்னிக்கு விதவிதமா உடை உடுத்திக்கிட்டு இந்தத் தெருவையே அடைச்சி கலர் கோலம் போடுவீங்களே... அதுதான் மறக்குமா?

"வயசானவங்களுக்கு பழைய நினைவுங்கதான் டானிக் மாதிரி! எங்களை உயிர் வாழ வெச்சிட்டிருக்கறதும் அந்த சுகமான ஞாபகங்கள்தான்!"

பல் செட்டின் வரிசை வெண்மையாய் பளிரிடப் புன்னகைத்தார்!

"அப்பா! நான் உங்களோட நிறையப் பேசணும். குளிச்சிட்டு வரேன்!" என்றபடி ப்ரஷா சந்துருவின் மனைவி சின்னத் தாயியைப் பின் தொடர்ந்தாள்.

## 28

ப்ரஷா, புத்துணர்வுடன் குளித்துவிட்டு மணக்க மணக்க நெய் வடிந்த பொங்கலையும், மல்லிகைப் பூ இட்லியையும் ருசித்து முடித்து, வாசலுக்கு வந்தபோது, கண் மூடி சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார் சிவநேசன்!

அவர் முகத்திலிருந்த சுருக்கங்கள்... அவரின் அனுபவச் சின்னங்களாய்த் தோன்ற பரிவுடன் அவரையே சிறிது நேரம் பார்த்திருந்தாள் அவள்!

பிறகு, அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்ததும் அசைவுணர்ந்து விழித்தவர், 'என்னம்மா... பசியாறியாச்சா?" பரிவுடன் விசாரித்தார்.

''ம்... ஆச்சப்பா... நீங்க சாப்பிடலை?''

''எனக்கு காலையில எப்பவும் போல கேழ்வரகுக் கூழ்தான்... பழகிப் போச்சி! மதியம் அளவு சாப்பாடு ராத்திரிதான் டிபன் சாப்பிடுவேன்!'' ஒரு பெருமூச்சுடன் முடித்தார்.

ஏனோ அவரைப் பார்த்தால், தன் தந்தையின் நினைவு இன்று அவளுக்குள் அதிகமாய்!

சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தவர், ''உன்னைப் பத்தி ஒன்னுமே சொல்லலையே... வீட்டை வித்துட்டு உன்னை அழைச்சிட்டுப் போனாரே உன் சித்தப்பா... உன்னை நல்லாப் பாத்துக்கிட்டாரா?''

அவளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் தெரிந்தது அந்தக் குரலில்!

சட்டென்று, ஒரு சிறு நடுக்கம் ஓடியது அவள் உடலில்!

பிறகு, தான் இங்கிருந்து கிளம்பியது முதல் ஆரம்பித்து, வேலைக்கு சேர்ந்து ஃப்ளாட் வாங்கியது வரை எல்லா வற்றையும் கூறி முடித்தாள்.

நெறித்த புருவங்களுடன் அமைதியாகக் கேட்டிருந் தவர், ''ஏதோ இதுவரைக்குமாவது ஏமாத்தாம படிக்க வெச்சிட்டானே... விடு! உறவுகள் நம்மை சுத்தி இருக்கற வரைக்கும் அதோட அருமை தெரியாதுடா... பிரிஞ்சி போனப்புறம்தான் தெரியும்!''

ஏதோ யோசனையுடன் கூறினார்.

''ஏன்ப்பா... நான் ஒன்னு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே? ஜாதி முக்கியம்தான்... சரி! ஆனா அதை விட மனசும், வாழ்க்கையும் முக்கியமில்லையா?



''சாதிக்காக, யாரோ தெரியாத ஒருத்தரை மணந்து ஜடமா வாழறதை விட, காதலிச்சி கல்யாணம் பண்ணிக் கிட்டு சந்தோஷமா இருக்கறது மேல், இல்லியாப்பா?''

''இப்ப நீ என்ன சொல்ல வரே?''

கூர்மையாய் அவளையே நோக்கியபடி கேட்டவரிடம், ஊர்மியைப் பற்றி புரிய வைக்க வேண்டுமென்று தோன்ற பேச ஆரம்பித்தாள்.

''நமக்கு ஒரு விஷயம் தேவை... அதுதான் சௌகரி யம்னா, அதை பழக்கம்னு சொல்லி ஊர்மேல பழியைப் போடறது நம்ம எல்லாருக்கும் ஒரு வழக்கமாயிடுச்சிப்பா!

''நமக்கு சந்தோஷம் தருது... நம்ம துணைக்கு, உறவுகளுக்கு மகிழ்ச்சி தருதுன்னா, நாம் ஏன் அதை மாத்திக்கக்கூடாது. அந்த விஷயம் நமக்கு கோபத்தையே வரவழைச்சாலும்...?

''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்கப்பா! அம்மா கூட, தன் பெண்ணைப் பாக்க முடியாம மனசுக் குள்ளேயே புழுங்கி இறந்திருக்கலாமே...

''உங்களையும் அண்ணனையும் எதிர்க்க பயந்திருக் கலாம்!

''ஊரிலே யாரோடவாவது ஏதோ ஒரு ப்ரச்னைன்னா கொஞ்ச நாள்லே சேர்ந்திடறீங்க... நேத்துகூட பாத்தேன்... முன்னாடி பகையோட இருந்த எதிர் வீட்டு ஆசைத்தம்பி மாமா குடும்பத்தோட இப்போ, ரொம்ப நட்பாப் பழகு றீங்க... சந்துரு அண்ணாவும் நீங்களும்!

''தப்பு செய்யாதவங்க யாருப்பா? யாரோ எவரோன்னா அவங்க தவறை மன்னிக்கற பெருந்தன்மை.... அதுவே

சொந்த மகள்கிட்டே நீயா நானான்னு பிடிவாதமா ஏன்ப்பா மாறிப் போகுது!

''இது வறட்டுப் பிடிவாதம்... ஈகோன்னு உங்களுக்குப் புரியலையாப்பா?''

மெதுவாகக் கேட்டு விட்டு சிறு பயத்துடன் அவர் முகத்தையே ஆவலுடன் நோக்கினாள் ப்ரஷா!

ஒரு கணம் கண் மூடி யோசித்தவர், ''அப்போ, சாதி சனம், ஊர்க்கட்டுப்பாடு, பாரம்பரியம் எல்லாத்தையும் விட்டுடலாம்கிறியா?'' அமர்த்தலாகக் கேட்டார்.

''விட வேண்டாம்! காதலைத்தான் ஏத்துக்கச் சொல்றேன்... காதல் என்ன பாவமாப்பா? நீங்க பெரியவங்க பாத்து இதுதான் மாப்பிள்ளைன்னு சொன்னா உடனே அவரை விரும்பலாம்... தானா ஒரு முடிவெடுத்து காதலிச்சா தப்புன்றீங்களா?''

''இதுவே நீங்க சொல்ற பையனை ஏத்துக்க முடியாம, பழைய காதலை மறக்கவும் முடியாம, ஒரு பேச்சுக்கு சொல்றேன்... ஊர்மி தப்பான ஒரு முடிவை எடுத்து ஏதாவது செஞ்சிட்டிருந்தா என்ன செய்வீங்க? காலம் முழுக்க அதையே நினைச்சி அழுதிட்டிருப்பீங்க?''

ப்ரஷாவின் கேள்வி அவரை அசைத்துவிட, அவ ளையே வெறித்தபடி அவர் சிலையாக அமர்ந்திருந்தார்.

''எங்கேயோ அவ உயிரோட இருக்கான்ற நினைப்பு இப்ப நிம்மதியா இருக்கில்ல?

''நிறைய இடங்கள்லே தப்பு நடக்குது. அப்போ என்ன தெரியுமா சொல்லுவாங்க... இப்படி செஞ்சிப்பான்னு தெரிஞ்சிருந்தா அவ ஆசைப்பட்ட பையனுக்கே கல்யாணம் செஞ்சி வச்சிருக்கலாமேன்னு அழுவாங்க!



''அப்போ ஜாதி, அந்தஸ்து, அழகு, படிப்பு, ஈகோ எல்லாமே கண்காணாம எங்கேயோ ஓடிப் போயிடும்! ஏன்னா, போனது அவங்க ஆசையா வளர்த்த ஒரு உயிராச்சே!

''அப்போ அவங்களைக் கேட்டா மத்த எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு என் பிள்ளைதான் முக்கியம்பாங்க!

''என்னைக் கேட்டா நான் இதான் சொல்லுவேன்... ஜாதியைவிட மனசு பெரிசு... அதைவிட உயிர் ரொம்ப விலைமதிப்பில்லாததுப்பா!''

பேசிக் கொண்டே நிமிர்ந்தபோது, அவள் விழிகள் சிவந்து முகம் இளகியிருந்தது.

அவள் மெல்லத் தொடர்ந்தாள்.

''எங்களுக்கு, நாங்க சின்னவங்களா இருக்கறப்ப அனுசரிக்கப் போறதையும் மன்னிக்கற குணத்தையும் கத்துத் தந்ததே பெரியவங்க நீங்கதானே!

எப்பவுமே எல்லாத்தையும் விட வாழ்க்கையிலே உறவு கள் முக்கியம்பாங்க... ஆனா, நம்ம வயித்துல பிறந்த குழந்தைங்க இன்னும் அதிக முக்கியமில்லையா?

''சந்துரு அண்ணா மாதிரித்தானேப்பா ஊர்மியும் உங்களுக்கு? இல்லை... பெண் தானேன்னு நீங்களும் இளக்காரமா ஒதுக்கிட்டீங்களா?''

''அம்மா இருந்திருந்தா நிச்சயம் தன் மகளை இப்படி அநாதையாத் தவிக்க விட்டுருக்க மாட்டாங்க!

''அவ கர்ப்பமா இருக்கறது தெரிஞ்சவுடனே, பாசத் தோட அழைச்சிட்டு வந்து பூவாத் தாங்கி பிரசவம் பாத்து கண்ணில வச்சிப் பாத்திருப்பாங்க!''

''பாவம்... அவங்களும் இறந்திட்டாங்க...

''ஊர்மிக்கு யாருமே இல்லாத மாதிரி அநாதையா தனி மரமா அவளை நிக்க வெச்சிடுச்சி!''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவள் முடித்தபோது அவர் முகம் கனிந்து, விழியோரங்கள் கசிய ஆரம்பித்திருந்தன.

மெல்ல எழுந்து தோப்பிற்குச் சென்று அமர்ந்திருந்தவள், மதியம் திரும்பி வந்தபோது அவளை அழைத்தவர் சிறு நடுக்கத்துடன் தெரிந்த கையை உயர்த்தி அவள் தலையை மெதுவாக வருடினார்.

"நீ என்ன தகப்பன் சாமியாடா எனக்கு? எங்கேருந்து வந்தே? ம்... இத்தனை வருஷம் கழிச்சி என்னைத் தெளிய வைக்க?"

மேல் துண்டால் வாயைப் பொத்தியபடி குலுங்கி அழ ஆரம்பித்தார்.

"அப்பா... ப்ளீஸ் அழாதீங்க. நான் உங்களை சந்தோஷப்படுத்தத்தான் இங்கே வந்தேனே ஒழிய, கஷ்டப்படுத்தி அழ வைக்கறதுக்காக இல்லை!"

"அங்கே, ஊர்மி மட்டும் நிம்மதியாவா இருப்பா...? அவளும் உங்களை எல்லாம் நினைச்சி மனசுக்குள்ளேயே புழுங்கி ரத்தக் கண்ணீர் வடிச்சிட்டுதான் இருப்பா!

"அதிகப்படியான அன்பு கூட சமயத்துல இப்படித்தான்... தான் சொல்றதை பிள்ளைகள் கேக்கலைன்னா... விஷமா வெறுப்பா மாறிடுது!

"ஆனா யோசிச்சுப் பாத்தா தெரியும்... அந்தப் பிடிவாதமும் வீம்பும் நம்ம குழந்தைங்க கிட்டயே ஜாஸ்தி உண்டு உண்மை!

"நான் யாரோதான்... என்மேல இவ்வளவு பாசமா வீட்டிலே தங்க வைச்சி, பிடிச்ச சாப்பாட்டை செய்யச் சொல்லி, பிரியமா கவனிக்கறீங்களே... அவ உங்க பொண்ணுப்பா! அவளை மன்னிச்சிடுங்களேன்... ப்ளீஸ்!



கலங்கிய விழிகளுடன் கை கூப்பி இறைஞ்சியவளை அப்படியே பிடித்து மார்போடு அணைத்துக் கொண்டார் சிவநேசன்!

# 29

அவள் உடனே ஊர்மியைப் பற்றியும் அவள் குழந்தையைப் பற்றியும் அவரிடம் கூற, பிறகு நடந்த நிகழ்வுகளெல்லாம் மாயக் கனவாய்!

உடனே தோட்டத்திற்கு ஆள் அனுப்பி அவர் சந்துருவை அழைத்து வரச் சொன்னபோது தவிப்பாய்!

அவன்தான் விபரமறிந்து வானுக்கும் பூமிக்கும் கோபமாய் குதிக்க ஆரம்பித்தான்!

ஆனால், சிவநேசனும் சின்னத்தாயும் அவனை சமாதானப்படுத்த, ப்ரஷா அன்று அவனிடம் வெகு நேரம் பேசினாள்.

ஆனால் அவன் இறங்கிவர இரு நாட்களாயின. அதுவரை ப்ரஷாவிற்கு நிறைய வேலைகள் இருந்தன!

சிவநேசனை மன அளவில் ஊர்மியை எதிர்கொள்ளத் தயார் செய்ய வேண்டியிருந்தது.

சின்னத் தாயிடமும் ஊர்மியைப் பற்றிய எல்லா விபரத்தையும் கூற, அவளும் பரிதாபத்துடன் நாத்தனாரின் வரவை ஆவலோடு எதிர்நோக்கினாள்.

சந்துருவிற்கு குழந்தை இல்லாததால், பேரப்பிள்ளையின் வரவு சிவநேசனையும், சந்துருவையும் மாற்றி விடும் என்பதில், அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை!

சந்துரு, இரண்டு நாட்கள் கழித்து சிறிது கோபம் தணிந்து தன் பிடிவாதத்தை விட்டு ப்ரஷாவிடம் அரை மனதாய் பேசினான்.

உடனே ஊர்மிக்குத் தொடர்பு கொண்டாள் அவள்.

மனம் முழுவதும் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ப் படுகை விரித்திருக்க, பிறர் அறியாமல் பின்புறம் சென்றாள்!

மெதுவாக நடந்து தனிமையை நாடித் தோப்புக்குள் நுழைந்தபோது, உச்சி வெயிலையும் மீறி அவளை பாசத்துடன் உரசியது ஈரக்காற்று!

அதுவரை தன் செல்லை அணைத்து வைத்திருந்தவள், உயிர்ப்பித்த உடனே ஒரு மிஸ்டு கால் வந்தது!

அதை கவனிக்காமலே ஊர்மியின் எண்களை அழுத்த எடுத்தவுடனே, "ஏய்... ப்ரஷா, எங்கேடி போய்த் தொலைஞ்சே... மூணு நாளா உன்னைத் தேடித் தேடி எல்லாரும் பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆயிட்டோம்!" அவள் சினத்துடன் படபடத்தாள்.

"ஊர்மி! நான் இப்ப எங்க இருக்கேன்னு தெரிஞ்சா, நீ துள்ளிக் குதிப்பே!"

"அதெல்லாம் இல்லை... நீ உடனே கிளம்பி வா! இங்கே ஆதவனும் நாங்களும் எவ்வளவு தவிச்சிப் போயிட்டோம் தெரியுமா?"

"அதை விடு ஊர்மி! நான் இப்ப நாகர்கோவில்லே உங்க வீட்டுலே இருக்கேன்."



அவள் கூறியதும் சிறிது நேரம் நிலவிய அமைதியைக் கலைத்த ஊர்மி, "ப்ரஷா... நீ என்ன சொன்னே?" தவிப்புடன் வினவினாள்.

"நீ சரியாத்தான் கேட்டே... உங்கப்பா வீட்டுல இருக்கேன்... அவங்களை ஓரளவு கன்வின்ஸ் பண்ணியாச்சு! நீ உடனே கிளம்பிவா!"

அழுத்தமான குரலில் அவள் ஆணையிட, அங்கு அவள் அருகில் யாரிடமோ பேசுவது கேட்டது.

உடனே பேசியவள், அன்றிரவே கிளம்பி வருவதாகக் கூறினாள்.

ஒரு ஆழ்ந்த நிம்மதிப் பெருமூச்சுடன் செல்லை அணைத்தாள் அவள்.

உடனே மீண்டும் செல்போன் சிணுங்க திரையில் ஆதவனுடைய எண் தெரிய, பதறிப்போய் செல்லை எடுக்காமலே விட்டு விட்டாள்.

பிறகும், தொடர்ந்து அது அடித்துக் கொண்டே இருக்க, செல்லையே ஆஃப் செய்து விட்டாள்.

சிவநேசனிடம் ஓடிச் சென்று விபரம் கூறியபோது, அவருக்கு அதிக பட்ச ஆனந்தத்தில் அழுகையே வந்து விட்டது!

அன்றைய இரவு... அனைவருக்குமே எதிர்பார்ப்பும், தவிப்பும் நிறைந்த ஒன்றாய்!

சிவநேசனிடம் மட்டும் சற்று வயது குறைந்த தோற்றம் தெரிந்தது!

* * *

விடியல்... தன் பாதத்தை மெல்ல அந்த பூமியில் பதிக்க, சீக்கிரமே குளித்துத் தயாராகி, அனைவருமே ஆவலுடன் அந்த வீட்டு வாசலைப் பார்த்திருந்தனர்.

திடீரென்று கார் சப்தம் அவர்களை ஈர்க்க, வாசலுக்குச் சென்ற ப்ரஷா, அதிர்ச்சியில் அப்படியே உறைந்து நின்று விட்டாள்.

காரின் முன் கதவைத் திறந்து கம்பீரமாக இறங்கிக் கொண்டிருந்த ஆதவனைக் கண்டதும், சப்த நாடியும் ஒடுங்கி விட, அவனுடைய துரோகமும், ஏமாற்றும் குணமும் பெரும் சீற்றத்தை விதைத்தன!

என்ன செய்வதென்று ஒரு கணம் தயங்கி வெறுப்புடன் திரும்பி உள்ளே செல்லத் துவங்கியவளை இரும்பாய் பற்றித் தடுத்தது ஒரு கரம்!

நிமிர்ந்தால், அதற்குள் அவளருகே வந்திருந்த ஆதவனின் முகம்... எஃகிரும்பாய்!

தவறு செய்த அவனே இப்படி விறைத்துக் கொண்டு கம்பீரமாக நிற்கும்போது, நான் ஏன் ஒடுங்கி நிற்க வேண்டும் என்ற வீம்பில் முகம் ஒரு வித நிமிர்வுடன் உயர்ந்தது.

அதற்குள், சிவநேசன் ஓடிச் சென்று மகளை அணைத்துக் கொள்ள, சந்துருவும் சின்னத்தாயும் சரயுவைத் தூக்கி முத்தமழை பொழிந்தனர்.

குருவின் முகத்தில் எல்லையில்லாப் பரவசமும் நிம்மதியும் தெரிய, ஊர்மிளாவோ மகிழ்ச்சியின் உச்சத்திலிருந்தாள்.

உறவுகள் இணைந்த ஆனந்த சங்கமத்தில் ப்ரஷாவின் மனது நிறைந்து, விழியோரங்கள் மெல்ல அரும்பின.

அதே நேரம், முகம் தெரியா மனிதர்களிடையே ப்ரஷாவைக் கண்டதும், ''ஷாம்மா...'' என்று உற்சாகத்துடன் அவளிடம் தாவி கழுத்தை இறுகக் கட்டி முத்தமிட்டாள் குழந்தை சரயு!



''பாத்தியா சந்துரு! இந்த சின்னக் குட்டியை.... நாம எத்தனை பேரு இருந்தாலும் அவ அம்மா மாதிரியே... ப்ரஷாவைத் தான் தேடுறா!''

பெருமையுடன் சிலாகித்தார் சிவநேசன்.

## 30

அனைவரும் உற்சாகமாக உள்ளே வர, ஆதவன் மட்டும் பிடித்திருந்த அவள் கையை விடவே இல்லை!

எவ்வளவோ முயன்றும் முடியாமல் போக, ''என் கைய விடுங்க'' அடிக்குரலில் சீறினாள் அவள்!

''நோ! விட்டா அப்படியே எங்காவது காணாமப் போயிடுவே! பேசாம இரு!''

அவனும் ஆழ்ந்த குரலில் அதட்டினான்!

''இப்போ உங்களுக்கு என்ன வேணும்?'' வெறுப்பும் சீற்றமுமாய் வினவினாள் ப்ரஷா.

''நீதான்!''

ஒற்றை வார்த்தையில் அவள் உலகத்தையே உறைய வைத்தான் அவன்!

''ப்ச்... ஏன் உங்களுக்கு வேற பொண்ணே கிடைக்கலையா?''

அவள் கேட்டதும் அவன் முகம் கடினமுற்று இறுகியது.

''நான் விரும்பினா நிறையப் பெண்கள் எனக்குக் கிடைப்பாங்க... என் விழி அசைவுக்காகக் காத்திட்டிருக்கற பெண்கள் ஏராளம்! ஆனா அவங்களை எல்லாம்... எனக்குப் பிடிக்கலையே!''

அமர்த்தலான குரலில் அவன் மொழிய, ''ம்.. எனக்குக் கூடத்தான் உங்களைப் பிடிக்கலை!'' பட்டென்று கூறி விட்டாள் அவள்.

அவன் முகம் உடனே கசங்கி சிறுத்து விட, மறு நிமிடமே கையை விட்டு விட்டான் அவன்!

அப்போதுதான் அவர்களைக் கவனித்தார் சிவநேசன்.

''தம்பி யாரு... சொல்லவேயில்லையே.. வாங்க தம்பி!'' வாஞ்சையுடன் வரவேற்றார்!

உடனே ஊர்மி அவர் காதருகில் குனிந்து ஏதோ கூற, ''ஓ! அடிசக்கை... அப்படியா? அதான், நம்ம ப்ரஷா காதலுக்கு சப்போர்ட் பண்ணி, உனக்காக என்கிட்ட அவ்வளவு வாதாடினாளா?'' உற்சாகத்துடன் கேட்டார்.

அவள் விழித்துக் கொண்டு நிற்கும்போதே, ''நீயும் ஆதவனும் விரும்பறதைத்தான் அப்பாகிட்டே சொன்னேன்... அதுக்கு ஏண்டி இப்படி திருதிருன்னு முழிக்கறே?''

குறும்புடன் அவளைச் சீண்டினாள் ஊர்மி!

''நான் யாரையும் விரும்பலை!''

கசப்புடன் கூறிவிட்டு உள்ளே ஓடியவளைப் பார்த்த போது ஊர்மிக்கு ஏதோ புரிவது போல்!

''நான் கிளம்பறேன் குரு!''

ஆதவன் கூற, ''என்னாச்சு உங்க ரெண்டு பேருக்கும்! எங்களை இவ்வளவு கஷ்டப்பட்டு சேத்து வச்சிட்டு...



இப்போ நீங்க பிரியப் போறீங்களா?'' கவலையுடன் கேட்டான் குரு!

''பிடிக்காதவளை எப்படி வற்புறுத்தறது குரு! நான் போறேன்!''

விரக்தியும் சினமும் விரவித் தெரிந்தன அவன் குரலில்!

''ப்ளீஸ் ஆதவன்... அவ ஏதோ ஒரு கோபத்துலதான் புறப்பட்டு வந்திருக்கா! அது என்னன்னு கண்டு பிடிச்சி சரி செஞ்சிடலாம்... எனக்காக இரு!''

குரு கெஞ்ச, ''சரி... உனக்காக! நான் சாப்பிட்டுட்டு கிளம்பிடுவேன்! நீயும் ஊர்மியும் எப்போ பண்ணைக்கு வர்றீங்க?'' விட்டேத்தியாக வினவினான்!

''நாளைக்கு மதியம் கிளம்பி வரோம்... நீயும் இரு ஆதவன்... எல்லாரும் ஒண்ணாவே போகலாமே! அதுக் குள்ளே ப்ரஷாவோடயும் என்ன ப்ரச்னைன்னு பேசிப் பாத்துடலாம்.''

''இல்லை குரு! நான் மதியம் கிளம்பறேன்... அவ முடிவை கேட்டுச் சொல்லிடு!'' என்றபடி கோபத்துடன் வாசலுக்குச் சென்றான் ஆதவன்.

டிரைவரிடம் பணம் கொடுத்து சாப்பிட்டு விட்டு வரும் படிப் பணித்தவனைத் தோளோடு சேர்த்து அணைத்தபடி, உள்ளே அழைத்துச் சென்றான் குரு!

மாடியிலிருந்த அறைக்கு இருவரையும் சந்துருவும், ஊர்மியும் அழைத்துச் செல்ல, ப்ரஷாவின் கவடே எங்கும் இல்லை!

அந்த பிரம்மாண்டமான வீட்டையே பிரமிப்புடன் வருடிய குருவின் பார்வை, பரிவுடன் மனைவியிடம் பதிந்தது.

சென்ற முறை இருவரும் வந்தபோது வாசலிலேயே திருப்பி அனுப்பப்பட்ட ஞாபகத்தில், உதட்டோரம் சுழித்தது!

இவ்வளவு பெரிய வீட்டில் வளர்ந்தவள்... ஒரு குறை சொல்லாமல் தன் வீட்டில் இருந்தது... தன் தாயின் கொடுமைகளை வெளியில் கூறாமல் அனுசரித்தது...

பிறகும் தன் தவறுகளை மன்னித்து ஏற்றுக் கொண்டது...

எவ்வளவு இனிமையான ஒரு தேவதை தனக்குக் கிடைத்திருக்கிறாள்... அவள் மீது பரிவும் பாசமும் பல்கிப் பெருகின!

ஆதவனை ஒரு அறையில் ஓய்வெடுக்க வைத்து விட்டு அடுத்த அறைக்கு இருவரும் வந்தனர்.

"என்னங்க? இந்த ப்ரஷாவை என்ன செய்யறது? நம்ப ரெண்டு பேரையும் சேத்து வச்சிட்டு அவ இப்படி தனியா நிக்கறேன்கிறா! அவங்க ரெண்டு பேருக்கும் நடுவில அப்படி என்ன ப்ரச்னை?" ஊர்மி கவலையுடன் விசாரித்தாள்.

"எனக்கென்ன தெரியும்? நீயே ப்ரஷாவோடப் பேசு! ஆதவன் இன்னிக்கே கிளம்பறானாம்! நாளைக்கு சேர்ந்து போகலாமின்னு சொல்லியிருக்கேன்... அவனும் பிடிவாதக்காரனாச்சே!"

மெல்லிய பெருமூச்சு வெளிப்பட்டது அவனிடமிருந்து!

"சரி! நான் கீழே போய் அப்பாவோடப் பேசிட்டிருக்கேன்! நீங்களும் ஆதவனும் குளிச்சிட்டு டிபன் சாப்பிட வாங்க!" ஊர்மி கீழே சென்றாள்.



சிவநேசன் உள் கூடத்தில் அமர்ந்து சரயுவுடன் விளையாடிக் கொண்டிருக்க, உள்ளே சின்னத்தாயும் சமையல்காரம்மாவுமாகச் சேர்ந்து சமைத்துக் கொண்டிருந்த மணம் வீடு முழுவதும் ரம்யமாய் நிரம்பத் துவங்கியிருந்தது.

"ப்ரஷா எங்கேப்பா?"

ஊர்மி ஆவலுடன் கேட்டபடி தரையில் விரித்திருந்த பாயில் அமர்ந்தாள்.

அங்கு, அவர் தன் பேத்திக்காக வாங்கி வைத்திருந்த விளையாட்டுப் பொருட்கள் இரு பாய்களை நிறைத்திருந்தன!

"எதுக்குப்பா இவ்வளவு வாங்கியிருக்கீங்க?"

சலுகையாகக் கேட்டபோது, "ம்... என் பேத்திக்கு வாங்காம..? அது சரி நானும் ப்ரஷாவைத்தான் தேடிட்டிருந்தேன்!"

"பேச்சி... ப்ரஷாக்கா எங்கே பாரு!"

அங்கு வந்த வேலைக்காரப் பெண்ணிடம் வினவினார்.

"அக்கா... பின்னாடி தோப்புப் பக்கம் போச்சுங்கய்யா!" என்றாள் அவள்!

சிறிது நேரம் அவரிடம் பழைய கதைகளைப் பேசிவிட்டு மெதுவாக எழுந்து பின்புறத் தோட்டத்து வேலிப் படலைத் திறந்து தோப்புக்குள் நுழைந்த ஊர்மியின் மனதை, பழைய நினைவுகள் இனிமையாகக் களவாடின!



# 31

தோப்பிற்குள் சரமாய் நீண்ட மண் பாதையில் நடந்தபோது, அதன் குளிர்ச்சியும், பசுமையும் வெகுவாய் அவளை ஆட்படுத்துவதாய்!

சிறிது தூரம் சென்றவுடன், ஒரு மரத்தில் சாய்ந்து கண் மூடி அமர்ந்திருந்த ப்ரஷாவைக் கண்டதும், ஏனோ பரிதாபமாய்!

'எவ்வளவு புத்திசாலி இவள்... ஏன் இப்படி தன்னையும் வதைத்து பிறரையும் நோகடிக்கிறாள்' என்ற கவலை இதயத்தை இறுகப் பிசைய, மெதுவாக அவளருகில் சென்றாள்.

சருகுகள் சிதைந்த காலடியோசையில் மெல்ல விழித்தவள், எதிரே நின்றிருந்த ஊர்மியைக் கண்டதும், தர்ம சங்கடத்துடன் விழிகளை வேறு புறம் திருப்பினாள்.

அப்படியே சரிந்து அவள் முன் அமர்ந்தவள், "என்னாச்சு ப்ரஷா உனக்கு? நீயும் ஆதவனும் விரும்பினது உண்மைதானே?

"திடீர்னு சொல்லாம கொள்ளாம ஏன் இங்கே கிளம்பி வந்தே... ஆதவன் எவ்வளவு தவிச்சிப் போயிட்டாரு தெரியுமா?" கோபமாகக் கேட்டாள்.

"ஏன்... சுகந்தி போனவுடனே... நானும் வந்ததும் இந்த மாதிரி ஜாலியா ஊர் சுத்த அவருக்கு வேற யாரும் கிடைக்கலையாமா?" சுள்ளென்று சீறினாள்.



"ஏய்... என்னடி உளர்றே... சுகந்திக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம்?" புரியாமல் வினவினாள் ஊர்மி!

"அதை ஆதவன் கிட்டயே கேளு... எனக்கு எதுவும் பிடிக்கலை... நிம்மதியா இருக்கலாமின்னு இங்கே வந்தேன்... இப்போ அதுவும் போச்சு!"

"ஏன் ப்ரஷா இப்படி மாறிட்டே? என்னை எவ்வளவு உற்சாகப் படுத்துவே! தாய்லாந்திலே 'சானுக்' அப்படின்னு ஒரு மனோபாவம் இருக்கும்.

"வாழ்க்கையை ஒவ்வொரு நிமிஷமும் ரசிச்சி சந்தோஷமும் உற்சாகமுமா கொண்டாடி வாழணும்பாங்களாம்!"

"அதே மாதிரி இருக்க முயற்சி பண்ணுன்னு எனக்கு அட்வைஸ் பண்ணினவ... எப்போடி இது மாதிரி மாறிப் போனே?" கவலையுடன் வினவினாள்.

"ம்... அப்போ நான் காதலிக்கலை... காதல் பாதையில பச்சை துரோகத்தையும் சந்திக்கலையே ஊர்மி!"

விரக்தியுடன் மொழிந்தவளையே விழியிமைக்காமல் நோக்கிய ஊர்மிக்கு இதயம் கனத்துப் போனது.

சிறிது நேரம் அமைதி காத்தவள்,

"சரி! நான் குருவோட எல்லாம் பேசறேன்! நாளைக்கு நாம எல்லாரும் குருவோடப் பாட்டி இருக்கற பண்ணைக்குப் போறோம்! தேவையில்லாம மனசைப் போட்டுக் குழப்பிக்காதே!"

"நான் குழப்பிக்கலை... தெளிவாத்தான் இருக்கேன் ஊர்மி! எதை வேணாலும் என்னால சகிச்சிக்க முடியும்... நம்பிக்கைத் துரோகத்தை மட்டும்... முடியவே முடியாது! இதை இத்தோட விட்டுடு!"

"சரி! மதியம் ஆதவன் ஊருக்குக் கிளம்பிடுறாரு!

"எங்களை கஷ்டப்பட்டு சேத்து வச்சிருக்கே நீ! அதைக் கொண்டாடத்தான் இங்கே கேரளா பார்டர்ல இருக்கற நெய்யாத்தங்கரைக்குப் போறோம்!

"அங்கே பாட்டிக்கு ஒரு பண்ணை இருக்கு! அங்கே தான் ஒரு வாரம் தங்கறோம்! முடியாதுன்னா கையைக் காலைக் கட்டி அப்படியே உன்னை இழுத்திட்டுப் போயிடுவேன்!"

ஒற்றை விரலுயர்த்தி போலியாக எச்சரித்தபடி, அவளை வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் அவள்!

* * *

அன்று மதியம் ஊருக்குக் கிளம்பும் வரையில் அவளிடம் பாராமுகமாகவே இருந்தான் ஆதவன்!

சாப்பிட்ட பிறகு அவன் அனைவரிடமும் விடை பெற்றபோது காரில் ஏறும் முன்பு சிவநேசன் அவனை வாஞ்சையுடன் கைப்பிடித்து நிறுத்தினார்!

"தம்பி! எங்களுக்கு ஊர்மியும் ப்ரஷாவும் ஒன்னு தான்! அவ எங்க வீட்டுப் பொண்ணு! ஒரு அப்பாவா கேக்கறேன். அவ அருமையான பொண்ணு! அவளை கண்கலங்க விடாம பத்திரமாப் பாத்துப்பீங்களா?"

நம்பிக்கையுடன் கேட்டார்.

உடனே கோபத்தில் அவள் முகம் திருப்ப, "அங்கிள்! நான் ரொம்பப் பாவம்... இதை நீங்க அவகிட்டதான் கேக்கணும்... என்னை பத்திரமாப் பாத்துப்பாளான்னு...!" இயல்பான கேலியுடன் கூறிவிட்டுக் காரில் ஏறினான் ஆதவன்!



பிறகு உள்ளே வந்ததும் அனைவரும் அவளை கேலி செய்ய, ப்ரஷாவிற்கோ முள்ளின் மேல் நிற்பதைப் போல்!

"நான் ஆதவனை வெறுக்கிறேன்!" என்று ஓவென்று கூக்குரலிட்டு அழ வேண்டும் போலிருக்க, தனிமையை நாடித் தன் அறைக்குச் சென்றாள்.

ஒரு புறம், மனம் முழுவதும் அவன் பிரிந்த ஏக்கத்தில் துடித்திருக்க, ஒரு பாதி அவன் துரோகத்தில் வெந்து தணிந்தது.

* * *

மறுநாள் காலையில் டிபன் சாப்பிட்டவுடனே மூவரும் குழந்தையுடன் கிளம்பி விட்டனர்.

சிவநேசனும், சந்துருவும் சின்னத்தாயும் பிரியாவிடை கொடுக்க, அடுத்த முறை வந்து அதிக நாட்கள் தங்குவ தாக வாக்குறுதி அளித்து விட்டுக் கண்ணீருடன் கிளம்பினாள் ஊர்மி!

காரில் செல்லும்போது ப்ரஷாவிற்கு காலையில் நடந்தது நினைவிற்கு வந்தது!

காலையில், நகைகள், பட்டுப் புடவைகள், சீர் பணம் எல்லாவற்றையும் சிவநேசன் ஊர்மியிடம் அளித்தபோது. குரு மறுக்க, ஊர்மியால் எதுவுமே பேச முடியவில்லை!

உடனே, "அப்பா! இப்படி வந்த இடத்துல குடுத்தா எப்படி? முறையா ஊருக்கு வாங்க... சென்னைக்கு வந்து நேரிலே அவங்களுக்கு செய்ங்க... கட்டாயம் வாங் கிப்பா!"

ஏமாற்றத்துடன் நின்றிருந்த சிவநேசனிடம், ஆறுத லாகக் கூறினாள் ப்ரஷா!

பிறகு அதுவும் சரியெனப்படவே, குழந்தைக்கு மட்டும் நகைகளும் உடைகளும் பரிசளித்தவர், பெண்கள் இருவருக்கும் பட்டுப் புடவைகளைத் தாம்பூலத்துடன் வைத்து அளித்தார்.

''ப்ரஷா... உன் கல்யாணத்தை... அது எப்ப நடந்தாலும் நான் தான் முன்னே நின்னு நடத்துவேன். அதுவும் நம்ம வீட்டிலேயே!''

அவர் குரலில் தொனித்த ஏக்கத்தை உணர்ந்தவள் மறுக்க இயலாமல் ''சரிப்பா... உங்க இஷ்டம்!'' என்று புன்னகைத்தாள்.

ஊர்மியின் திருமணம் தன் முன்னிலையில் நடக்காதது, அவருள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை இங்கு அவள் வந்த போதிலிருந்தே புரிந்து கொண்டிருந்தாள்!

அவள் ஒத்துக் கொண்டவுடனே, அவர் முகம் மகிழ்ச்சியில் விரிய, நடக்காத ஒன்றை வைத்து அவரை ஏமாற்றி விட்ட குற்றவுணர்வு... ப்ரஷாவிற்குள் முள்ளாய்!

உடனே முகம் மாறிவிட தன் நெஞ்சில் முகம் பதித்து சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்த சரயுவைக் குனிந்து முத்தமிட்டாள்.

''என்ன ப்ரஷா! முகம் திடீர்னு மாறிடுச்சி! ஏண்டி இப்படி வீணாப் பிடிவாதம் பிடிக்கறே! ஆதவன் ரொம்ப நல்லவர்... குரு சொல்றாரு... அவர் விரும்பின முதல் பொண்ணே நீதானாம்.''

''அப்ப அவர் சரியாத் தன் நண்பரைப் புரிஞ்சிக்கலைன்னு அர்த்தம்!''

அழுத்தமாகக் கூறிவிட்டுக் கண்களை மூடி பின்புறம் சாய்ந்து கொண்டாள் அவள்.



அப்படியே உறங்கி விட்டவளை கனவிலும் ஆதவன் வந்து தொந்தரவு செய்ய, எரிச்சலுடன் கண் விழித்தால், ஊர்மிதான் அவளை உசுப்பிக் கொண்டிருந்தாள்!

''ப்ரஷா... உனக்குதானே இயற்கைக் காட்சிகளை ரசிக்க ரொம்பப் பிடிக்கும்... அதான் எழுப்பினேன்! பாட்டி ஊர் வரப்போகுதாம்!''

''சுத்திப் பாரேன்... பசுமையா வயல்களும் மலைகளும் எவ்வளவு அழகா இருக்குன்னு!'' உற்சாகமாகக் கூறினாள்.

உறக்கம் கலைந்து விழிகளைச் சுழல விட்டவளுக்கு, அந்தக் கேரள மண்ணின் அழகு பெரும் வரப்பிரசாதமாய்!

கடந்து சென்ற தோட்டம் சூழ்ந்த வீடுகளும், வண்ண வண்ண மலர்களும், தென்னந்தோப்புகளும் காண் போரைப் பெரிதும் ஈர்த்தன.

அதை ரசித்தபடியே வந்தபோதுதான், தூரத்தில் பரந்து விரிந்த பெரும் புல்வெளிப்பரப்பின் நடுவே தெரிந்த அந்த வீட்டைக் காட்டினான் குரு!

## 32

பெரிய ஏரிக்கரையோரம், அழகிய சிறு கோட்டையைப் போல் தெரிந்தது... பழங்காலப் பாரம்பரிய கேரள அமைப்புடனிருந்த அந்த வீடு!

''வாவ்! எவ்வளவு பெரிசா அழகா இருக்கு! எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!'' சிலிர்ப்புடன் முனகினாள் ப்ரஷா!

ஏரிக்கரையோரம் தெரிந்த படகுத்துறையும், அதில் படகுகள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்ததும் மிக அழகாய்!

ஒரு வித லயிப்புடன் குழந்தையை சுமந்தபடி அவள் இறங்க, ''இங்கே குடு ப்ரஷா! பாவம் எவ்வளவு நேரம் தான் இவனை சுமப்பே! கை வலிக்கப் போவுது!'' என்றபடி தூக்கிக் கொண்டாள் ஊர்மி!

பிறகு தன் சுடிதாரை சரி செய்தபடி நிமிர்ந்தபோது, ஒரு நடுத்தர வயது மனிதரும், பெண்மணியும் ஆவலுடன் ஓடி வந்தனர்.

''வாங்க... வாங்க'' என்று அனைவரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

''இவங்கதான், இந்தப் பண்ணையைப் பாத்துக் கறாங்க... பாட்டிக்கு உறவுக்காரங்க!''

அவர்களை அறிமுகப்படுத்திய குரு செல்ல, பக்கத்தில் தெரிந்த மைதானத்தில் மூன்று யானைகள் சாவகாசமாக மூங்கில் துளிர்களை சாப்பிட்டபடி தலையசைத்துக் கொண்டிருந்தன!

''இந்த யானைங்க?''

அவள் வியப்புடன் வினவும்போதே, ''நம்முதுதாம்மா!'' என்றார் அந்தப் பெண்மணி!

பெரும் வியப்புடன் வீட்டினுள் நுழைந்தபோது, முன்புற ஹால் சோபாவில் அமர்ந்திருந்த அந்த வயதான மூதாட்டி அவர்களை வாஞ்சையுடன் வரவேற்றார்!



''குரு! வாப்பா! எத்தனை திவசமாச்சு உன்னைப் பாத்து! வாம்மா ஊர்மிளா! வாம்மா என் பேத்திப் பொண்ணே!'' சரயுவையும், ப்ரஷாவையும் வரவேற்றார்.

''முத்தச்சி! எப்படி இருக்கீங்க?'' வேகமாகச் சென்று அவரை வணங்கிவிட்டு அணைத்துக் கொண்டான் குரு!

''ம்... இப்பதான் இந்த முத்தச்சி ஞாபகம் வந்ததா குரு?

''இனிமே, நீதான் ஊர்மிளா இவனை இங்கே அழைச்சிக்கிட்டு வரணும்!''

உரிமையுடன் கோரியவர், ப்ரஷாவிடம் திரும்பி ஆர்வத்துடன் இரு கைகளையும் நீட்டினார்.

''வா மோளே! உன்னைப் பத்தி தவா எல்லாம் சொன்னான்... உன்னைப் பாக்க ஆவலாக் காத்துட்டிருக்கேன்!''

அவர் கூறியதும் ஒரு கணம் விதிர்த்துப் போனவள், அதை மறைத்தபடி... அவர் முன்னால் சென்று பாதம் தொட்டு வணங்கி முழந்தாளிட்டு அமர்ந்தாள்!

அந்தத் தரை கரிய நிறத்தில் வழு வழுவென்று முகம் பார்க்கும் கண்ணாடியாய் மின்னியது!

''என்னம்மா பாக்கறே... இது முட்டையும் தேங்காய் சிரட்டை எண்ணெயும் சேர்த்து செஞ்ச அந்தக் கால இயற்கையான கிரானைட் பாலீஷ்!'' என்றபடி அவள் முகத்தை நடுங்கும் கரங்களில் ஏந்தி முன்னுச்சியில் அவர் முத்தமிடும்போதே ஒலித்த குரல் அவளைத் தூக்கிப் போட வைத்தது.

''ஹாய் குரு... வா... வா... எப்படி இருந்துது ஜர்னி?''

இயல்பாக விசாரித்தபடி உள்ளிருந்து வந்தான் ஆதவன்!

போலோ நெக் டி-ஷர்ட்டும், பெர்முடாஸும் அணிந்து தன் சொந்த வீட்டிலிருப்பவனைப் போல் வந்தவனை,

அவனுடைய விழிகள், வெறுப்பும் மிரட்சியுமாய் அளவிட்டன!

அவள் பார்வையைக் குறும்புடன் தாங்கி ஒற்றைப் புருவத்தை அவன் உயர்த்த, ''உன்னை இங்கே வர வழைத்து விட்டேன் பார்த்தாயா?'' என்ற வெற்றிக் களிப்பு அதில்!

உடனே தோழியிடம் திரும்பியவள், ''இது யார் வீடு ஊர்மி?'' பற்களைக் கடித்தபடி அடிக்குரலில் வினவினாள்.

''ம்... ஆதவனோட பாட்டி ராஜாமணித் தம்புராட்டி யோட வீடு... அப்படிச் சொன்னா நீ வரமாட்டேன்னு தான் குரு தன் பாட்டி வீடுன்னு சொல்லச் சொன்னாரு!''

பாட்டி அருகிலிருப்பதால் அதற்கு மேல் தன் எரிச்சலையும் சினத்தையும் வெளிப்படுத்த முடியாமல் ''சே... எல்லாமே பொய்!'' மெல்ல முணுமுணுத்து விட்டு திரும்பிக் கொண்டாள்.

அதற்குள் ஆதவன் தன் பாட்டியின் அருகிலிருந்த சோபாவில் அமர்ந்து அவளையே நோக்க, முற்களின் மேல் நிற்பதைப் போலிருந்தது அவளுக்கு!

பிறகு ஆதவன் அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கான அறையைக் காட்டியபோது, தன் கூட்டைத் தேடும் பறவையாய் அதில் சரணடைந்தாள் அவள்!

அந்த அறை மிக அழகாய்... பழங்கால நாகரிகத் தையும், கலாச்சாரத்தையும் தன்னுள் அடக்கியிருந்தது!

பெரிய ரோஸ்வுட் கட்டிலும், மரத்தில் வேலைப்பாடு டன் செய்யப்பட்ட சோபாக்களும் டிரெஸ்ஸிங் டேபிளும் வார்னிஷில் பளபளத்தன!

பழங்கால ஓவியங்கள் சுவர் அலங்காரமாய் மாட்டப் பட்டிருக்க, ஏதோ பழைய யுகத்துக்கே பயணித்த உணர்வு!



வியப்புடன் மெதுவாக எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபோதுதான் மூன்று புறமும் மூன்று கதவுகள் தெரிந்தன!

ஒரு பக்கமிருந்த கதவை இழுத்தபோது திறக்க முடியாமல் பூட்டியிருப்பது தெரிய, எதிர்ப்புறக் கதவு குளியலறைக்கு அழைத்துச் சென்றது.

பின்புறமிருந்த கதவைத் திறந்தால், பால்கனியும், எதிரே அழகிய ஏரியும் தெரிய மனதில் ஒரு விதக் குளிர்ச்சியும் இதமும் பரவின.

வெளியே சென்று நின்றால் ஏரிக்குப் பின்புறம் பார்டர் கட்டியிருந்த பசிய மலைகளிலிருந்து வந்த சாரல் சிலிர்ப்பாய் தேகம் தீண்டி காதோர முடிக்கற்றைகளைக் கலைத்து சில்மிஷம் செய்தது!

கண்கள் தொட்டு விடும் தூரத்திலிருந்த ஏரியும், சுற்றிலும் வளப்புடன் தெரிந்த தோட்டமும், அவளுக்கு உடனே பிடித்துப் போனது.

உடனே இங்கிருந்து சென்று விட வேண்டுமென்ற எண்ணத்துடன் மாடிக்கு வந்தவளை, அந்த இயற்கை மெல்ல அமைதிப்படுத்துவதாய்!

## 33

கிண்க்களை மூடி குளிர்ந்த மலைக் காற்றை நாசியில் இழுத்து சுவாசித்தபோதுதான் "என்ன... பிடிச்சிருக்கா?'' அவளா செவியை மெல்ல வருடியது ஆதவனின் குரல்!

உடனே பதறி அவள் விலக, குறும்புச் சிரிப்புடன் கைகட்டியபடி பால்கனிக் கம்பிகளில் சாய்ந்து தலையைச் சரித்து அவளையே கூர்ந்திருந்தான் அவன்.

''நீங்க... இங்கே எப்படி?'' பதட்டத்துடன் திரும்பியவளுக்கு, அப்போதுதான் அந்த பால்கனியில் இருந்து இன்னொரு அறைக்கும் வழியிருப்பது தெரிய வந்தது.

பதட்டத்துடன் திரும்பி அவள் உள்ளே செல்ல முயல, உடனே அவள் கரம் இரும்பென சிறைப் பிடிக்கப்பட்டது!

''ஏய்... எங்கே ஓடறே? என்னைப் பிடிக்கலைன்னு பொய்யா சொல்றே?''

சீண்டலுடன் கேட்டபடி அவளை இழுத்துத் தன் மேல் சரித்தான்.

''சே... விடுங்க... நான் சொன்னது பொய்யில்லை நிஜம்! உங்க மாதிரி நான் பொய்களோட பிரதிநிதி இல்லை!''

ப்ரஷா சுள்ளென்று சீறினாள்.

''ம்... அப்படியா? என்ன பொய் சொன்னேன் நான்...? நீ அழகா இருக்கேன்னு சொன்னதா? இல்லை... நீ ரொம்ப நல்லவன்னு சொன்னேனே அந்தப் பொய்யா... எதை சொல்றே?''

அவளை இலகுவாக ஏந்தியபடி கேட்டவனையே வெறுப்புடன் ஏறிட்டவள், ''ஐ ஹேட் யூ! என்றபடி பிடித்துத் தள்ளிவிட்டு உள்ளே ஓடி அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

இப்படித்தான் சாமர்த்தியமாகப் பேசி அந்த சுகன்யாவையும் சுகந்தியையும் வசப்படுத்தியிருப்பானோ... தேகம் குலுங்கியது!



எப்படியாவது இங்கிருந்து கிளம்பி விட வேண்டுமென்ற உணர்வை, ஊர்மியின் வார்த்தைகள் நினைவிற்கு வந்து தடுத்தன.

அவளுடைய இன்றைய சந்தோஷத்தையும், அவர்களின் இணைவையும் கொண்டாடவே இங்கு வந்திருப்பதாக அவள் கூறியது நினைவு வர, அதைக் கலைக்கவும் மனம் வரவில்லை!

இதயம் முள்ளில் அகப்பட்ட சிறகாய்த் துடிக்க, இனி இங்கிருக்கும் நேரங்களை பெரும்பாலும் ஆதவனுடைய பாட்டியுடன் செலவழிக்க அவள் முடிவு செய்தாள்.

அவருக்கு எதிரில் ஒரு கட்டுப்பாட்டுடன் அவன் இருப்பானென்று தோன்ற, உடை மாற்றி முடித்தபோது கதவு தட்டப்பட்டது.

மெல்லத் திறந்தால், ஊர்மிதான் அங்கு நின்றிருந்தாள்.

உடனே அவளிடமிருந்து சரயு ப்ரஷாவிடம் தாவ, ஆசையுடன் தூக்கிக் கொண்டவளை தோழியின் குரல் கலைத்தது.

''இதே மாதிரி ஆதவனோட குழந்தையோட நீ இருக்கணும்கிறதுதான் எங்க ஆசை! அதை ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்கிறே ப்ரஷா?''

அவள் மெல்லக் கேட்டதும் சிலிர்த்து நிமிர்ந்தவள்,

''ப்ளீஸ் ஊர்மி! அது முடிஞ்சி போன ஒரு கதை! அதைப் பத்திப் பேசறதா இருந்தா நான் இன்னிக்கே ஊருக்குக் கிளம்பறேன்.'' பிடிவாதமான குரலில் உரைத்தாள்.

''சரி.. நான் பேசலை! நீ வா... சாப்பாடு ரெடியாம்... குரு உன்னை அழைச்சிட்டு வரச் சொன்னாரு!'' என்றபடி வெளியே செல்ல அவளைப் பின் தொடர்ந்தாள் ப்ரஷா!

"ஷாம்மா..." அவளை முத்தமிட்டுத் தோளில் வாகாக சாய்ந்து கொண்டாள் சரயு!

குழந்தையின் முதுகைப் பாசத்துடன் வருடியபடி கீழிறங்கி வந்தவளை, ஏக்கத்துடன் இரு விழிகள் கவனித்ததை அவள் அறியவில்லை!

## 34

சாப்பாடு பிரமாதமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது! சாப்பிடும் அறையில் பாட்டிக்கருகில் அவள் உட்கார்ந்தவுடனே, மறுபுறம் ஆதவனும் அமருவான் என்பதை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை!

ஆனால் அவனோ இயல்பாக, அமர்ந்ததோடு மட்டுமின்றி, "இந்த எரிசேரி ரொம்ப நல்லாருக்கும்... இது ஓலன், இது அவியல், அடைப்பிரதமன் டேஸ்டியா இருக்கும் சாப்பிட்டுப் பாரு!" என்று உபசரிக்க ஆரம்பித்தான்.

உள்ளூர மூண்ட எரிச்சலை அடக்கவும் முடியாமல், பெரியவருக்கு எதிரில் அதைக் காட்டவும் மனமின்றி இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தபடி கொறித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"அது சரிப்பா தவா! உங்க கல்யாணம் எப்பன்னு நீங்க முடிவு பண்ணிட்டீங்களா? அதுக்காகத்தானே நான் காத்துட்டிருக்கேன்!"



ராஜாமணி வாஞ்சையுடன் கேட்க திடுக்கென்று தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு!

"ம்... அதை நீங்க ப்ரஷாகிட்டதான் கேக்கணும்."

உள்ளார்ந்த சிரிப்பில் குறுகுறுத்த விழிகளுடன், அவளையே ஓரக்கண்ணால் பார்த்தபடி உரைத்தான் அவன்!

உடனே அவள் கோபத்துடன் முறைக்க, "என்ன ப்ரஷா? ஒண்ணும் தெரியாத மாதிரி முழிக்கறே... நேத்து கலந்து பேசி முடிவு செஞ்சோமே. இன்னும் மூணே மாசத்துலன்னு... அதை சொல்ல வேண்டியதுதானே பாட்டிகிட்டே... அதுக்கேன் இவ்வளவு வெக்கம்?"

தனக்குள்ளேயே முறுவலித்தபடி அவள் தடுமாற்றத்தை வெகுவாய் ரசித்தான் அவன்.

குருவும் ஊர்மியும் நமட்டுச் சிரிப்புடன் அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

சரயுவிற்கு சாப்பாடு ஊட்டுவதற்கு ஒரு பெண்மணி அவளை வெளியே தோட்டத்திற்கு எடுத்துச் சென்றிருந்தார்.

எப்படியோ தன்னை அடக்கியபடி சாப்பிட்டு முடித்தவளை, வியப்புடன் ஏறிட்டார் பாட்டி ராஜாமணி அம்மாள்!

"என்னம்மா! உன் வயசல நாங்க எப்படிச் சாப்பிடுவோம். நீ என்னடான்னா இப்படி சாப்பிடறே?" சிறு கவலையுடன் கேட்டார்.

"பாட்டி! ஒரு வேளை நம்ம வீட்டு சமையல் அவளுக்குப் பிடிக்கலையோ என்னவோ! நேத்து ஊர்மி வீட்டிலே ஒரு வெட்டு வெட்டினாளே!"

சிரிக்காமலே உள்ளார்ந்த குறுகுறுப்புடன் கூறி அவளைப் பாட்டியிடம் நன்றாக மாட்டி விட்டான் ஆதவன்!

"இல்லை பாட்டி! சாப்பாடு நல்லாருக்கு! லேசா தலைவலி அதான் சரியா சாப்பிட முடியலை!"

அவர் மனம் கஷ்டப்படக் கூடாதே என்று பதட்டத்துடன் கூறினாலும் அதுதான் உண்மையாய்!

சாப்பாடும் ருசியாகவே இருக்க அவளுள் முணு முணுப்பாய் ஆரம்பித்திருந்த தலைவலி இப்போது அதிகமாயிருந்தது.

"நம்ம மரியத்தை விட்டு ஒரு கஷாயம் போட்டுத் தரச் சொல்லவா?"

அவளுடைய நெற்றியை இடது கையால் வருடியபடி வாஞ்சையுடன் வினவினார் ராஜாமணி!

அந்த பாசமும் ப்ரியமும் கண்களை நிறைத்து விட "இல்லை முத்தச்சி! கொஞ்ச நேரம் படுத்திருந்தா சரியாயிடும்!" மெல்லிய குரலில் பகர்ந்தாள்.

"அதை விடப் பின் பக்கம் இருக்கற ஏரிக்கரையோரமா கொஞ்சம் உலாவிட்டு வந்தா சரியாப் போயிடும். தவா... அழைச்சிட்டுப் போயேன்!"

அவர் கூறியதும் பதறி எழுந்தாள் அவள்.

"வேண்டாம்... நான் தனியாப் போயிடுவேன்!"

வேகமாகக் கை கழுவிட்டுச் சென்றவளைத் தடுத்தது ஆதவனின் குரல்!

"இங்கே பாட்டி சொல்றதுதான் சட்டம்! அதை மீற எனக்கே தைரியம் கிடையாது! பேசாம என் கூட வாக்கிங் வா!"

அழுத்தமான குரலில் ஆணையிட்டு விட்டு அவளுடைய கையை விடாமல் பற்றிக் கொண்டான் அவன்.



"ப்ச்... வேலைக்காரங்கல்லாம் தப்பா நினைப்பாங்க... கைய விடுங்க!"

தாங்க மாட்டாமல் சீறியவளை, "இப்படி நீ உர்ருன்னு முகத்தை வச்சுக்கிட்டு என் கூட சண்டை போட்டாத்தான் அவங்க கவலைப்படுவாங்க!

"நம்ம விஷயம் அவங்களுக்கு தெரியும். அதனால பேசாம வா!"

ஆழ்ந்த குரலில் அவன் உரைத்ததும், தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு!

"என்னது? இன்னும் எத்தனை பேருக்கு இது மாதிரி சொல்லி வச்சிருக்கீங்க?" சீற்றத்துடன் கேட்டாள்.

"எதை? நமக்குள்ளே நடந்த அழகான பகிர்தலையா? உண்மை என்னன்னு புரியாம என்னைத் தப்பா நினைச்சி நீ ஓடி வந்ததைப் பத்தியா? நான் உன்னை உயிராக் காதலிச்சதையா?"

அவன் கேட்டதும் அவளுக்கு சுகந்தியின் நினைவில் கடும் சீற்றமும் வெறுப்பும் பரவின!

"ப்ளீஸ்! மேல மேலப் பொய் பேசி உங்களைத் தரம் தாழ்த்திக்காதீங்க ஆதவன்!" தாங்க இயலாமல் கத்தி விட்டாள்.

"சரி! இப்ப நான் எது சொன்னாலும் உனக்கு தப்பாவே தான் படும்! மனசுக்குள்ளே ஒரு மைண்ட் செட் வந்திட்டா, உடனே அதை மாத்தறது கஷ்டம்!

"கொஞ்ச நேரம் அமைதியா இயற்கை அழகை ரசிச்சிட்டே வாக்கிங் போனா மனசு கொஞ்சம் அமைதியாகும். உண்மை உரைக்கும்... பாப்போம்!"

"என் மனசு அமைதியாகாது... அது எரிமலை மாதிரி எரிஞ்சிக்கிட்டிருக்கு... அதை அணைக்க முடியாது!"

உடனே அவளை ஓர விழிகளால் கூர்ந்தவன், "ஒரே அணைப்புல அந்த நெருப்பை என்னால அணைக்க முடியும்... முயற்சி பண்ணிப் பார்க்கலாமா?" சவாலாகக் கேட்டான்!

"சீ! ஒரு பொண்ணு கிட்ட இப்படிப் பேச உங்களுக்கே கூச்சமா இல்லை?" அடிக் குரலில் சீறினாள்.

"இல்லையே! யாரோ ஒரு தெரியாத பொண்ணுன்னா தான் வெக்கப்படணும். என் மனசை கொள்ளையடிச்ச என்னோட இதய தேவதையை அணைக்க நான் ஏன் கூச்சப் படணும்! ஐ லவ் யூ டார்லிங்... அதை முதல்லே புரிஞ்சிக்க!"

"சே! இதே வார்த்தைகளை எத்தனை பேர் கிட்டே சொல்லி இருப்பீங்க மிஸ்டர் ஆதவன்! எனக்குத் தெரிஞ்ச ரெண்டு பேரு... தெரியாம எத்தனை பேரோ?"

நக்கலாக உரைத்தாள்.

உடனே விழிகள் சிவந்து முகம் கருத்துவிட, "ஏய்... அப்படியே அறைஞ்சேன்னா... போனாப் போகுதுன்னு விடறேன்! என்ன உளர்றே?" கடும் சீற்றத்துடன் கர்ஜித்தான்.

"இப்படிக் கத்தறதால எல்லாம் உண்மையாகிடாது... நானும் பயப்பட மாட்டேன்... நிஜத்தை சொன்னா வலிக்குதா...? இது தெரிஞ்சப்ப எனக்கு எவ்வளவு வலிச்சிருக்கும்!" தன்னையும் அறியாது உளத்து விட்டாள்.

உடனே சிறு புன்னகை ஒன்று அவன் விழிகளில் எட்டிப் பார்க்க,

"ம்... என்னை வேற யாரோடவாவது இணைச்சு திங்க் பண்ணா கோபம் வருது. அப்போ நான் உன்னை பாதிச்சது... நீ என்னை விரும்பினது எல்லாமே உண்மைதானே?" என்றபடி அவளை வேகமாக அருகே இழுத்தான்.



"சே... விடுங்க! நான் அப்படிச் சொல்லலை!" அவன் பிடியிலிருந்து விலக முயன்றபடி உரைத்தாள்.

"வேற எப்படி சொன்னியாம்? இன்னொருத்தர் கிட்ட என் காதலை நான் சொன்னேன்னு நினைச்சாலே வலிக்குதுன்னா அதுக்கு என்ன அர்த்தம் ப்ரஷா?"


விடாமல் பிடித்தபடி குறும்புடன் கேட்க அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"இல்லை... நான் அதுக்கு சொல்லலை... ஐ ஹேட் யூ!"

வேண்டுமென்றே வெறுப்பை உமிழ்ந்தவளை, பரிகசிப்பதுபோல் ஒலித்தது அவனுடைய மாயச் சிரிப்பு!

"ம்... அப்புறம்! என்னைப் பத்தி எதுவுமே நினைக்கலைன்னா, ஏன் இவ்வளவு கோபம் வரணும்? இவ்வளவு வயலண்ட்டா ஒரு வைல்ட் கேட் மாதிரி ஏன் ரியாக்ட் பண்ணணும்? நான் உனக்குள்ளே ஆழமாப் பதிஞ்சிட்டேன்ற பயம்தானே!"

இடுங்கிய விழிகளால் அவளையே கூர்ந்தபடி கேட்டவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள் வேகமாகத் திரும்பி ஓட ஆரம்பித்தாள்.



## 35

அந்த ஏரிக்கரையோரத்திலேயே வெகு நேரம் தனை மறந்து விரைந்தவள், ஓய்ந்து போய் தொப்பென்று கண் மூடி அமர்ந்தாள்.

சிறிது நேரம் கழித்து மூச்சு வாங்க நிமிர்ந்தபோது. இரு வலிய பாதங்கள் எதிரே கண் முன் தெரிந்தன.

விதிர்ப்புடன் நிமிர்ந்தால் ஆதவனும் மூச்சு வாங்கியபடி எதிரே நின்றிருந்தான்.

''எங்கே ஓடினாலும் என்கிட்டருந்து நீ தப்பிக்க முடியாது! இந்த உலகத்தோட மறு கோடிக்கே போனாக்கூட உன்னைக் கண்டு பிடிச்சிடுவேன்.''

ஒருவித சவாலுடன் வந்தது அவன் குரல்!

''ப்ச்... விரும்பாத பெண்ணைத் துரத்தி துரத்தி காதலிக்கறது... அப்புறம் அவ கிடைச்சவுடனே கை கழுவறது... இதுதான் உங்க பாலிஸியா?'' கூர்மையாகக் கேட்டாள்.

''நோ! என்னை விரும்புன ஒரு பெண்ணைத்தான் நான் துரத்தினேன்! அப்படியே அவ கிடைச்சாலும் நிச்சயம் கை கழுவி விட மாட்டேன். இதுதான் என் பாலிஸி.. போதுமா?''

''பெண்களைப் பத்தி நிறையத் தெரியுமோ? நீங்க கைவிட்ட பெண்களுக்கான பாலிசி என்ன...? அப்போ சுகந்தி?'' கூர்மையாக வந்தது அவள் கேள்வி.

''ப்ச்! சுகந்தியா? என்னை விரும்பறவங்களை எல்லாம் நான் ஏத்துக்க முடியாது! அப்படி ஏத்துக்கணும்னா அந்தக் கால ராஜா மாதிரி ஒரு நவீன அந்தப்புரம் தான் கட்டணும்!''

இகழ்ச்சியுடன் சுழித்தன அவள் உதடுகள்!

''ம்... அதான் முதல்லே சுகன்யா... அப்புறம் சுகந்தி இப்ப ப்ரஷான்னு அந்தப்புரத்துக்கு ஆள் சேர்க்கிறீங்களா?''



உடனே அவன் விழிகள் இடுங்கி முகம் சுருங்கியது.

''எனக்குப் புரியலை! உனக்கு எப்படி இந்த மாதிரி ஐடியாவெல்லாம் தோணுது!

''சுகன்யா எங்க பேமிலி ஃப்ரெண்ட்... ஒரு ஆர்க்கிடெக்ட்... எங்க வீட்டை டிசைன் பண்ணினது அவங்க...

''சுகந்தி என் ஸ்டாப்... என்னை விரும்பறேன்னு சொன்னவ! அவளை மறுத்து நான் அட்வைஸ் பண்ணி அனுப்பினேன்!

''இதிலே... அவங்க ரெண்டு பேரும் எப்படி நான் விரும்பற பெண்களோட லிஸ்டுல வந்தாங்க... நான் தெரிஞ்சிக்கலாமா?'' கோபமும் கிண்டலுமாகக் கேட்டான்!

''ம்... முதல்லே சுகன்யாவோட நீங்க தொடர்பு வச்சிக்கிட்டிருந்தது... அப்புறம் சுகந்தியை உங்க வலையில விழ வச்சது... எல்லாமே எனக்குத் தெரியும்!''

விழிகளில் பொங்கிய கண்ணீருடன் உரைத்தாள் அவள்.

அவன் முகம் சட்டென்று சீற்றத்துடன் இறுகியது.

''ஏன்... மத்தவங்களை விட்டுட்டே? நம்ம ஆபீஸிலே வேலை செய்யற ப்ரியா மாலா, ராதா, கவிதா, ரேணுன்னு ஒரு பெரிய லிஸ்ட்டே போட வேண்டியதுதானே?

''உனக்கே அசிங்கமா இல்லை இது மாதிரிப் பேசறதுக்கு?'' கள்ளென்று சீறினான்.

''நான் ஏன் அசிங்கப்படணும்? ஒரு வுமனைசரா இருக்கற நீங்களே அதுக்காகக் கவலைப்படலை!''

அவள் முடிப்பதற்குள், அவன் கன்னத்தில் இடியென இறங்கியது அவன் கரம்!

அந்தத் தாக்குதலில் புயலில் அடிபட்ட கொடியாய் துவண்டு சரிந்தவள், இதை எதிர்பார்க்காததால், கன்னத்தை மூடியபடி அப்படியே சிலையாய் உறைந்து அமர்ந்து விட்டாள்.

"இனி ஒரு முறை இப்படிப் பேசினே... அப்புறம் நான் மிருகமா மாறிடுவேன்! நான் ஒரு வுமனைசரா? நான் விரும்பின முதல் பொண்ணே நீதான்டி!

"சே... இப்படி ஒரு கேவலமானவனை என்னை நம்பாதவளை... நான் எப்படி...? ஐ ஹேட் யூ!"

ரௌத்ரமாகக் கூறி விட்டு வந்த வழியே விரைந்து சென்று விட்டான் ஆதவன்!

* * *

அப்படியே முகம் மூடி அழத் துவங்கியவளை, அவனுடைய இறுதி வார்த்தைகள் சல்லடைக் குண்டாய்த் துளைத்து சிதைத்துப் போட்டன!

தான் தவறு செய்து விட்டோமோ... உள்ளத்தை உலுக்கியது அந்தக் கேள்வி!

உடனே அதை அழித்தது ஒரு பதில்...

"எந்தப் பெண்ணும் தன் கற்பு விஷயத்தில் பொய் சொல்ல மாட்டாள்" என்று சம்மட்டியாய் அடித்தது.

எவ்வளவு நேரம் அந்த ஏரிக்கரையில் முழங்காலுக்குள் முகம் புதைத்து அவள் அழுதிருந்தாளோ, ஒரு மெல்லிய தொடுகை, அவளை சுய நினைவிற்கு மீட்பதாய்!

நிமிர்ந்தபோது, அங்கு ஊர்மிதான் ஒரு வித ஆறுதல் பார்வையுடன் நின்றிருந்தாள்.

"ப்ரஷா! ஏன்டி இப்படி மத்தவங்களையும் வதைச்சி உன்னையும் கஷ்டப்படுத்திக்கறே? உனக்கு ஆதவனோட அப்படி என்ன ப்ரச்னை?"



சிறு தவிப்புடன் கேட்டாள்.

"எல்லாம் முடிஞ்சிடுச்சி ஊர்மி... விட்டுடு" சிறு சலிப்புடன் கூறியபடி எழுந்தாள் அவள்.

கன்னம்... செம்புலம் பெயர்ந்த நீராய் சிவந்திருந்தது!

"ம்! உங்க ரெண்டு பேருக்கும் தான் இந்த விஷயத்துல எவ்வளவு ஒத்துமை! இதையேதான் ஆதவனும், குருகிட்டே சொன்னாராம்!"

"என்னடி பேசினீங்க ரெண்டு பேரும்? நீங்க ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசி உங்க கோபதாபங்களையெல்லாம் விலக்கி ஒரு நல்ல முடிவுக்கு வருவீங்கன்னு தான் பாட்டி உங்களை வாக்கிங்குக்கே அனுப்பினாங்க!

"இப்படி அதை சொதப்பிட்டு நிக்கிறியே!" அவளைப் பிடித்து அணைத்து எழுப்பினாள்.

"எங்க ரெண்டு பேரையும் இத்தனை வருஷப் பிரிவு வெறுப்புக்கு அப்புறம்... எவ்வளவு பெரிய போராட்டத்துக்கும் நடுவிலே கஷ்டப்பட்டு நீங்க ரெண்டு பேரும் சேர்த்து வைச்சீங்க?"

"உங்க காதலுக்கு தடையா வந்தது என்ன? அதே சந்தேகம் தானா? குருவுக்கு, அவர் என்னை சந்தேகப்பட்டது தப்புன்னு அவ்வளவு அட்வைஸ் பண்ணினியே ப்ரஷா!

"இப்போ... அதே தப்பை நீயும் செஞ்சிருக்கியே?" கவலையுடன் கேட்டாள் ஊர்மி!

"இனிமே எதையும் பேசிப் பிரயோஜனமில்லை... ஆனா ஆதாரமில்லாம நான் ஆதவனைக் குற்றம் சாட்டலை ஊர்மி!"

"அதை மத்தவங்க புரிஞ்சிக்கலைன்னாலும் நீ மட்டுமாவது தெரிஞ்சிக்கணும்!" என்றவள் சுகந்தி தன்னிடம் பேசியதையும், அவளை ஆதவன் அணைத்து நின்ற கோலத்தையும் பற்றிக் கூறினாள்.

உடனே கவலையுடன் சுருங்கியது... ஊர்மியின் முகம்!

"சரி! நான் இதுபத்திக் குருவோடப் பேசறேன்... ஆனா எனக்கென்னவோ சுகந்தி தான் இதிலே ஏதோ ப்ளே பண்ணியிருக்கணும்னு தோணுது!"

அவள் யோசனையைக் கூறியபடி ப்ரஷாவை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

திரும்பி நடக்கும்போதுதான் தான் எவ்வளவு தூரம் வந்திருக்கிறோமென்பதே அவளுக்குப் புரிந்தது.

## 36

வீட்டிற்கு வந்தபோது ஹால் ஒருவருமின்றி வெறிச் சோடியிருக்க, அவள் விரும்பிய தனிமையை நாடித் தன் அறைக்குச் சென்றாள் ப்ரஷா!

அன்று மாலையானதும், அவள் கீழே வந்தபோது ராஜாமணி அம்மாள் தான் அவளை அழைத்தார்.

"வாம்மா ப்ரஷா! அவங்க எல்லாரும் காரிலே சுத்திப் பாக்கப் போயிருக்காங்க! நீ தலைவலின்னு படுத்திருக்



கிறதா ஊர்மி சொன்னா! இப்படி உக்காரு... உன் கூடக் கொஞ்சம் பேசணும்!"

அன்புக் குரலில் அவர் ஆணையிட மறுக்க இயலாமல் ஒரு விதத் தவிப்புடன் அருகே அமர்ந்தாள் அவள்.

"தவா வந்து உன்னைப் பத்தி சொன்னப்ப எனக்கு ரொம்ப சந்தோஷம்!"

அவர் கூறியதும் விதிர்த்து நிமிர்ந்தவளை, அவருடைய கருணை சுமந்த விழிகளும் அன்பாய் கசிந்த புன்னகையும் அடக்கின!

"கம்பெனியிலே குழந்தைகளுக்கு ஒரு 'க்ரச்' அமைக்க ஏற்பாடு செஞ்சியாமே! ஒரு அநாதைக் குழந்தையக் கூட குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்து ஆசிரமத்தில் நீ சேர்த்ததா தவா சொன்னப்ப பெருமையா இருந்தது!"

"உனக்கு குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்குமா மோளே?"

கனிவுடன் அவர் வினவ ஆம் என்பது போல் தலையசைத்தாள் அவள்!

"என் பொண்ணு துளசியும் அப்படித்தான்... ரொம்ப இளகிய மனசு... நிறைய உதவி செய்வா. ஒரு தமிழ்ப் பையனை... அதுவும் சாதாரண குடும்பத்துப் பையன்.... இந்த ஊருக்கு வேலைக்கு வந்திருந்த போஸ்ட் மாஸ்டரோட மகனை விரும்பினப்ப, என்னால அதை ஏத்துக்க முடியலைதான்!"

"அவ இங்கே பக்கத்துல இருக்கற பகவதி கோவில்லே கல்யாணத்தையும் முடிச்சிட்டு வந்து நின்னப்ப அவ முகத்தையே பாக்க மறுத்து திருப்பி அனுப்பிட்டேன்."

''அப்புறம் அவ தன் புருஷனோட தமிழ்நாட்டுக்கே போயிட்டா! மனசு தாங்கலை! ஆனாலும் கல்லாக்கிட்டு இருந்தப்ப, ஆதவன் பிறந்த செய்தி வந்தது!

''என்னோட மோளுக்கு பிறந்த முதல் பேரக் குழந்தை என்னை அசைச்சிட்டான்....

''உடனே போய் செய்ய வேண்டிய சீரெல்லாம் செஞ்சி அவளை இங்கே அழைச்சிட்டு வந்தப்ப, மாப்பிள்ளை பிசினஸ் ஆரம்பிச்சிருந்த நேரம்!

''நான் உதவி செய்யறேன்னப்ப ரெண்டு பேருமே மறுத்திட்டாங்க! என்னை அங்கே வரச் சொன்னாங்க!

''எனக்கும் வேற பிள்ளைகள் இல்லை... ஆனா இங்கே ஒரு தம்புராட்டியா வாழ்ந்து பழகியாச்சு!''

''இது என் இடம்... என் புருஷனோட நான் வாழ்ந்த இடம்! இதை விட்டுட்டு வர முடியாதுன்னுட்டேன். இப்ப இது எல்லாத்துக்கும் ஒரே வாரிசு... தவாதான்!

''அவன்தான் அடிக்கடி இங்கே வந்து என்னைப் பாத்துட்டுப் போவான்! துளசியும் மாப்பிள்ளையும் எப்பவாவது வருவாங்க!

''இங்கே என் கூட இருந்து என்னையும் வீட்டையும் தொழிலையும் கவனிச்சிக்கறதெல்லாம் நம்ம உறவுக் காரங்கதான்!''

''இப்ப எனக்கு இருக்கற ஒரே கவலை தவாவைப் பத்தினதுதான்!

''அவன் தான் இதுவரைக்கும் கல்யாணமே வேண் டாம்னு பிடிவாதமா இருந்தான்... ஆனா, உன்னைப் பாத்தப்புறம் தான் மாறி இருக்கான்!



''ஒரு தடவை நானே பொண்ணை செலக்ட் பண் ணிட்டேன்னு சொன்னான். இங்கே வரதுக்கு முன்னாடி போனிலே சொன்னான்...

''கல்யாணம் செஞ்சிக்கன்னு என்னை தொந்தரவு பண்ணுவீங்களே பாட்டி! இந்த தடவை என் வருங்கால மனைவி... உங்க பேத்தியோட தான் வரேன்னான்!

''உடம்பே சிலிர்த்துப் போச்சு! ஆசையாக் காத்திட் டிருந்தா தனியா வந்தான்... உனக்கு அவன் மேல ஏதோ கோபம்... ஆனா இங்கே வந்தவுடனே சரி பண்ணிடலா மின்னு சொன்னான்!

''ஆனா, இன்னும் நீங்க ரெண்டு பேரும் எலியும் பூனையுமா அடிச்சிட்டு நிக்கறதைப் பாத்தா மனசு தாங்கலை மோளே! அதான் உன்னோட பேசினேன்!''

வாஞ்சையுடன் கூறியபடி அவள் முகத்தை வருடி திருஷ்டி கழித்து விட்டு, பெருமிதத்துடன் அவளையே நோக்கினார்.

''நீ எவ்வளவு அழகு மோளே! ஆனா உன் அழகை விட உன்னோட புத்திசாலித்தனமும், மனிதாபிமானமும், உன் தோழி மேல நீ காட்டின அக்கறையும் பாசமும் தான் அவனுக்கு ரொம்ப பிடிச்சிருந்ததா என்கிட்ட தவா சொன்னப்ப, நான் நெகிழ்ந்து போனேன்!''

அவர் முடிக்கும் முன்பே அவள் விழிகள் நிறைந்தன!

''எம்மா உனக்கு அவன் மேல திடீர் கோபம்? அந்தக் காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?'' அவர் பரிவுடன் வினவினார்.

'அவர் பேரனைப் பற்றி... அவன் ஒரு பெண் பித்த னென்று அவரிடமே எப்படிச் சொல்வது?

"வேண்டாம் முத்தச்சி... அதைக் கேட்டா உங்களாலத் தாங்க முடியாது!"

ப்ரஷா குமுறலுடன் வாய் பொத்தி விம்மியபடி எழுந்து வெளியே ஓடி விட்டாள்.



## 37

பின்புறமிருந்த தோட்டத்து சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து அழுது முடித்தவளை, ஜன்னல் வழியே பார்த்திருந்த ராஜாமணித் தம்புராட்டிக்கு வேதனையாய்!

உடனே ஒரு முடிவுடன் பணிப் பெண்ணை அழைத்தாள்.

தன் மனபாரமெல்லாம் கரையும் வரை அழுது தீர்த்தவள், மெல்ல நிமிர்ந்தபோது, எதிரே அஸ்தமன வானம் அவள் முகத்தைப் போலவே இருண்டு சிவந்திருந்தது!

ஏரியிலிருந்து வந்த சில்லென்ற குளிர்க்காற்று, தேகம் முழுவதும் நீவி அவள் மனச் சூட்டைத் தணிக்க முயல, தவிப்புடன் அமர்ந்திருந்தாள் அவள்.

மெல்லிய சிற்றலைகளுடன் ஆதவனின் கிரணங்களால் பொன் வண்ணம் கொண்டு ஒரு நீல நிற வைரமாய் ஒளிர்ந்த ஏரியைப் பார்த்தபோது, பெரும் இதமாய்!



இலக்கின்றி அதையே வெறித்தபடி அமர்ந்திருந்த போதுதான் "ஷாம்மா..." என்ற குரலுடன் தாவி வந்து பின்புறம் அணைத்துக் கொண்டாள் சரயு!

வியப்புடன் திரும்பியவள்,

"ஹாய் குட்டிம்மா! நீ போகலையாடா அம்மாவோட?" என்றபடித் தன்னுள் அவளை ஏந்திக் கொண்டாள்.

"மோள் உறங்கியிருந்தது.... அதான் இவிடே விட்டுப் போயி!" பணிப்பெண் தான் விளக்கமளித்தாள்.

"சரி! நான் பாத்துக்கறேன்... நீங்க போங்க" சிறு முறுவலுடன் கூறியவளுக்கு, பிறகு பொழுது போனதே தெரியவில்லை.

தோட்டத்து விளக்குகள் ஜெகஜ்ஜோதியாய் ஒளிர்ந்து கொண்டிருக்க, சரயுவுடன் ஓடிப் பிடித்து அவள் விளையாடும் போதுதான், முன்புறம் கார் வரும் சப்தம் கேட்டது!

சிறிது நேரத்தில் குருவும், ஊர்மியும் அங்கு வந்தனர்.

குரு குழந்தையைத் தூக்கிச் செல்ல, ஊர்மி அவளருகே வந்தாள்.

"ப்ரஷா... இப்படி வந்து உக்காரு! நீ சொன்ன எல்லா விஷயத்தையும் ஆதவனோடப் பேசியாச்சு... அவருக்கு ரொம்பக் கோபம் வந்துடிச்சி!

"தன்னை நம்பாம, அந்த சுகந்தி சொன்னதை நீ நம்பிட்டேன்னு தெரிஞ்சதும் கொதிச்சிப் போயிட்டாரு!

"ஆனா இதுக்கு எந்த விளக்கமும் அவர் சொல்லலை! என்னை நம்பாதவளுக்கு நான் விளக்கம் அளிக்கத் தேவையில்லை...

"ஆனா, சுகந்தி சொன்னது பொய் அப்படின்னு மட்டும் சொல்லிட்டுக் கோபமாக் கிளம்பிட்டாரு!"

மெல்லிய குரலில் அவள் முடிக்க, "எனக்கும் எந்த விளக்கமும் தேவையில்லை ஊர்மி! என்னை இப்படியே நிம்மதியா விட்டாப் போதும்!"

சிறு விம்மலுடன் எழுந்து விரைந்து விட்டாள் அவள்.

விம்பும் பிடிவாதமுமாக தங்களின் பேச்சை ஏற்க மறுப்பவளை, சோர்வுடன் தொடர்ந்தன... ஊர்மியின் விழிகள்!

பிறகு வேகமாக அவளருகில் சென்று ஆறுதல் படுத்தியவளை அணைத்து அழ ஆரம்பித்தாள் ப்ரஷா!

"நீதானே... ப்ரஷா சொல்லுவே, வாழ்க்கையில நம் பிக்கை வேணும் அப்படின்னு... இப்போ நீயே மத்தவங் களை நம்பலைன்னா எப்படி?" கவலையுடன் வினவி னாள் ஊர்மி!

அப்போது அவள் கூறிய பதில் அவளைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்துவதாய்!

"நான் ஆதவனை விரும்பினது உண்மை ஊர்மி! ஆனா, நான் சின்ன வயசுல பட்ட ஒரு அனுபவம்தான், என்னை எதையுமே நம்ப விடாது செய்யுது!"

ஜீவனற்ற விழிகளுடன் அந்த நிகழ்வைக் கூற ஆரம் பித்தாள்.

"ஒரு நாள்... நான் சித்தப்பா வீட்டுக்கு வந்த புதுசிலே சித்தியும் அவங்க பையனும் ஒரு சாவுக்காக ஊருக்குப் போயிருந்தாங்க... அப்பதான்!"

அந்த மர்ம முடிச்சு அவிழ்ந்தபோது ஊர்மி உடைந்து சிதறி விட்டாள்.

"அன்னிக்கு ராத்திரி குடிச்சிட்டு வீட்டுக்கு வந்த என் சித்தப்பாவே போதையில என்னோட தவறா நடக்க நினைச்சி கையைப் பிடிச்சி இழுத்திட்டாரு!"



"உடனே பயந்து போய் தப்பிச்சி ஓடிப் போய் பக்கத்து வீட்டிலே இருந்துட்டேன்... சித்தி ஊரிலிருந்து வந்தப்புறம் விஷயம் தெரிஞ்சு என்னை ஹாஸ்டல்லே சேத்தாங்க!

"என்னால எப்படி ஆண்களை நம்ப முடியும் ஊர்மி" உடைந்து சிதறினாள்.

ஊர்மிளாவால் என்ன முயன்றும் அவளைத் தேற்ற முடியவில்லை!

* * *

அன்றிரவு! சரியாக சாப்பிடாததாலும், உணர்வுகள் ஓய்ந்திருந்ததாலும், நித்திரையின் வரவின்றிப் புரண்டு கொண்டே இருந்தாள் ப்ரஷா!

பல வருடங்களாக உள்ளே புதைக்கப்பட்டு தூரு வேறியிருந்த ஒரு அவல நிகழ்வு, தூசி தட்டப்பட்டு தோழியிடம் வெளிக்காட்டப்பட்ட தவிப்பு அவளிடம்!

அன்று... அதற்குப் பிறகு, காலையில் போதை தெளிந்து தன் தவறை உணர்ந்து தனுஷ்கோடி என்னதான் அழுது அவள் காலில் விழுந்து மன்னிப்பை யாசித்தாலும் அந்த நிமிடங்களை... அவர் போதையில் தனை மறந்த அந்த அசிங்கத் தருணத்தை அவளால் மறக்கவே முடிந்த தில்லை.

வெகு நாட்கள் அந்த அதிர்ச்சியின் உறைவிடமாய் இருந்தவள், படிப்பிலேயே தன்னைக் கரைத்து அதை மறக்க முயற்சித்து வெற்றியும் கண்டாள்.

ஆண்களிடம் அவள் ஆழ் மனது கொண்டிருந்த வெறுப்பை அழித்ததே, அவனுடைய காதலும், மென்மை யான அணுகு முறையும்தான். ஆனால் அவனே தவறான வன் என்று அறிந்தபோது, மறைந்திருந்த துரோக நினைவுகள் விசுவரூபமெடுத்திருந்தன.

# 38

திடீரென்று ஏதோ ஒரு ஒரு சப்தம் ஈர்க்கவே சோர்வுடன் திரும்பினால், பக்கவாட்டுக் கதவைத் திறந்து இரவு உடையில் ஒரு கம்பீரமான போர் வீரனைப் போல் உள்ளே வந்து கொண்டிருந்தான் ஆதவன்!

ஆனால் இரவு விளக்கொளியில் முகம் மட்டும் வார்க்கப்பட்ட இரும்பின் கடினத்துடன்!

இவன் எப்படித் தன் அறைக்குள்ளே... யோசிக்கும் போதே தவிப்புடன் உதடுகள் உலர்ந்து தேகம் நடுங்கியது.

வேகமாக எழுந்து அமர்ந்தவளுக்கு, தான் இரவு உடையில் இருப்பது அப்போதுதான் நினைவு வர, பதைப்புடன் போர்வையை இழுத்து கழுத்து வரை மூடிக் கொண்டாள்.

ஒருவித இகழ்ச்சிச் சிரிப்புடன் அருகில் வந்தவன், "என்ன சொன்னே? நான் ஒரு வுமனைசர்னுதானே! அது உண்மைன்னு இப்பவே என்னால நிரூபிக்க முடியும்!

"இங்கே... இந்த நிமிஷம் என்னை யாராலயும் கட்டுப் படுத்த முடியாது! அது உனக்கே தெரியும்! இப்ப நான் உன்னை என்ன வேணா செய்யலாம்!"

அவன் ஆழ்ந்த குரலில் நிறுத்தியபோது புலன்கள் பதறித் துடிக்க மெதுவாக நகர்ந்து பின்புறம் சாய்ந்து



கொண்டவளை, பெரும் பயமும் குழப்பமும் ஆக்ரமித்தன!

"என்ன... பயமா? அதுவும் உனக்கா? ஆச்சரியமா இருக்கு! ஹூம்... தகுதியில்லாத ஒருத்தியை விரும்பினதுக்காக... என்னை நம்பாத ஒருத்தியை வாழ்நாள் முழுக்க துணையா ஏத்துக்க நினைச்ச மடத்தனத்துக்காக... நான்தான் இப்ப என்னையே வெறுக்கறேன்!"

"நீ சொன்ன மாதிரி நான் சுகந்தியை நாசம் செஞ்சவன். வுமனைசர்... செக்ஸ் மேனியாக்குன்னா இந்நேரம் நான் இப்படித் தள்ளி நின்னு உன்னோடப் பேசிட்டிருந்திருக்க மாட்டேன்!

"எல்லாம் முடிஞ்சிருக்கும். நான் நேசிச்சது உன் உடம்பைவிட மனசைத்தான்!

"ஆனா என்னைப் பத்தி இவ்வளவு கேவலமாக் கணிச்சே பாரு... அதை மட்டும் என்னால மன்னிக்கவே முடியாது... ஐ ஹேட் யூ!

"நீ என்னைப் புரிஞ்சி வரும்போது காலம் கடந்திருக்கும்... நீ விரும்பிக் கேக்கற மன்னிப்பும், காதலும் அப்போ கிடைக்காமலே போகலாம்.

"கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்..." அப்படின்ற உண்மை உனக்குப் புரிய வரும்போது...

"ஹூம்... எல்லாமே விழலுக்கு இறைச்ச நீரா வீணாகியிருக்கும். உன் வாழ்க்கையும்தான்!

அழுத்தமான குரலில் கூறிவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்று படாரென்று கதவை மூடினான் ஆதவன்!

அவனுடைய முகமும், கண்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசிய அந்த உறுதியும் நேர்மையும் முகத்தி லறைந்தன.

அந்த நிமிஷம் அவளுக்குப் புரிவதாய்...

'இவன் நாம் நினைத்தது போல் தவறானவன் இல்லை. நிச்சயமாக இவன் அந்தத் தவறை செய்திருக்க மாட்டான்.

'சுகந்திதான் தன் மேலிருந்த பொறாமையில் பொய் கூறிக் கதை திரித்திருக்க வேண்டும்!' உள் உணர்வுகள் உறுதி செய்தன!

'ஆனால், அன்று தன் அலுவலக அறையில் அவளை அணைத்து நின்றானே...' சிறு குரல் மனதின் ஓரமாய்க் கேள்வி எழுப்பியது!

ஆண்கள் அனைவரும் சந்தர்ப்ப வாதிகளே... தீனமாய் ஒலித்தது எச்சரிக்கை!

## 39

அன்றிரவு முழுவதும் அழுது மடிந்தவளுக்கு அது ஒரு முடியா இரவாய்... துயர மிகு தருணமாய்!

விடியலில் மனம் தெளிந்திருக்க யோசிக்க ஆரம்பித் தாள்!

''கடவுளே! நான் தவறு செய்து விட்டேனோ? ஒரு கணம் கூட, யோசிக்காமல் நம்பிக்கையைக் கொன்று



அந்த நல்லவனைக் காமுகனாக குற்றம் சாட்டி விட் டேனோ! என் அனுபவம், உடனே சுகந்தியை நம்பத் தோன்றியதா!

'அவன் கூறியது போல் மோசமானவனாக இருந்திருந் தால், சில மணித் துளிகளுக்கு முன்பாக என் கற்பு பறிபோயிருக்குமே!'

பலப்பல எண்ணித் தவித்த மனதிற்கு இதமாய் அவன் வார்த்தைகள்!

பார்வை... மூடிய கதவையே வருட, அவனுடைய உள்ளக் கதவையும் இதே போல். இறுக்கமாக அவன் மூடிக் கொண்டு விட்டானோ... சஞ்சலமும் பயமும் அவளை வெகுவாய் ஆட்டுவித்தன!

தன்னை நம்பவில்லையே என்ற வெறுப்பும் கோபமும் அவன் காதலையே அழித்திருக்குமோ...

'யோசிக்காமல் அவன் மீது தவறான ஒரு குற்றம் சாட்டி அவனை வதைத்து விட்டேனே...'

உடலும் உள்ளமும் பதறித் துடித்தன... இதயம் ரத்தக் கண்ணீர் விட்டு கதற ஆரம்பித்தது!

'இப்போது என்ன செய்வது? தான் அவனை நம்பு வதை... இனி எந்தக் காலமும் அவனை சந்தேகப்பட மாட்டேன் என்பதை எப்படித் தெரிவிப்பது?'

'தன்னை அவன் புரிந்து கொள்வானா?' சிறு தளிராய் நடுங்கிய மனதை அடக்கியவள், மெதுவாக ஒரு முடி வுக்கு வந்தாள்.

அதன்படி, மறுநாள் காலையிலேயே தயாராகி ஆதவ னிடம் பேசக் கிளம்பியபோது செல் அழைத்தது.

அவள் எடுத்தவுடனே "எங்கே ப்ரஷா திடீர்னு லீவு போட்டுட்டுக் காணாமப் போயிட்டீங்க!

"பாஸூம் வேற ஊரிலே இல்லை! ஊர்மியும் குருவும் கூட ஹனிமூன் கிளம்பிட்டாங்க!"

அவள் முடிப்பதற்குள் "அப்ப... சுகந்தி" அவள் குரல் கூர்மையுடன் இடைமிட்டது!

"அவளுக்கென்ன? எப்பவும் போல மேக்கப்போட பாதி ப்ராஜெக்ட் வேலையை என் மேலத் திணிச்சிட்டு யாரோடவோ கத்திட்டிருந்தா! அவதான் உன்னோடப் பேச ட்ரை பண்ணிட்டிருந்தா?

"அப்போ அவ ரிசைன் பண்ணலையா?" தவிப்புடன் கேட்டாள் ப்ரஷா.

"இல்லியே... நீ லீவு போட்டதிலிருந்து அவளும் லீவுலதான் இருந்தா! இன்னிக்குத்தான் வந்தா... உன் கூட ஏதோ அவசரமாய் பேசணும்னா... அவளே ஒரு குட் நியூஸ் சொல்வா... இதோ பேசு!

சுகந்தி லைனில் வரும் வரை இதயமே தொண்டைக்கு வந்து துடிப்பது போல் வலித்தது.

அவள் "ஹலோ ப்ரஷா..." என்றதும்

"சுகந்தி... நீ சொன்னது பொய்தானே? ஏன் இப்படி செஞ்சே?" தவிப்புடன் கேட்டாள்.

அவள் குரல் சுகந்தியை உலுக்கி விட,

"சாரி ப்ரஷா! நான் பாஸை விரும்பினது உண்மை! ஆனா அவர் என்னை விரும்பலை! அதுக்குப் போட்டியா நீ வந்தப்ப, உன் மேல அவர் கவனம் பதிஞ்சப்ப எனக்கு ரொம்பப் பொறாமையா இருந்தது.



"அப்பதான் ஒரு முடிவெடுத்தேன்! எப்படியாவது ஏதாவது செஞ்சி உன்னை அவர்கிட்ட இருந்து பிரிக்கணும்னுதான் அன்னிக்கு... நான் அவரால கர்ப்பமா இருக்கறதா... எந்தப் பொண்ணும் சொல்லக் கூடாத ஒரு பொய்யைச் சொன்னேன்!

"உடனே பாஸையும் பாத்துப் பேசினேன்... முதல்லே என் மேல அவருக்குப் பரிதாபம் வரவழைக்கறதுக்காக, என்னை ஒருத்தன் தொடர்ந்து செக்ஷுவல் ஹராஸ்மெண்ட் செய்யறதாப் பொய் சொன்னேன்!

"அவரும் பரிதாபப்பட்டாரு...!

"அன்னிக்கு என் காதலை நான் பாஸ் கிட்டே சொல்ல அவர் மறுத்தாரு... அட்வைஸ் பண்ணினாரு... உன்னை விரும்பறதா சொன்னாரு. தன் மனசுல வேற எந்தப் பொண்ணுக்கும் இடமில்லைன்னாரு.

"என்னால அதை ஜீரணிக்கவே முடியலை! உடனே கோபமா வந்து என் வேலையை ரிசைன் பண்ணிடலாமின்னு முடிவு செஞ்சு உன்னோடப் பேசிட்டுக் கிளம்பிட்டேன்... ஆனா மனசு முழுக்க உறுத்துச்சி!

"மறுநாள் முழுக்க யோசிச்சேன்... அடுத்த நாள் திடீர்னு என்னைப் பெண் பார்க்க வந்தாங்க... அதான் ஆபீசுக்கு வரலை!"

"அவங்களுக்கு என்னை ரொம்பப் பிடிச்சிடுச்சி! மாப்பிள்ளையும் நல்ல வசதி... மனசு உறுத்தி உன்னைத் தேடி வந்தா நீ வரலை...!

"ஊர்மியும் குருவும் தவிச்சிட்டிருந்தாங்க... பாஸூம் கவலையாத் தெரிஞ்சாரு... உண்மையைச் சொல்ல எனக்குத் தைரியமில்லை!

''கோபத்துல எங்கேயோ போயிட்டியோன்னு உனக்கு செல்லிலே ட்ரை பண்ணினேன்! செல் ஸ்விட்ச் ஆஃப் அப்படின்னு வந்தது! ரெண்டு நாளா ட்ரை பண்ணிட்டு ஓய்ஞ்சு போய் விட்டுட்டேன்!''

''என் தப்பை வெளியே சொல்லவும் பயம்... ஒரு வாரமா என் மனசு தவிச்ச தவிப்பு!

''எப்படியும் நீ திரும்பி வருவே... அப்போ உண்மையச் சொல்லலாம்னு தினமும் உன் ஃப்ளாட்டுக்குப் போனேன். அது பூட்டியிருந்தது!''

''இன்னிக்கு தான் ஒரு வாரம் கழிச்சி வேலைக்கு வந்தேன்.

''இப்பதான் பாஸ்கிட்டருந்து என்னை வேலையிலிருந்து டெர்மினேட் பண்ணச் சொல்லி பேக்ஸ் வந்திருக்கறதா 'ஹெச் ஆரிலே' கூப்பிட்டுச் சொன்னாங்க!''

''என் வேலை இப்ப ரொம்ப முக்கியம்... மாப்பிள்ளை வீட்டுல கட்டாயம் வேலைக்குப் போகணும்னுட்டாங்க. அதான் பாத்துப் பேசிட்டு வரேன்...''

''உசேனுக்குக் கூட எதுவும் தெரியாது... இந்த ஒரு வாரத்துல எனக்கு எங்க வீட்டிலே கல்யாணம் முடிவு செஞ்சதெல்லாம் தெரியாது.

''இப்பதான் அவன்கிட்ட சொன்னேன்.

''மாப்பிள்ளையும் இதே ஃபீல்டுதான்! என் வேலை ஒரு முக்கியமான காரணம்... இந்தக் கல்யாணம் முடிவாகறதுக்கு!''

''நீ வந்தப்புறம் அங்கே அவங்க வீட்டில என்னைப் பத்தி தப்பா சொல்லி கலைச்சிடுவியோன்னும் நான்



பயந்தேன்! அதனால வேற, உனக்கு போன் பண்ணி விபரம் சொல்ல பயமாருந்தது!

உடனே ப்ரஷா சிற்றத்துடன் வினவினாள்.

''ஹும்..: எனக்கு அது மாதிரியெல்லாம் செய்யத் தெரியாது. ஏன் அப்படி நினைச்சே!''

''ஏன்னா... அந்த மாப்பிள்ளை உனக்கு சொந்தமாம்! உன் கூடப் படிச்சவராமே! உன் பேர் சொல்லிக் கேட்டாரு! நீயும் எங்க கம்பெனியில தான் வேலை செய்யறேன்னு சொன்னாரு!''

''அவர் பேரு..?''

மெதுவாகக் கேட்டவளுக்கு, சேகர் என்றபோதுதான் புரிந்தது...

''ம்.. என் சித்தப்பாவோட கோ பிரதர் பையன்... ரொம்ப நல்லவரு! ஹும் அவருக்காவது உண்மையாயிரு!'' சிறு கசப்புடன் கூறினாள்.

''சாரி ப்ரஷா! என்னை வேலையிலிருந்து நீக்க வேண்டாம்னு நீதான் பாஸ்கிட்ட சொல்லணும்!''

அவள் தன் தவறை உணர்ந்து அழுவதும், இடையில் உசேன் அவளைத் திட்டுவதும் கேட்டது!

உடனே செல்லை அணைத்தவள், கீழே சென்றபோது மனம் நிர்மலமாகியிருந்தது.

ஆதவனிடம் உண்மையைக் கூறி அவன் மார்பில் சரணடைய வேண்டுமென நெஞ்சம் பரபரக்கத் தேடினால் எங்கும் அவனைக் காணவில்லை!



# 40

நேரே ராஜாமணி அம்மாளிடம் சென்றவள், ''முத்தச்சி... நான் ஆதவனோடப் பேசணும்... அவர் எங்கே?'' கலக்கத்துடன் வினவினாள்.

''ம்... உன் கோபமெல்லாம் கொறைஞ்சுதா... என் பொண்ணு மோளே! அவன் இப்பதான் ஏரிக்கரையோரமா நடந்து போறதை நான் பாத்தேன்!

''காலையிலிருந்து ரொம்ப டல்லா இருந்தான். அப்படி மனசு சரியில்லாம இருக்கறப்ப அவன் போற ஒரே இடம் பக்கத்துல இருக்கற ஒரு அருவிக்கரை தான்.

''சின்ன வயசிலருந்தே அங்கே போனா, தன் மனசு லேசாயிடறதா சொல்லுவான்! இரு... நம்ம டிரைவரை விட்டு உன்னை அங்கே கொண்டு போய் விடச் சொல்றேன்!''

''மனசு விட்டுப் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரணும்... உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா?

''ஆதவன்னா சூரியன்... சூரியனோட மனைவி பேரு தான் ப்ரத்யுஷா! என் பேரனுக்குன்னே பிறந்தவ நீன்னு உன்னைப் பாத்தவுடனே புரிஞ்சுது! எனக்குள்ளே... நெற்றியிலே பூவுள்ள ஸ்வர்ண சிறகுள்ள அழகான ஒரு பட்சி சொல்லுச்சி!''

கேலியும் உற்சாகமுமாக அவர் முடிக்க, உடனே அவருடைய காலில் விழுந்து பணிந்தாள் ப்ரஷா!



''என்னை ஆசீர்வாதம் பண்ணி அனுப்புங்க!.. உங்க பேரன் கோபம் மாறணும்னு! ஊர்மி எங்கே முத்தச்சி?'' என்று வினவினாள்.

''டிபன் சாப்பிட்டப்புறம் மேலே ரூமுக்குத்தான் போனாங்கன்னு நினைக்கிறேன்! சரயு இங்கே கீழேதான் விளையாடிட்டிருந்தா!'' என்றார்.

* * *

பிறகு அவரிடம் விடைபெற்று டிரைவருடன் அந்த அருவிக் கரைக்குச் சென்றபோது, ''ஹோ''வென்ற சப்தத்துடன் வருபவர்களை உற்சாகமாய் அழைத்தபடி தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது அந்த வெண் பட்டு அருவி!

அதன் எதிரே இருந்த பாறையிலின் மேல் அசையாமல் நின்று கைகளைக் கட்டியபடி அந்த அருவியின் துள் ளலையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஆதவன்!

டிரைவரிடம் சைகை செய்து அனுப்பி விட்டு, மெல்லப் படிகளில் ஏறியவளுக்கு இதயம் தடதடத்தது!

'என் மனம் கவர்ந்த ஆதவனே! ஒரு முட்டாள் பெண்ணுடைய பேச்சைக் கேட்டு என் அறிவை இழந்து உன்னை வதைத்து நோகடித்த உன் ப்ரஷா வந்திருக்கிறேன்...!'

'மௌனப் பெட்டகமாய் மூடியிருந்த என் மனதை உன் முற்றை விழிப் பார்வையால் திறந்தவனே...

'இன்று.. உன்னைப் புரிந்து உன் காதலை யாசகம் கேட்க வந்திருக்கிறேன். தருவாயா?''

இதயம் அவனுடன் ஏக்கமாய் பேசியது!

பசுமை சூழ்ந்த அந்தப் பிராந்தியத்தில், பெரிய தேவ தாரு மரங்களும் பெயர் தெரியாப் பல விருட்சங்களும்

நிறைந்து மெல்லிய இருளை நிழலாய்ப் பிரசவித்துக் கொண்டிருந்தன!

குளிர்ந்த அருவிச் சாரல் தேகத்தைக் குளிரச் செய்ய, மெதுவாக தைரியத்தை வரவழைத்தபடி அவனருகே சென்றாள்.

ஏதோ தீவிர யோசனையில் புருவங்கள் நெறிந்திருக்க, அருவியையே வெறித்துக் கொண்டிருந்தவன், அவளை கவனிக்கவில்லை!

அவன் உருவை மனதிற்குள் ரசித்தபடி அவன் பின்னே சென்று தன் இரு கரங்களையும் அவன் இடுப்பைச் சுற்றி மென்மையாய் அணைத்து "ஐயம் சாரி ஆதவ்!" என்றாள் மென் குரலில்!

அவன் உடல் ஃஸ்கிரும்பாய் இறுகியிருக்க அவனிடம் எந்த அசைவுமில்லை!

அவனுடைய புறக்கணிப்பும் பாராமுகமும் அவளுள் பெரும் பயத்தை விதைத்தன.

"நான் செஞ்சது பெரிய தப்புதான்! சுகந்தி சொன்ன தோட சேர்த்து அவளை நீங்க அணைச்சிட்டிருந்ததைப் பாத்தவுடனே என் உயிர் போன மாதிரி இருந்தது.

"என் சின்ன வயசுல நடந்த ஒரு விஷயம்... என் சித்தப்பாவே என்கிட்ட தப்பா நடக்க முயல அதனால வேற எனக்கு நம்பிக்கையே போயிடுச்சு!"

சட்டென்று ஒரு இளகிய தன்மை வந்தது அவனிடம்... ஆனாலும் எந்த பதிலும் வராமல் போக, அவளே தொடர்ந் தாள்.

"அவ சொன்னது உண்மைதான்னு மனசு உருப்போட ஆரம்பிச்சது! தான் கர்ப்பமா இருக்கறதா அதுவும் உங்களாலதான்னு அவ சொன்னப்ப... எந்தப் பொண்ணும் தன் கற்பு விஷயத்துல பொய் சொல்ல மாட்டான்னு உறுதியா நினைச்சேன்!



"நானும் உங்க வீட்டுக்கு வந்ததா அவ சொன்னா... சுகன்யா... அவங்களும் உங்களோட கேர்ள் ஃப்ரெண்ட் டுன்னு.. நீங்க ஒரு வுமனைசர்னு!"

அவள் பேசும்போதே அவன் உடலில் மீண்டும் நாணேற்றிய வில்லின் விரைப்பு வந்தது!

"சரி... அவதான் சொன்னா... அப்படியும் உங்களை விரும்பறேன்னவுடனே அவ மேல பரிதாபம்தான் வந்தது!

"என்னால அதுக்கப்புறம் யோசிக்கவே முடியலை! செத்துடலாமான்னு இருந்தது.

"உங்களை இன்னொரு பெண்ணோட கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட முடியலை!

மறு நொடியே அவன் தேகம் விரைப்புற்று நிமிர, அப்படியே அவளைப் பிடித்து சுழற்றி இழுத்து முன்புறம் தன் கைகளில் ஏந்தியவன், அவளை முரட்டுத் தனமாக முத்தமிட ஆரம்பித்தான்!

அவனுடைய உண்மையான அணைப்பில் அவ ளுடைய கால் கொலுசுகளின் தவிப்போசை... அந்த அருவியின் இரைச்சலில் கரைந்து மறைந்தே போனது!

"ப்ரஷா..." ஆழமாய் உயிர்வரை தீண்டிய அழைப்பில் சிலிர்த்து துவண்ட ப்ரத்யுஷாவின் தேகம் சுகமாய் சிலிர்க்க, ஒவ்வொரு செல்லும் சப்தஸ்வரமாய் அதிர ஆரம்பித்தது.

அப்படியே அவளை அந்தப் பாறை மேல் சரித்தவ னுடைய விரல்கள் வீணைத் தந்திகளாய் அவள் உட லெங்கும் மீட்டின!

"ப்ளீஸ்... ஆதவ்! இது பப்ளிக் ப்ளேஸ்... வீட்டுக்குப் போயிடலாம்!" செல்லமாகச் சிணுங்கினாள் ப்ரஷா!

சட்டென்று நிமிர்ந்தவன்,

"வீட்டுக்குப் போயி..." குறும்புடன் இழுத்தான்.

அவன் கேள்வியின் பொருளுணர்ந்து முகம் மூடி "ச்சீ..." என்றவளுடைய தேகமே சிவக்க... அவளே ஒரு வெட்கத்தின் முகவரியாய்!

"என்ன சீ... என்னை இப்படித் தவிக்க விட்டுட்டு இத்தனை நாளா ஆட்டமா போடறே?"

சீண்டலுடன் கோபித்தபடி அவளிடம் குனிந்தான்.

"ப்ளீஸ்... இங்கே வேண்டாமே!"

அவள் முகம் திருப்பிக் கூறியதும்,

"பின்னே எங்கே வேணும்... அந்த அழகு உதட்டு லேயா?" கிறக்கத்துடன் வந்தது அவன் குரல்!

"போங்க.."

செல்லமாக முனகிவிட்டு எழுந்து தள்ளி அமர்ந்தாள் அவள்.

"ஏய்... அப்புறம் போயிடுவேன்! திரும்பி வரவே மாட்டேன்!"

வேண்டுமென்றே அவன் சீண்ட, "ம் போங்க... அப் புறம் நீங்க திரும்பி வந்தாலும் நான் இருக்க மாட்டேன். இதிலே குதிச்சிடுவேன்!"

எதிரேயிருந்த ஆழ்ந்த பள்ளத்தாக்கை நோக்கிவிட்டு முகம்மூடி விசும்ப ஆரம்பித்தாள் அவள்!

"ஏய்..." தாங்க முடியாத அலைப்புறுதலுடன் அவளை ஏந்தி அவன் இறுக அணைத்துக் கொள்ள, நேசமெனும் நெய்யை விட்டு நெஞ்சத்தில் அவள் ஏற்றிய தீபம் பிரகாசமாய் ஒளிர ஆரம்பிப்பதாய்!

கண்ணீரும், காதலும் சேர்ந்து பூம்பனி ஒரு புறமும்... பூகம்பம் ஒரு புறமுமாய் அவள் கிறங்கிய விழிகளில் தெரிய... மோக மந்திரமாய் காதலை உச்சரித்த மனது புதிதாக சிறகு முளைத்த கிளியாய் சடசடத்தது!



# 41

"கூ... குக்கூ..." எங்கிருந்தோ சப்தமாய் ஒலித்த அந்த ஒற்றைக் குயிலோசை இருவரையும் தவிப்புடன் வேக மாக விலகச் செய்வதாய்!

மன்மதச் சிலையாய் எதிரில் நின்றிருந்தவளையே அவன் விழிகள் சிற்பியின் உளியாய் செதுக்கின...!

அவன் பார்வையில் நாணத்தால் ஒரு செவ்வாடை சூடியது அந்தப் பெண்மை!

உடனே தன் கைகளில் ஆதவன் அவளை ஏந்திய போது ப்ரஷா தவிப்புடன் நிமிர்ந்தாள்.

"என் பதினைஞ்சாவது வயசில என் சித்தப்பாவே குடி போதையில் என் கையைப் பிடிச்சி இழுத்து என்கிட்டத் தவறா நடக்க முயற்சி செஞ்சாரு ஆதவ்!

"நல்லவேளை அவர்கிட்டருந்து தப்பிச்சி பக்கத்து வீட் டுக்கு அடைக்கலம் புகுந்துட்டேன்! என் கற்பு காப்பாத்தப் பட்டுச்சி! அதனாலதான் கராத்தே கூட கத்துக்கிட்டேன்!

"அது என் மனசுல ரொம்ப நாள் ஆறாக் காயமா வடுவா இருந்தது! உங்க காதல்... அந்த அன்பான அணுகு முறைதான் அதை மயிலிறகா வருடி மாத்துச்சி!

"ஆனா சுகந்தி உங்களைப் பத்தி சொன்னப்ப எல்லா ஆண்களுமே இப்படித்தானான்னு ஒரு விஷ வித்து விழுந்து விசுவரூபமாயிடுச்சி!"

''அதான், என்னால என்னை மாத்திக்கவே முடியல... என் சின்ன வயசுல நடந்த அந்த சம்பவத்துக்காக... என்னை?''

உடனே அவளுடைய உதட்டை மென்மையாக மூடினான் அவன்!

''இனிமே அதைப் பத்தியே நினைக்கக் கூடாது...!'' என்றவன் பேசும்போதே விலகிச் சென்றிருந்தவளை அழைத்தான்.

''இங்கே வா! உனக்கு ஒரு இடம் காட்டறேன்'' என்ற போது ஓடிவந்து அவன் தோளில் சரணடைந்தாள் அவள்.

அவளை அணைத்தபடி அருகிலிருந்த பாறைக் குகைக்குள் அழைத்துச் சென்றான் அவன்!

மேலே அருவிச் சாரல் குளிர்ச்சியாய் சொட்ட, அந்த இடமே மென்மையான இருள் செறிந்த குளிர்ச்சியுடன் பேரழகாய்!

''இங்கேதான் என் மனசு சரியில்லாதப்பல்லாம் தனிமையில் ஏகாந்தமா வந்து நான் உக்காந்திருப்பேன்... மனசு லேசாயிடும்!''

உற்சாகக் குரலில் அவள் கூற ''ஓ! இந்த ரிஷியோட தபோவனம் இதுதானா?'' குறும்புடன் உதட்டை சுழித்த படிக் கேட்டாள் அவள்!

''ம்! அதைத்தான் நீ கலைச்சிட்டியே... இனிமே எங்கே தவமெல்லாம்? சரண்டர் தான்!''

என்றபடி அருகிலிருந்த பாறையில் அவளை அமர வைத்துத் தானும் அமர்ந்தான்.

''உன்னைத் தான் நான் முதன் முதலா நேசிச்சேன்னு இப்ப சொன்னா நீ நம்புவே இல்லை?''



அவன் கேட்டதும் ''ப்ளீஸ்'' என்றபடி மெல்லிய விரல்களாய் அவன் உதடுகளைப் பொத்தியவள், அவன் தோளில் உரிமையுடன் சாய்ந்து கொண்டாள்.

''நீயும் என்னை விரும்பறேன்றதைப் புரிஞ்சுக்கிட்டப்ப ரொம்ப சந்தோஷமா இருந்தது ப்ரஷா... என் வாழ்வு உன்னோடுதான்னு நிம்மதியா இருந்தேன்!

''ஆனா, நீ என்னை குற்றம் சாட்டிப் பிரிஞ்சி போனப்ப, அந்தக் காதல் காயம் எனக்குள்ளே ஆழமா பரவுச்சி!

''நாம வேற வேற பாதையில போகப் போறோமான்னு நினைச்சாலே என் மனசுக்குள்ளே தீராத ஒரு வலி... நீ திரும்பி வந்து பழைய மாதிரி என் கூடப் பேசமாட்டியா... என்னைச் சேர மாட்டியான்னு ஒரு ஏக்கம் கலந்த எதிர்பார்ப்போட நாகர்கோவில் வந்தேன்.

''ஆனா அங்கேதான் நீ என்னை வெறுக்கறதா சொன்னே! அப்படியே உன்னை சிறை எடுத்துட்டுப் போயிட லாமான்னு துடிச்சேன்... என் உயிர்மூச்சா நீயிருக்க, மூச்சுக் காத்துக்கு ஏங்கித் தவிச்சேன்!

''என்னை ஒரு வுமனைசர்னு நீ கணிச்சப்ப, என் மனசைக் கொள்ளை கொண்ட ஒரு பெண்ணே என் மனசை, என் உணர்வுகளை... என்னைக் கொன்று போட்ட மாதிரி உணர்ந்தேன்.''

''அந்தக் கோபத்துல உன்னை மறக்க நினைச்சேன். முடியலை! நெருப்பா தகிச்சது நெஞ்சம்! எத்தனை பெண்களை என் வாழ்நாளிலே கடந்து வந்திருப்பேன். ஆனா, என் மனசு இப்படித் துடிச்சதில்லை.

''அப்பதான் குரு, சுகந்தியைப் பத்தி சொன்னான்! நீ என்னை எவ்வளவு மட்டமா கேவலமா நினைச்சிருக் கேன்னு கேட்டப்ப இந்த உலகத்தையே அழிச்சிடணும் போல ஒரு மூர்க்கமான கோபம் வந்தது!''

அவன் முடிப்பதற்குள் ''சாரி ஆதவ்... கோடி... லட்சம் சாரி'' என்றபடி அவன் கன்னத்தில் மிருதுவாக முத்த மிட்டாள் அவள்.

அப்படியே அவளை இழுத்து அணைத்துத் தன்னுடன் மேலும் சேர்த்து இறுக்கிக் கொண்டான் அவன்.

## 42

சில மணித் துளிகளுக்குப் பிறகு மெல்ல தொடர்ந்தான்.

''அன்னிக்குக் கூட சுகந்தி என்னை திடீர்னு கட்டிப் புடிச்சி தன்னை ஒருத்தன் தொடர்ந்து செக்ஷுவல் ஹாராஸ்மெண்ட் செய்யறதா சொல்லி அழுதா... நான் சமாதானப்படுத்தினேன்!

''அதை நீ பாத்தது எனக்குத் தெரியாது... ஆனா கடைசியில அவ என்னை விரும்பறதா சொன்னப்ப நான் உடனே மறுத்தேன்... உன்னை விரும்பறதா சொன்னேன்! அழுதிட்டே போயிட்டா!

''ஆனா அவ சொன்னது எல்லாமே பொய்யின்னு இப்பப் புரியுது! என்கிட்ட அப்படி நடந்துட்டு உன்கிட்டே வந்து வேற மாதிரி ப்ளே பண்ணிட்டா!

''நல்லவேளை... இப்பவாவது உனக்குப் புரிஞ்சுதே! பாட்டி தான் ரொம்பக் கவலையா இருந்தாங்க!''

ஒரு பெருமூச்சுடன் கூறியவனை இடைமறித்தவள், ''பாட்டிக்கு எல்லாம் தெரியும்! அவங்கதான் என்னை



இங்கே அனுப்பினாங்க! என் பர்த்டே அன்னிக்கு ஹோட்டல்லே உங்க காதலை அந்தப் பெண் ஏத்துக்கிட்டான்னு பாட்டிகிட்ட சொன்னப்ப அது சுகந்திதான்னு நான் நினைச்சேன்!

''என்னா என்கிட்டே அப்போ நீங்க உங்க காதலை வெளிப்படுத்தலையே?''

யோசனையுடன் கூறியவளுடைய நாசியைப் பிடித்துச் செல்லமாகத் திருகியவன், ''வெளிப்படுத்தலையா?

''அடக் கடவுளே! என் வார்த்தைகள் ஒவ்வொண்ணும், கண் பார்வை, அந்த பர்த்டே பொக்கே எல்லாமே என் காதலைத்தானே உன்கிட்ட சொல்லுச்சி. சரியான ஒரு தத்தியை லவ் பண்ணியிருக்கேன் நான்!'' போலியாக வருத்தினான்!

''ஆமாம்! நான் ஒரு தத்திதான்! உங்க பேச்சு, பார்வை, உடல் மொழி எல்லாமே புரிஞ்சாலும், அறிவு மட்டும் அதை நம்ப மறுத்தது!

''என்னா சுகந்தி சொன்ன ஒரே வார்த்தை நீங்க ஒரு... சரி... அதுதான் எனக்குள்ளே பேயாட்டம் ஆடிட்டிருந்தது!

''என்னால எந்தக் குற்றத்தையும் மன்னிக்க முடியும்! ஆனா தன் இணைக்கு மனசாலயும் உடம்பாலயும் செய்யற துரோகத்தை மட்டும் மன்னிக்கவே முடியாது!''

''அது என் சின்ன வயசுல நான் பட்ட காயத்தால வந்த ஒரு வெறித்தனமான கோபம்!

''ஆனா நேத்து நீங்க என் ரூமுக்கு வந்து பேசினது என் மனசுலே சம்மட்டி அடியா உரைச்சது!

''நான் பெரிய தப்பு பண்ணினது புரிஞ்சது! உங்களை நம்பாம யாரோ ஒருத்தி சொன்னதை எப்படி நம்பினேன்... என் மேலேயே வெறுப்பு வந்தது! உங்களோடப் பேசக் கிளம்பினப்பதான் சுகந்தி பேசினா.''

சட்டென்று விறைத்தது அவன் உடல்!

"என்ன சொன்னா?" வெறுப்புடன் கேட்டான்.

"ரொம்ப வருத்தப்பட்டு மன்னிப்பு கேட்டா! சாரி சொன்னா! அவளுக்கு இப்ப கல்யாணம் முடிவாகியிருக்காம். வேலை...?" மெல்ல நிறுத்தினாள்.

"நோ! என்னால அவளை திரும்ப சேத்துக்க முடியாது! வேணும்னா என் ஃப்ரெண்டோட கன்சர்னிலே சொல்லி வைக்கிறேன்!" அவன் உறுதியாக முடித்தான்.

"தேங்க் யூ ஆதவ்!" மெல்ல முணுமுணுத்தாள் அவள்.

"இப்போ மத்தவங்களைப் பத்தி எதுக்கு? எவ்வளவு நாள் பிரிஞ்சிட்டோம்... அதுக்கு உன்கிட்ட வட்டியும் முதலும் நான் வசூலிக்க வேண்டாமா?"

வேட்கையுடன் அவளைத் தழுவி இதழ் முத்துக்களைக் கோர்க்க ஆரம்பித்தான்.

இதழ்த்தேனை பருகிய வண்டாய் அவன் கிறங்கியிருக்க, அங்குலம் விடாமல் தேகம் சிலிர்த்தது ப்ரத்யுஷாவிற்கு!

காமன் அம்புகள் அவனுள் காதல் தீயை மூட்ட வெந்து தணிந்தது அவன் மோகம்!

இன்று அவன் தோள் சாய்ந்த அந்த இணையைப் பார்த்தபோது ஆதவனுக்கோ, முதல் மோட்சமே கிடைத்த உணர்வு!

அவன் மனதிற்குள் விஸ்வரூபமெடுத்து வியாபித்திருந்தாள் அவள்.

அருவிச் சாரல் மெல்லிய வாடைக் காற்றாய் பரவி மரங்களுக்கு மெல்லிய ஆடை சூட ஆரம்பித்திருக்க, இரு அன்றில்கள் அவர்களைப் பார்த்த வெட்கத்தில் சிறகடித்துப் பறந்தன!